www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

දිනමුරසු වාරමලර්

பக்கம் 20

நவம்.28-டிசம்.04.1993 ரூபா 8/50

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 27



## பிரபா பயன்படுத்திய கொப்பேகடுவவின் இராணுவ தந்திரம்

—எக்ஸ்ரே ரிப்போர்ட்



முத்தையா முரளிதரன்
—முதலிடம்—
ஸ்போர்ட்ஸ் - பக் 19

## சூரசங்காரம்

ராஜதந்திரியின் அரசியல் அலசல்

உலக ரவுண்டப்

நகர ரவுண்டப்

பாப்பா முரசு

ஸேமடன் ஸ்பெசல்



தேனீக்களின் படையெடுப்பு
திடுக் செய்தி

சிறுகதைகள்—
கவிதைகள்
புதுமைத்தொடர்

## மற்றும் பல சுவையான தகவல்கள்

கூடு - சுவை - சுவாரசியம் அதுதான் தினமுரசு

# முரசம்

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.

பூநகரியில் பாரிய மோதல்
நடந்து முடிந்திருக்கிறது.
வெற்றி-தோல்வி யாருக்கு
என்று
விவாதங்களும் நடந்து கொண்டிருக்கின்றன.

கைப்பற்றிய ஆயுதங்களை
புலிகள் எண்ணிக்கொண்டிருக்கிறார்கள்.
பூநகரி கையை விட்டுப் போகவில்லை
என்று படையினர் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

இரு தரப்பிலுமாக
ஆயிரம் பேருக்கு மேலே
யுத்த அரக்கனின் பசிக்கு
தீனியாகியிருக்கிறார்கள்.

"கண்ணின் மணிகளே காணாமல் போனீர்களே"
என்று பெற்றவர்கள் கண்ணீர் சிந்துகிறார்கள்.
யுத்தத்தில் தீவிரமாய் இருப்பவர்கள்
இழப்புக்கள் பற்றி
கவலைப்படுவதாகக் கண்ணுக்குத் தெரியவில்லை.

மறுபுறம்,
யுத்தம் எங்கோ நடந்துகொண்டிருக்க
அவலை நினைத்து உரலை இடிப்பதுபோல
விமானங்கள் வீசிய குண்டுகள்
தேவாலயங்களிலும், வைத்தியசாலைப் பகுதியிலும்
இலக்குத் தவறி விழுந்து
யுத்தத்தில் பலியானோர் கணக்கில்
பொதுமக்களையும் சேர்த்திருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் மிகப் பழமைவாய்ந்த
சென்ஜேம்ஸ் ஆலயம்
சேதமடைந்துள்ளதாக செய்திகள் வருகின்றன.

"மேசைக்கு கீழே ஒளித்தேன்
தரையிலே விழுந்து படுத்தேன்"
என்று யாழ் அரச அதிபரே
பேட்டி கொடுத்திருக்கிறார்.

யாழ் அரச செயலகத்தின் அருகே
புலிகளின் பொலிஸ் துறை தலைமையகம்
இதுவரை காலமும் இயங்கிவந்தது.
அரச செயலகத்தின் அருகே இருந்தால்
தாக்குதல் நடத்த முடியாது என்று
அவர்கள் கருதியிருக்கலாம்.

தமது முகாம்களுக்கு தாக்குதல் நடந்தால்
தாம் மட்டுமே தனித்து பாதிக்கப்படாமல்
பாதிப்பை பொதுவானதாக்கும் முறையிலே
புலிகள் தமது முகாம்களை
அமைத்துள்ளதையும் அவதானிக்க முடிகிறது.

ஒரு வகையில் அதனை
புலிகளின் பொறி என்றும் சொல்லலாம்.
அரச விமானங்கள் வீசும் குண்டுகள்
பொதுமக்களின் வெறுப்பை சம்பாதிக்க
புலிகள் வைத்துள்ள பொறிகள்.
ஆனால்-படையினர்
மக்களின் வெறுப்புக்கள்,
அவற்றால் தோன்றும் விளைவுகள்
பற்றி அக்கறைப்படுவதாக தெரியவில்லை.

அப்படியாக இருந்தால்
தேவாலயம் மீது-
அதுவும் வானில் இருந்து பார்த்தால்
தெளிவாகத் தெரியக்கூடிய
வழிபாட்டுத்தலம் மீது
எப்படி குண்டு விழுந்திருக்கமுடியும்?

எங்கும்- எந்தவொரு
யுத்தத்திலும் இழப்புக்கள் பொருட்டல்ல.
ஒவ்வொரு தரப்பும்
மறு தரப்பின் பக்கம் இழப்பு அதிகம்
என்று சொல்வதிலும்,
இயலுமானவரை கொல்வதிலுமே
வேகம் காட்டுவது வழக்கம்.

இந்த யுத்தம்
எங்கே போய் முடியும்?
எப்படி முடியும்?
என்ற கேள்விகளோடு
மடியில் மரணத்தைச் சுமந்தபடி
தமிழ் மக்கள்
தவித்துக்கொண்டிருக்கிறார்கள்.

தீர்வுகள் காண எத்தனையோ வழி இருக்க
திசை தெரியாமல்
கல்சுவரில் போய் மீண்டும் மீண்டும்
தலையை மோதிக்கொண்டிருக்கிறோம்.
இரத்தம் வடிகிறது.
எவருமே கவனிக்கவில்லை.

சிங்கள, தமிழ், முஸ்லிம் இளைஞர்களின்
இரத்தம் வீணடிக்கப்படுகிறது.

எந்தத்தரப்பில் இழப்பு அதிகம்
என்பதல்ல பிரச்சனை.
யாருக்குமே முடிவு தெரியாத யுத்தத்தில்
மனித உயிர்கள்
அநியாயமாதல்தான் சோகம்.
அதுதான் வேதனை.

அரசும்-புலிகளும்- தமிழ் அமைப்புக்களும்
தமது தரப்பை நியாயப்படுத்த
காரணங்களையும், வாதங்களையும்
கணக்கற்ற ரீதியில் அடுக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால்-எவருமே
மக்களின் கருத்தென்ன- விருப்பமென்ன என்று
அறியவோ, அதைச் சொல்ல அனுமதிக்கவோ
இன்னும் தயாராக இல்லை.
எனவே
பிரச்சனைகள்
பெரு நெருப்பாய் வளர்ந்து கொண்டிருக்கின்றன.
இந்த நெருப்பு உள்ளவரை
மனித உயிர்கள் கருகியபடிதான் இருக்க வேண்டும். ■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை,
என்றென்றும் அன்புடன்
ஆசிரியர்.

தினமுரசு போன்: 820265

## கவிதைப்போட்டி இல-24

வந்து குவிந்தவற்றில் வாகை சூடியதும், வரவேற்கப்பட்டவையும்.

### பரிசுக்குரிய கவிதை

என் பிள்ளைகளே!
நீங்கள்
உடைத்தவை
பானைகள் என்றால்
உருவாக்கித் தந்திருப்பேன்.
உங்கள் மோதலில்
உடைந்து போனது
ஒற்றுமை என்னும்
யானைப் பலம்.
உடைப்பது சுலபம்
உருவாக்குவது....?

ஜோன் ராஜன்
கொழும்பு-5.

### பாராட்டுக்குரிய கவிதைகள்

**வாழ்க்கைச் சக்கரம்**
வாழ்க்கைச் சக்கரம்
சுழல்கிறது.
வாழ்வு இன்னும்
விடியவில்லை.
கு. கவிதா-வவுனியா.

**வென்று விட்டார்!**
படைப்பதிலே- நீயோ
பரமனையும் தோற்கடிப்பாய்!
அழிப்பவரோ- இங்கே
அசுரனையும் வென்றுவிட்டார்!
பரீஹா-ஏ.ஜுனைது-எறாவூர்-06.

**முயற்சி**
வயது என்னை
ஓய்வெடுக்கச் சொல்கிறது.
வயிறு என்னை
வலிந்து வாழச் செய்கிறது.
ஏ.எஸ்.சமீம்-மூதூர்-05.

நந்தவனத்து ஆண்டி
நாசம் செய்தது போல
சொந்த வனத்துப் பிள்ளை
சோதனை தந்தானோ
பானையே கதியென்று
வேதனை தந்தானோ!
ஹபீலா-புத்தளம்.

**குஷ்பூ பானை**
"குஷ்பூ பானை"
பெயர் வைச்சாலும்
வைத்தேன்.
வியாபாரம்
தூளுங்க.
கே.துரைரட்ணம்
வவுனியா.

**சவால்**
பயிற்சியின் கைவண்ணத்திற்கு
சவால்விட முடியுமா?
வறுமையும், முதுமையும்?
லரீதா நஸீர்
மாத்தளை.

**களிமண்**
மூலப்பொருளுக்கு
பஞ்சமில்லாத தொழில்!
இன்று....
பலரது தலையிலும்
அதுதானே உள்ளது!
ஆர். பாலகிருஷ்ணன்
மாத்தளை.

**நம்பிக்கை**
இந்த
தோண்டி
உள்ள மட்டும்
என்
தோணியும்
செல்லும்!
ஐ.என்.எம். நிஹ்ரீர்
புத்தளம்.

"உழைத்து உழைத்து உருகுலைந்து
-யாக்கை
உருவாக்கும் பாத்திரம் போல்
உடைவதோ உங்கள் வாழ்க்கை.."
அமிர்த-சந்திரபாலன்-திருகோணமலை.

**யார் வருவார்**
சேனைகள் மோதுகிறது
பிணங்கள் குவிகிறது
பானைகள் உருவாக்கி
பாவனைக்கு யார் வருவார்?
ந.ரதீஸ்வரன்
மட்டக்களப்பு.

**தன்னம்பிக்கை**
வாயும் வயிறும்
வேறு.
இவள்
யாருக்கும் பாரமில்லை
பாரு.
திருமலை ஜானா.

பானைகள் பல செய்து
பயனென்ன?
பாரில் பல்லினம்
மாயுதே
உணவின்றி.
-யாரோ-

**தன்னம்பிக்கை**
தள்ளாத வயதிலும்
தளராத தாய்மனம்.
சுதா கிருஷ்ணன்
கல்லாறு.

**நிர்க்கதி**
பயங்கர வாதத்தில்
குடும்பத்தை
பறிகொடுத்த
நிர்க்கதி நான்.
பாலமுனை வாஹிட்.

**சக்கரம்**
வனைதல் சக்கரம்
சுழல்வதால்
வாழ்க்கைச் சக்கரம்
அசைகிறது.
பி.சிவநாதன்
வவுனியா.

**யாருக்கு?**
அருந்துவதற்கே நீரின்றி
அழிந்துபோன இம்மானிட
தேசத்தில் மீண்டும்
யாருக்காக இவ்வுற்பத்தி?
அனூஸியா ஏ.ஹஸன்
உக்குவெல.



**சுட்டபின்பு**
பச்சைமண் விலைபோவது
எப்போது?
சுட்டபின்னு.
அதுபோலவே விலை போகிறது
மனித குலம்
இப்போது.
தேவ இரக்கம் இளங்கோ
வந்தாறுமூலை.

**எதற்கு?**
அரிசி விலை
அதிகரிக்கையில்
அதிகமான
பானைகள்
எதற்கு?
பி. விறைனர்
மட்டுநகர்.

**புதுமைப் பெண்!**
இளமையில் கற்றதை!
வறுமை பிணி போக்க!
முதுமையில் கைவாளும்!
மூதாட்டியே, நீ!
பாரதி கண்ட...
புதுமைப் பெண்ணோ?
எஸ்.ஜீ.மனோ
ஹப்புத்தளை.

**அழிவுகள்**
கற்காலம்
நோக்கிச் செல்கிறது
தமிழ்மண்!
கைத்தொழில்
செய்ய அங்கிருப்பதோ
முதியபெண்!
எம்.அரவிந்தன்
பேராதனை.

**வாழ்க்கை**
அணையாப் போரில்
அனைத்தையும் இழந்து
வனைதல் தொழிலால்
வாழ்க்கை ஓடுதோ?
ச.மகாலிங்கம்
வெலிமடை.

**துணை**
உறவுகள் பல
உன் கையே
உனக்குத்
துணை.
ஏயாரெம் மர்சூக்
வெள்ளைமணல்.

எரிந்து கொண்டிருக்கும்
நம் தேசத்தில்
தீயையா தேடுகின்றாய்
இதனைச் சுடுவதற்கு?
க.கிரிதர்
மிறாவோடை (தமிழ்)

## கவிதைப் போட்டி இல-27



*சிந்தனைகள் சூழலைப் பிரதிபலிக்கட்டும். சொல்லும் கருத்தில் தெளிவும், சுருக்கமும் இருக்கட்டும். தபாலட்டையில் உங்கள் உணர்வினைப் பொறித்து எமக்கு அனுப்புங்கள். சிறந்த கவிதை ஒன்றுக்கு பரிசு ரூபா 100/=. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 04.12.1993.*

-முகவரி-
கவிதைப் போட்டி இல: 27
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்,
கொழும்பு-5

## வாசக(ர்)சாலை

**அதிசயமான அவசிய முயற்சி**

அரசியல் செய்திகளும், கண்ணோட்டங்களும் உண்மையில் அதிரடிதான். இன்றைய காலகட்டத்தில் இப்படியொரு முயற்சி அதிசயம்தான். அவசியமும்கூட என்பதில் ஐயமில்லை.

கே.றொனால்ட்-கொழும்பு-07.

•

25 வெள்ளிவிழா முரசு அட்டகாசம். அட்டைப்படம் முதல் ரசிகன் வழங்கிய கொல்லாமல் சாகாதேவரை அட்டகாசம் தான். கையைக் கொடுங்கள் சார்.

இ.ரஞ்சனி-கண்டி.

•

இலவச இணைப்பு அளவில் சிறியதாக தெரிந்தாலும் கதை அபாரம். இலவச இணைப்பு தந்து முரசுக்கு நன்றிகள்.

பி.பரமேஸ்-மட்டக்களப்பு.

•

அதிரடி அய்யாத்துரையின் இலக்கிய வரிகள் சொல்லில் அடங்காது. ரசிகனின் ஜெயந்த் என்னை ஏமாற்றவேயில்லை.

ஜெயந்தி.ச-பம்பலப்பிட்டி.

•

25வது வெள்ளிவிழா முரசு சூப்பர்.

சாந்தினி சந்திரன்-வத்தளை.

•

அன்பான முரசே!
உன்னைக் கண்ட அந்த நாளை வாழ்த்துகின்றேன். உன்னிடம் உலகத்தையே கண்டு கொண்டேன். என்றென்றும் உன்னுடனேயே இருக்க விரும்புகின்றேன். என்னை ஒரு போதும் தனிமைத்தீயால் தவிக்கவிடாதே! தினமும் அணைத்து மகிழ நினைத்து பாடும் என்னைத் தவழ விரைந்துவா!
உன் உறவு மழையில் நனையத்துடிக்கும்

சசிகரன்-திருகோணமலை.

•

மிகக் குறுகிய காலத்திற்குள் இலங்கை பத்திரிகைத் துறையில் பல சாதனைகளைப் படைத்துவிட்ட வெற்றி முரசாம், தினமுரசின் சாதனை இதழுக்கும், இத்தகைய ஒரு வித்தியாசமான பத்திரிகையை இலங்கையின் இலக்கியத்துறைக்கு அறிமுகப்படுத்திய ஆசிரியர் குழுவிற்கும் எனது பாராட்டுக்கள். விரைவிலேயே 100வது வெற்றி முரசிலும் சந்திப்போம்.

அன்புடன்-எம்.சுரேஷ்.

•

திக்கும் தீஞ்சொல் மலரே தினமுரசே!
எத்திக்கும் எழிலொடு செல்லும் இனியமுரசே!
புத்திக்கூர்மையுடன் நீ சென்று!
பத்திரிகை உலகில் பல சாதனை படைத்துவிட்டாய்!
இருபத்தைந்தாவது இனிய வார விழாவைக் கேட்டு!
கருவிலிருக்கும் குழந்தைக்கும் மகிழ்ச்சியே!
திரு மகளாய் திகழ்கின்ற தினமுரசே!
அருமையாக நீவளர ஆசி கூறுகிறேன் வாழ்க!

துன்னையூர்- ராம்.தேவலோகேஸ்வர சர்மா.

•

ஏ! முரசே, நீயோ என்றும் எண்ணிலடங்கா வாரமலர், என்னை நீ கவர காதல் பண்ணியதோ எந்த மலரும் படைக்க



வொண்ணா சரித்திரம். என் நெஞ்சத்தில் நீயே என்றும் அழியா சித்திரம். கவிதைகளையும், சிறுகதைகளையும், உலக நடப்புக்களையும் சுவையாக தருவதில் உன் எழுச்சி சமுத்திரம்.
முரசே, நீ வாழ்க, உயர்க என்றும்.

எம்.டீ.எம்.பாரிஸ்-மாவனல்லை.

•

தினமுரசே! நீ சுவையான அம்சங்களை சுமந்து வரும் போதெல்லாம் மனம் மகிழ்ச்சியுறும். நீ வாரா வாரம் பாப்பாமுரசு பகுதியை சுமந்து வரும்போது என் மனம் மகிழ்ச்சியில் கொந்தளிக்கிறது.

எம்.எம்.நிஸ்வான்-மொரகல.



## இது எப்படி?

குழாய்க்குள் நாய் ஒன்று புகுந்துவிட்டதோ? அது இத்தனை நீளமோ? என்றுதானே யோசிக்கிறீர்கள். அப்படியொன்றுமில்லை. குழாய்க்குள் என்ன இருக்கிறது என்று ஆராய்ச்சி நடத்த இரு நாய்கள் உள்ளே புகுந்தன. ஒன்று வெளியே வருகிறது. மற்றது உள்ளே செல்கிறது. அந்த நேரம் பார்த்து கமரா கிளிக் செய்துவிட்டது.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

## வாழ்த்து அட்டையில் -சேதமான தேவாலயம்!

கிறிஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு யாழ் குடாநாட்டில் வாழ்த்து அட்டைகள் அச்சடிக்கப் படுகின்றன.

இம்முறை வாழ்த்து அட்டைகளில் விமானக் குண்டுவீச்சினால் சேதமடைந்த யாழ்ப்பாணத்தில் உள்ள புனித யாகப்பர் தேவாலயத்தின் புகைப்படம் வெளியிடப்படவுள்ளது.

யாழ்குடாநாட்டில் உள்ள மிகப் பழைமை வாய்ந்த தேவாலயங்களில் ஒன்று புனித யாகப்பர் ஆலயம் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளையில் யாழ்குடாநாட்டில் உள்ள மதத்தலைவர்கள் சிலர் குண்டு வீச்சுக்களைக் கண்டித்து அறிக்கை ஒன்றில் கூட்டாக கையெழுத்திட்டுள்ளனர்.

"இலக்குத்தவறி தாக்குதல் நடத்தப் பட்டதாக கூறுவதை நாம் நம்பவில்லை" என்று அறிக்கையில் கூறியுள்ளனர்.

நல்லை ஆதின முதல்வர், யாழ் மாவட்ட கத்தோலிக்க ஆயர், தென்னிந்திய திருச்சபை ஆயர் ஆகியோரே அந்த அறிக்கையில் கையொப்பம் இட்டுள்ளனர். ஜனாதிபதி டி.பி. விஜயதுங்க அவர்களுக்கும் அறிக்கை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமையும் யாழ் அரச செயலகத்திற்கு அருகில் புலிகளின் காவல்துறை அலுவலகம் அமைந்துள்ள பகுதியில் குண்டு வீச்சுக்கள் நடைபெற்றதாகக் கூறப்படுகிறது. அதில் பொதுமக்களில் இருவர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப் படுகிறது. அதேதினத்தில் கட்டுவன் பகுதியிலும் குண்டுவீச்சு இடம்பெற்ற தாகக் கூறப்படுகிறது.

# கிழக்கில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள்!

# தமிழ்-முஸ்லிம் கட்சிகள் தடுமாற்றம்!!

## பொது உடன்பாடு ஏற்படும் சாத்தியம் இல்லை

கிழக்கு மாகாணத்திலும், வவுனியாவிலும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை நடத்தப் போவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.



"கிழக்கில் தேர்தல் நடத்தக் கூடிய சூழல் இல்லை. எனினும் தேர்தல் நடைபெற்றால் கலந்து கொள்வோம்.

-எம்.எச்.எம்.அஷ்ரப்-"

வேட்பு மனுத்தாக்கலுக்கான திகதியும் குறிக்கப்பட்டது.

அதனையடுத்து தமிழ்-முஸ்லிம் அரசியல் கட்சிகள் மத்தியில் தடுமாற்ற மான நிலமை ஏற்பட்டிருக்கின்றது.

கிழக்கில் இப்போது தேர்தல் நடத்தக் கூடிய சூழல் இல்லை என்றே அனைத்து தமிழ்-முஸ்லிம் அரசியல் கட்சிகளும் கூறியுள்ளன.

எனினும் அரசாங்கம் தேர்தலுக்கான அறிவிப்பை வெளியிட்டுவிட்டதனால் அக்கட்சிகளின் வட்டாரங்களில் குழப்ப மான நிலை காணப்படுகிறது.


தேர்தலை புறக்கணித்தால் அரசாங் கத்தோடு முரண்படும் நிலையே ஏற்படும்.

வடக்கு-கிழக்கில் இராணுவத் தினரோடு இணைந்து செயற்படும் தமிழ் அரசியல் கட்சிகள் ஒரு முரண்பாடான சூழலை சந்திக்க விரும்பவில்லை.

அதே சமயம் இந்திய அமைதிப்படை இலங்கையில் இருந்தபோதும், ஏனைய தமிழ் கட்சிகள் தேர்தலில் கலந்து கொள்ளாத போதும், இரு தமிழ்க் கட்சிகள் மட்டுமே வடக்கு-கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் கலந்து கொண்டன. போட்டி யின்றி அக்கட்சிகளின் வேட்பாளர்கள் தெரிவும் செய்யப்பட்டனர்.

அதில் ஒரு தமிழ் கட்சி இப்போது உள்ளூராட்சித் தேர்தலை புறக்கணிக்கப் போவதாக அறிவித்துள்ளது.

தமிழ்-முஸ்லிம் கட்சிகளிடையே ஒருமித்த முடிவு காணப்படக்கூடிய சூழல்



"தவறான நபர்கள் தேர்தல் மூலமாகத் தெரிவாகி விடக்கூடாது என்பதால் தேர்தலில் போட்டியிடுவது பற்றி ஆராய்கிறோம்.

-டக்ளஸ் தேவானந்தா-"

இல்லை என்று அரசியல் கட்சிப் பிரமுகர் ஒருவர் கருத்துத் தெரிவித்தார்.

தமிழ்கட்சிகள் பொது உடன்பாட்டின் அடிப்படையில் தேர்தலில் கூட்டாகப் போட்டியிடும் சாத்தியங்கள் குறைவாகவே தெரிகின்றன.

கடந்த பாராளுமன்றத் தேர்தலில் பொதுச் சின்னத்தில் போட்டியிட்ட தமிழ் கட்சிகள் சில தேர்தல் முடிந்ததும் ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டிக் கொண்டன.

இப்போதும் அது தொடர்பான பிரச்சனைகள் நீடித்து வருகின்றன.

எனவே பொதுச் சின்னம், பொது வேட்பாளர் பட்டியல் என்ற அடிப்படை யில் தமிழ் கட்சிகள் மீண்டுமொரு தேர்தலை சந்திக்க தயக்கம் காட்டுகின்றன.

தனித்துப் போட்டியிட்டால் வாக்குகள் சிதறுவதன் மூலம் தமிழ் அரசியல் கட்சிகளின் பிரதிநிதித்துவம் வெகுவாகக் குறையும் என்று சில அரசியல் பிரமுகர்கள் வேதனை தெரிவிக்கின்றனர்.

முஸ்லிம் காங்கிரஸ் தேர்தலில் கலந்து கொள்ளும் என்றே நம்பப்படுகிறது.

இலண்டன் பி.பி.சி வானொலிக்கு அக்கட்சியின் தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரப் அண்மையில் ஒரு பேட்டியளித்திருந்தார்.


தேர்தல் நடத்தக்கூடிய சாத்தியம் கிழக்கில் இல்லை என்றே அவர் கருத்துக் கொண்டுள்ளார். ஆயினும் தேர்தல் நடந்தால் தமது கட்சி கலந்து கொள்ளும் என்ற கருத்துப்படவே அவரது பேட்டி அமைந்திருந்தது.

ஈ.பி.டி.பி செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவும் தனது பேட்டியில் அவ்வாறான கருத்தையே வெளியிட்டார். தவறான சக்திகள் தேர்தலின் மூலம் தெரிவாகிவிடாமல் தடுப்பதும் தாம் தேர்தலில் கலந்து கொள்வதற்கு ஒரு காரணம் என்று ஈ.பி.டி.பி கூறுகிறது.

ஈ.பி.ஆர்.எல்.எவ். தேர்தலில் கலந்து கொள்ளப் போவதில்லை என்று பி.பி.சி பேட்டியில் அக்கட்சியின் செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இதே வேளையில் தேர்தலை பின்போட அரசைக் கோரும் முயற்சிகளும் நடந்து வருகின்றன.

ஆனால், பாதுகாப்புப்படை மட்டத்தில் தேர்தலை நடத்த வேண்டும்



"கிழக்கில் தேர்தல் நடத்துவதற்கு இது தருணமல்ல. எமது கட்சி தேர்தலில் போட்டியிடாது.

-சுரேஷ் பிரேமச் சந்திரன்-"

என்ற கருத்தே மேலோங்கியிருக்கிறது.

கிழக்கிலும், வவுனியாவிலும் தேர்தல் நடத்துவதற்கான பாதுகாப்பு முன்னேற் பாடுகளில் படையினர் இறங்கிவிட்டனர்.

இந்நிலையில் தேர்தலை ஒத்திவைக்க அரசாங்கம் முன்வருமா என்று சந்தேகம் எழுப்பப்படுகிறது.

கிழக்கிலும், வவுனியாவிலும் உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் கலந்து கொள்ள சில சுயேச்சைக் குழுக்களும் தயாராகிவருகின்றன. அக்குழுக்கள் சிலவற்றுக்கு இராணுவத்தினரும் ஊக்கம் கொடுத்துவருவதாகவும் கூறப்படுகிறது.

தமிழ் கட்சிகள் நிறுத்தப்போகும் வேட்பாளர்கள் பிரச்சனைக்குரியவர்களாக மக்களால் கருதப்பட்டால் சுயேச்சைக் குழுக்களுக்கு சாதகம் ஏற்படலாம் என்று கருதப்படுகிறது.

## நத்தை வேக தபால் சேவை!

## துரித சேவையாக மாறுவது எப்போது?

(நிந்தவூர் நிருபர்)

நிந்தவூரைச் சேர்ந்த செய்தியாளர் ஒருவர், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன செய்திப் பிரிவில் நடைபெற்ற நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டார்.

கடந்த 15.11.1993ம் திகதி பிற்பகல் ஒருமணிக்கு நேர்முகப்பரீட்சைக்கு வருமாறு ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தினால் அனுப்பிவைக்கப்பட்ட அழைப்புக்கடிதம் உரிய செய்தியாளருக்கு, நேர்முகப்பரீட்சை முடிந்த மறுதினம் - 16.11.1993ம் திகதி தான் கிடைத்தது.

10.11.93ம் திகதி கொழும்பில் தபாலக முத்திரையிடப்பட்டு அனுப்பப்பட்ட இக்கடிதம் நிந்தவூர் தபாலகத்தை வந்தடைவதில் ஏற்பட்ட தாமதத்தால் உரிய நேர்முகப் பரீட்சைக்கு மேற்படி செய்தி யாளரால் செல்ல முடியவில்லை.

நிந்தவூர்ப் பகுதிக்கான தபால் சேவை யின் இந்த "நத்தை வேகம்" காரணமாக செய்தியாளர் ஒருவரே இப்படி பாதிக்கப் பட்டாரென்றால், பொதுமக்கள் நிலை எப்படியிருக்கும்?

குறிப்பாக கொழும்பிலிருந்து வரும் தபால் பொதிகள் நிந்தவூரை வந்தடைவதில் பெரும் தாமதங்கள் ஏற்பட்டு வருகின்றன.

இதனால் நேர்முகப்பரீட்சைகளுக்கு அழைக்கப்படுபவர்கள் உட்பட பொது மக்களும் பெரும்பாதிப்புகளுக்கும் அவலங் களுக்கும் உள்ளாகி வருகின்றனர்.

அம்பாறை மாவட்ட தபால் அத்தியட்சகரின் நிருவாகத்திற்குட்பட்ட நிந்தவூர் தபாலகம் தவிர ஏனைய சம்மாந்துறை, காரைதீவு, சாய்ந்தமருது, கல்முனை, அக்கரைப்பற்று முதலான பகுதிகளுக்கான கொழும்பு தபால் பொதிகள் தாமதமின்றி வந்தடைகின்றன என்பதும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

நிந்தவூருக்கான கொழும்புத் தபால் பொதிகள் காரைதீவு தபாலகத்தில் இறக்கப்பட்டு, மட்டக்களப்பிலிருந்து வரும் தபால் பஸ் மூலமே நிந்தவூரை வந்தடைகின்றது.

இந்த தபால் பஸ் அடிக்கடி மட்டக்களப்பிலிருந்து தாமதித்துவரும். அல்லது வராமலே நின்றுவிடும். இது தான் நிந்தவூர் தபால் பொதிகளின் தாமதத்திற்கு முக்கிய காரணமாகும்.

இதை விடுத்து கொழும்பு தபால் பொதிகளை அவை வந்தடையும் தினமே நிந்தவூர் தபாலகத்தில் ஒப்படைக்க ஆவன செய்யுமாறு சம்பந்தப்பட்ட உயரதிகாரி களுக்குப் பல தடவைகள் முறையிட்டும் பலன் பூஜ்யமாகவே இருக்கிறது.

நிந்தவூரிலிருந்து கொழும்பு மற்றும் பிற இடங்களுக்கு அனுப்பப்படும் தபால்களும் இப்படித் தாமதித்தே சென்றடைகின்றன.

இந்த நத்தை வேக தபால் சேவை சீரான துரித சேவையாக மாறுவது எப்போது? என்று மக்கள் அங்கலாய்க் கின்றனர்.

## கால எல்லையை நீடிக்கக் கோரிக்கை!

(திருகோணமலை நிருபர்)

"இலங்கைத் துறைமுக அதிகார சபையின் வெற்றிடங்களை நிரப்புவதற்கான முடிவுத்திகதியின் கால எல்லையைத் தயவு செய்து நீடிக்கவும்."

இவ்வாறு கோரும் கடிதமொன்று கப்பல்துறை இராஜாங்க அமைச்சர் எம்.ஈ.எச். மகரூப் அவர்களுக்கு வெருகலம்பதி அறங்காவலர் குழுவின் முன்னாள் செயலர்திரு. க.தேவகடாட்சம் அவர்களால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி விளம்பரம் சீரற்ற நிலை காரணமாக கட்டைபறிச்சான், மல்லிகைத்தீவு, ஈச்சிலப்பற்றை, அவ்வைநகர் போன்ற இடங்களிலுள்ள மக்களைச் சென்றடையவில்லை. எனவே அவர்களுக்கும் மேற்படி பதவிகளுக்கு விண்ணப்பிக்குமுகமாக கால எல்லையை நீடிக்குமாறு இக்கடிதத்தில் கேட்கப்பட்டுள்ளது.

மேற்படி வெற்றிடங்களுக்கு விண்ணப்பம் அனுப்ப வேண்டிய கடைசித்தினம் 10.11.93 உடன் முடிவடைந்தமை குறிப்பிடத்தக்கது.

## யாழில் அரச அலுவலகங்களில் புலிக்கொடி

## புலிகள் கட்டளை

யாழ்குடா நாட்டில் புலிகள் அமைப்பினரால் "மாவீரன் தின" கொண்டாட்டங்கள் மிகப் பெரிய அளவில் அனுஷ்டிக்கப்படுகின்றன.

யாழ்குடாநாட்டில் உள்ள அரச அலுவலகங்கள், பாடசாலைகள், சனசமூக நிலையங்கள் என்பவற்றில் கடந்த 2ம் திகதி புலிச் சின்னம் பொறித்த கொடிகள் ஏற்றப்படவேண்டும் என்று புலிகள் அறிவிப்புச் செய்தனர். அவ்வாறே கொடிகள் ஏற்றப்பட்டன.

சிவப்பு-மஞ்சள் நிற கொடிகளால் யாழ்ப்பாண வீதிகள் அலங்கரிக்கப் பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்திலுள்ள பாடசாலை களில், பலியான புலிகள் அமைப்பு உறுப்பி னர்களுக்கு அஞ்சலி செய்யப்படவேண்டும் என்றும், பாடசாலை முகப்புக்களில் மாவீரர் நினைவு வளைவுகள் கட்டப்பட வேண்டும் என்றும் புலிகளால் கூறப்பட்டது.

யாழ்ப்பாணத்திலுள்ள புலிகளின் வானொலியிலும் சிறப்பு நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்பட்டன.

புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரனின் பிறந்ததினம் நவம்பர் 26ம் திகதியாகும். அதனையும் உள்ளடக்கிய தாக புலிகளின் மாவீரர் தினம் நவம்பர் 21ம் திகதி முதல் 27ந் திகதி வரை அனுஷ்டிக்கப்படுகிறது.

## 646 பேர் பாதிப்பு 14 பேர் இறப்பு!

யாழ் மாவட்டத்தில் பரவிவரும் வாந்தி பேதியால் இதுவரை 646 பேர் பாதிப்படைந் துள்ளனர். 14 பேர் இறந்துள்ளனர் என்று ஒரு தகவல் தெரிவிக்கிறது.

யாழ் மாநகர சபை பகுதியிலும், சுழிபுரம், சாவகச்சேரி, மானிப்பாய் போன்ற பகுதிகளிலும் வாந்திபேதியால் பாதிக்கப்பட்டோர் தொகை அதிகமாகும்.

பெண்களே கூடுதலாகப் பாதிக்கப் பட்டுள்ளனர். வடமராட்சி பகுதியிலும் வாந்திபேதி பரவும் அறிகுறிகள் இருப்பதாகக் கூறப்படுகிறது.

## வீடுகளும் இருக்காது! ஓடுகளும் இருக்காது!!

(மன்னார் நிருபர்)

மன்னார் மாவட்டத்திலுள்ள தாராபுரம் கிராமத்தில் மக்கள் வசிக்காத பல வீடுகள் இருந்த இடம் தெரியாமல் போய்விட்டன. மேலும் பல வீடுகளில் கதவுகள், யன்னல்கள் எதுவுமே இல்லை.

சென்ற 1992ம் ஆண்டின் பிற்பகுதியில் இங்கு குடியேறிய மக்கள் எதுவித பிரச்சனையும் இன்றி வாழ்கின்றனர். எனினும் சுமார் 400 குடும்பங்கள் வரை அகதிகளாக வெளி மாவட்டங்களில் அவல வாழ்க்கை நடாத்துகின்றனர்.

இந்நிலை தொடர்ந்தால் வீடுகள் மட்டுமல்ல சொந்த காணிகளையும் இழக்க வேண்டி ஏற்படும் அபாயம் உள்ளது. தாராபுரத்திலுள்ள லெப்பை வீதியில் அமைந்து காணப்படும் வீடுகளும் உடைக்கப்படுகின்றன.

மன்னார்ப்பகுதியில் சீமெந்துக்கல் ஒன்றின் விலை 9 ரூபாவாகவும் ஓடு ஒன்று 15 ரூபாவாகவும் உள்ளது. எனவே பல வீடுகளில் ஓடுகள் கழற்றப்பட்டுள்ளன.

கல்லுகளும் உடைத்து எடுத்து, விற்றுவிட்டார்கள். இப்பகுதி மக்கள் வெகு விரைவில் இங்கு வந்து குடியேறா விட்டால் இங்குள்ள நூற்றுக்கும் அதிகமான வீடுகளில் ஓடுகளும் இருக்காது, வீடுகளும் இருக்காது என்று தராபுரம் கிராமவாசி ஒருவர் எமது நிருபரிடம் தெரிவித்துள்ளார்.

## பிரச்சனை இருக்கலாம்-பிளவு வராது!

இலங்கைத் தொழிலாளர் காங்கிரசுக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையே கருத்து வேறுபாடுகள் என்றும், அமைச்சர் தொண்டா மனமுடைந்துள்ளதாகவும் அரசியல் வதந்தி ஒன்று பரவியது.

வேறுபாடுகள் இருந்தாலும் உறவுகள் தொடரும். அதில் எவ்வித மாற்றமும் இல்லை என்று இரு கட்சிகளின் வட்டாரங்களும் தெரிவிக்கின்றன.

தனித்துவமான இரு கட்சிகள் அரசியல் உறவு கொண்டுள்ள போது முரண்பாடுகள் இருப்பது சகஜம் தான் என்றும், அவற்றை பெரிதுபடுத்தி சிலர் இலாபம் தேட முற்படுகின்றார் என்றும், தனது பெயரைக் குறிப்பிட விரும்பாத முக்கியஸ்தர் ஒருவர் முரசுக்கு தெரிவித்தார்.

## வெளியேறத் தடை

புலிகள் அமைப்பினர் தமது மாவீரர் தினக் கொண்டாட்டங்களை முன்னிட்டு யாழ்குடாநாட்டில் உள்ள மக்கள் அங்கிருந்து வெளியேறத் தடை விதித்துள்ளனர்.

கிளாலிப் படகுச் சேவையும் நிறுத்தப் பட்டுள்ளது.

விளம்பரப் பகுதி

SARIKA TEX
Ladies Tailoring
24 மணிநேரத்தில்
சாறி பிளவுஸ்
சல்வார் கமீஸ்
உங்கள் உடலமைப்புக்கேற்றபடி
நவீன முறையில் தைத்துக்கொள்ள
Hewa Shopping Complex
No. 69/5-1/1, 1st Floor,
Galle Road,
Dehiwela South.



மலையாள மாந்திரீகம்

உலகளாவிய ரீதியில் 27 வருடங்களாகத் தொடர்ந்து உண்மைச் சேவையாற்றி வரும் உலக மலையாள மாந்திரீகச் சக்கரவர்த்தி P.K.சாமி, எஸ்ஸோஸியேட் பிரைவேட் லிமிட்டெட் டாரின் சேவையில் கைரேகைகள், ஜாதகங்கள், மாந்திரீக ரீதியில் உங்கள் பிரச்சனைகளுக்கு நிவாரணம் பெற இன்றே எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள். தொழில் பிணக்குகளா? காதல் கிலேசங்களா? வசியங்களா? கணவர், மனைவி, குடும்பப் பிரச்சனைகளா? ஆஸ்த்துமா போன்ற தீராத நோய்களா? இரகசிய ஆண், பெண் நோய்களா? வெளியூர் வாய்ப்புப்பெற வேண்டுமா? என்ன குறை?

P.K. SAAMY
ASSOCIATE PVT. LTD.,
33, Daily fair Complex, NUWARA ELIYA.
Dial: 052-2508 & 3093
Celltel. 072-26088, 078-61933

COLOMBO BRANCH:
26, CHARLYMONT ROAD,
WELLAWATTA.
DIAL:01-583250. 078-71243 FAX: 0094-523093

ஆரம்ப மனுச் செய்பவர்களுக்கு, தற்கால பலாபலனைத் தங்கள் பிறந்த திகதி, மாதம் மாத்திரம் எழுதியனுப்பினால் தற்போதைய அல்லது கடந்த ஆண்டுகளின் பலனை இலவசமாக அனுப்புவோம். விஷேடமாக வெளிநாட்டு ஆடர்கள் உடன் கவனிக்கப்படும். வாரந்தோறும் சனிக்கிழமைகளில் நடைபெறும்; துர்க்கையின் அக்கினிக் குண்டல பூஜையில் கலந்து உண்மை அறியலாமே.

ரிஷி அஜமாமிச லேகியம்
(முஸ்லிம் முறைப்படி தயாரிக்கப்பட்டது)



இளமையின் விளைவுகளை அறியாமல் தவறு செய்ததினால் ஏற்படும் இடுப்பு வலி, அசதி, இரத்தக் கொதிப்பு, உஷ்ணம், ஊறல், இருதயத் துடிப்பு, பசியின்மை, திரேக வரட்சி, தூக்கமின்மை, நெஞ்சு நோவு, துடிப்பு, முதுகு வலி, வயிற்று நோவு, உடம்பு, கால் கை வலி, நாட்பட்ட வாய்வு, மறதி, மயக்கம், மூளை பலவீனம், நரம்பு பலவீனம் முதலிய சகல வியாதிகளையும் தீர்த்து, திரேக வலிமையையும் தேஜஸ்சையும் கொடுக்கும். ஒரே பாட்டிலில் குணம் அறியலாம்.

விலை ரூபாய் 175/=,95/=
தங்க பஸ்பம் கலந்தது 975/=
வெள்ளி பஸ்பம் கலந்தது 875/=

ஞான சுந்தர வைத்தியசாலை
187, செட்டியார் தெரு,
கொழும்பு 11,
போன்: 421398


# வெண் மணலில் தேங்கி நிற்கும் கழிவுகள் பொன் மணல் கடற்கரையின் கோலம்!

(திருகோணமலை நிருபர்)



இலங்கையின் மிகச் சிறந்த பொன் மணல் கடற்கரையான திருகோணமலையின் எழில் கொஞ்சும் கடற்கரையைத் தான் மேலே காண்கிறீர்கள். மிக நீண்ட மணற்பரப்பைக் கொண்ட இக்கடற்கரையை ஊடறுத்துக் கழிவு நீர் பாய்வது தான் காற்று வாங்க வருவோரைக் கலங்க வைக்கிறது. சரியான வடிகால் அமைப்பின்றி இஷ்டம் போல் பாயும் கழிவு நீர் கடலுடன் கலக்கவும் வழியின்றி வெண் மணலில் தேங்கி நின்று இயற்கை அழகைக் கெடுப்பதோடு சூழலையும் மாசுபடுத்துகிறது.

ஞாயிறு, பூரணை தினங்களில் இக்கடற்கரை விழாக்கோலம் பூண்டு பொதுமக்களால் நிரம்பி வழிவது குறிப்பிடத்தக்கது.

## மீண்டும் சைவ மகாசபை

(குருநாகல் நிருபர்)

குருநாகல் மாநகரில் சைவத்தையும், தமிழையும் வளர்க்க ஆயிரத்து தொளாயிரத்து முப்பதாம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்ட சைவ மகாசபை பதினைந்து வருடகால இடைவெளிக்குப் பின் மீண்டும் கடந்த 30.10.93 முதல் புனர் நிர்மாணம் செய்யப்பட்டு தன் பணியைத் தொடங்கியது. எழுபத்தேழு இனக்கலவரத்தில் சிதைக்கப்பட்ட இச்சபையின் கட்டிடங்கள் புதுப்பிக்கப் பட்டுள்ளன. ஆரம்பக்கிரியைகளை பிரதிஷ்டா சிரோமணி, வேதாகமக் கிரியாமணி, கிரியாகிரம ஜோதி பிரம்மஸ்ரீ சாமி விஸ்வநாதக் குருக்கள் வெகு சிறப்பாக நடத்தி வைத்தார். அன்றைய விழாவிலே இச் சபையின் தலைவராக கால் நூற்றாண்டுகளுக்கு மேலாக இருந்து வரும் வைத்திய கலாநிதி ஆ.சுப்பிரமணியம் அவர்களுக்கு குருனாகல் நகர்வாழ் சைவப்பெருமக்களால் பொன்னாடை போர்த்தப்பட்டது.

இவ்விழாவில் உரையாற்றிய விஸ்வநாதக் குருக்கள், எத்தனை இடர்வந்தாலும் சைவத்தைப் பேணி சைவர்களாக வாழவேண்டும் எனவும், இச் சபையின் பணி மேலும் சிறக்க வேண்டும் எனவும் கூறினார். ஆ.சுப்பிரமணியம் அவர்கள் தான் தன் கடமையை மட்டுமே செய்வதாகவும், இந்நகரில் மீண்டும் இச்சபை இயங்கத் தொடங்கியமையிட்டு தான் மகிழ்ச்சியடைவதாகவும் கூறினார். அதிபர். க.கந்தசாமி அவர்கள் சபையின் வரலாற்றை எடுத்துரைத்தார். செயலாளர் யோகநாதன் இச்சபையை மீண்டும் பெற எடுத்த முயற்சிகளைக் கூறி அதில் வெற்றி பெற்றமையை மகிழ்வுடன் கூறினார். ஆசிரியர் எஸ்.ரமேஷ், இப்பணிகளின் போது ஒத்தாசை நல்கிய அனைவருக்கும், சிரமதானம் மேற்கொண்ட குருநாகல் இந்து மகா வித்தியாலய மாணவர்களுக்கும் நன்றி தெரிவித்தார்.

## இப்படியும் ஒரு சாதனை! பாவனையாளர்களோ வேதனை!!

(கிண்ணியா நிருபர்)

கிண்ணியா பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் ஒரு வருடத்தில் இரு பெரும் சாதனைகளை ஏற்படுத்தியுள்ளதாம் என பொதுமக்கள் கருத்துக்கள் தெரிவிக்கின்றனர்.

இச்சங்கம், குறுகிய காலத்திற்குள் (ஒருவருடத்திற்குள்) நான்கு (04) புதிய தலைமைத்துவத்தைப் பெற்றுள்ளது என்பது இதன் முதலாவது பெரும் சாதனையாகும்.

இச்சங்கத்தின் தற்போதைய தலைவராக ஜனாப்ஏ.எச்.கலிபத்துல்லாஹ் (கூட்டுறவுப் பரிசோதகர்) பதவியேற்றுள்ளார்.

மற்றும் ஜனாப்களான. ஏ.ஸீ.கால்தீன்(முன்னாள் கிராம அதிகாரி) ஏ.ஆர்.எம்.பாறூக் (பட்டதாரி உதவி ஆசிரியர்) எம்.ஏ.தாஜுதீன், (பிரதேச செயலாளர்) ஆகியோரும் இத்தலைமைத்துவத்தில் உள்ளடக்கியுள்ளனர்.

தற்போது இச்சங்கத்தில், எவ்வித வேலைகளுமின்றி 24 ஊழியர்கள் நியமனம் பெற்று ஊதியம் பெற்று வருகின்றனராம் என்பது மற்றுமொரு சாதனையாகும் என்பதும் தெரிய வருகின்றது.

இதனால் இச்சங்கம் அத்தியாவசியப் பொருட்களின் விலையை அதிகரித்து (சீனி, கிலோ ஒன்று 30/ ரூபா) விற்பனை செய்யப்படுவதாகவும் தெரியவருகின்றது.)

## புகார் பெட்டி

## சொன்னார்கள் சரி! செய்தார்களா? இதுவரை இல்லை!

கண்டி மாநகருக்கருகாமையில் அமைந்துள்ள இனிகலை முஸ்லிம் கிராமத்திலுள்ள வீதிகளுக்கு வீதிமின் விளக்குகள் பொருத்தித் தருவதாக, அண்மையில் முடிந்த தேர்தல் காலங்களின் போது கூறினார்கள். பின்னர் இதற்கு சம்பந்தப்பட்டவர்கள் மின்விளக்குகள் பொருத்தக்கூடிய இடங்களையெல்லாம் குறித்துக்கொண்டும் சென்றார்கள்.

ஆனால் இதுகாலவரையிலும் எந்தவிதமான செயல்களிலும் இறங்காது பாராமுகமாக இருப்பதையிட்டு இப்பகுதி மக்கள் ஆச்சரியத்துடன் நோக்குகின்றார்கள்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இனிமேலும் தாமதியாது இனிகலையிலுள்ள வீதிகளுக்கு விமோசனம் கொடுப்பார்களா? இதுநாள்வரை அல்லல்பட்ட மக்கள் இனிமேலாவதுஅகமும் முகமும் மலர வாழ்வார்களா?

இனிகலை முஜிப்-கண்டி.

## சீராக இல்லாத சீரமைப்பு

திருகோணமலை மாவட்டத்தில் அமைந்துள்ள மூதூர் தொகுதியில், அரபிக்கலா சாலை வீதியிலிருந்து "ஹைரியா நகர்" எனும் கிராமத்துக்கு பிரிந்து செல்லும் சிறு வீதியானது மழை காலங்களில் நீர் தேங்கி சீர் கெட்டுவிடுகிறது. காலத்துக்குக் காலம் சீரமைப்பு நடந்தாலும் மழை பொழிந்தவுடன் மீண்டும் அவ்வீதி பழைய பல்லவியையே பாடத் தொடங்கிவிடுகிறது.

இதனால் பாமர மக்கள் முதல் பாடசாலை மாணவர்கள் வரை போக்குவரத்து சிரமங்களுக்கு உள்ளாகிறார்கள். அவசரச் சிகிச்சைக்காக வைத்தியசாலை செல்வதற்கு கூட சிரமப்படுகின்றனர்.

ஆகவே இந்த வீதியின் நிலையறிந்து சீர் திருத்தம் செய்ய வேண்டுமென சம்மந்தப்பட்ட சபை அதிகாரிகள் முன்வர வேண்டும்.

ஜே. சத்க்கா பர்வீன்-மூதூர்.

## காத்தான்குடியில் ஒரு வீதி சேறும் சகதியும் பாதி!

காத்தான்குடி பொதுமைதான வீதி என அழைக்கப்படும் ஷுஹதாவீதியைத் திருத்த வேலை செய்வதற்குக் கிறவல் கொட்டப்பட்டது. தற்போது மழை காலமாக இருப்பதனால் வீதி சேறும் சகதியுமாக இருக்கின்றது. இதன் காரணமாக பாதசாரிகள் கடுமையாக சிரமப்படுகின்றனர். மேலும் சைக்கிளில் பயணம் செய்பவர்கள் விரைவாகச் செல்வதன் காரணமாகப் பாதசாரிகளுக்கு சேறு அடிக்கின்றது. இப்படியான பரிதாப நிலையில் இருக்கும் இந்தப் பாதையை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து திருத்த வேலை நடைபெறுமா?

கலையுள்ளம் மஞூத் அஹமத்
காத்தான்குடி-03.

## புத்தளம் பிரதேச ஆசிரியர்களின் ஏக்கம்

புத்தளம் கல்விப் பிராந்தியம் அறுபதுக்கும் மேற்பட்ட தமிழ் மொழி மூலப்பாடசாலைகளை உள்ளடக்கியது. எனினும் பயிற்றப்பட்ட, பயிற்றப்படாத, பயிலுநர் ஆரம்ப ஆசிரியர்களுக்கான கல்வி புகட்டும் முறைகளையும், ஆலோசனைகள் பயிற்சிகள் வழங்குவதற்கும் இதுவரைகாலமும் பயிற்றப்பட்ட திறமையுள்ள ஆசிரிய ஆலோசகர்கள் இல்லாமை இப்பிரதேச ஆசிரியர்களுக்கு பாரிய இழப்பாகும்.

தொலைக்கல்விமூலம் பயிற்சி பெறும் ஆசிரியர்களுக்கும் யுனிசெப் நிறுவனத்தினரால் பாரிய பணச் செலவில் ஆரம்ப ஆசிரியர்களுக்கான கல்விப் பயிற்சிக் கருத்தரங்குகள் எற்பாடு செய்யப்பட்டன. ஆனால் போதனாசிரியர்கள் குறைபாட்டினால் உச்ச பயனை அடைய முடியாமல் சகல பாடசாலை ஆசிரியர்களும் அதிபர்களும் ஏக்கப் பெருமூச்சு விடுகின்றனர்.

எனவே பலரின் குறைதீர்க்கும் கருணை முரசான தினமுரசும் புத்தளப் பிரதேசக் கல்விப் பணிமனையும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் எமது கல்வித்தாகம் தீர்க்க உதவுவீர்களா?

ஆசிரியர்குழாம்
யுனிசெப் கல்விக்கருத்தரங்கு.

## அபயக்கரம் நீட்ட ஆள் இன்றி.....

இரத்தினபுரி மாவட்டத்தில் இரத்தினபுரி நகரில் இருந்து ஏறத்தாழ 21கி.மீட்டரில் அமைந்திருக்கும் டோனகந்தை எனும் இடத்திற்கு பஸ் போக்குவரத்து அன்று தொட்டு இன்றுவரை சீர்கேடான நிலையில் உள்ளது. இதனால் அங்குவாழும் மக்கள் சொல்லோணாத் துயரத்திற்கு உள்ளாகி வருகின்றனர். தோட்டப்பகுதியில் இருந்து நகருக்கு வரும் ஒரே பஸ் அது. அதுவும் காலை நேரம் என்றால்அலுவலகத்துக்குச் செல்பவர்கள் பாடசாலை செல்லும் மாணவ மாணவியர், தத்தம் வேலைக்கு செல்பவர்கள் எனப் பலர்... இந்த ஒரே பஸ்சில் தான் செல்ல வேண்டிய அவல நிலை! ஒரு நாள் பஸ்சுக்கு வருத்தம் வந்தாலோ அனைவர் கதியும்அந்தோ பரிதாபம்! அபயக்கரம் நீட்ட ஆள் இன்றி அவதிப்படுகின்றனர், அங்கு வாழ் மக்கள். மக்கள் மயப்படுத்தப்பட்டும் மந்த கதியில் இயங்கும் இப்போக்குவரத்து குறித்து பொதுமக்கள் பெரிதும் அதிருப்தி அடைந்துள்ளனர். குந்தகம் விளைவிக்கும் இப்போக்குவரத்து குறித்து இப்பிரதேச சபையும், சம்பந்தப்பட்டவர்களும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பொது மக்கள் கேட்டுக்கொள்கின்றனர்.

செல்வன் இராமநாதன் தமிழ்வண்ணன்-இரத்தினபுரி.

## நோய் பரப்பும் நுளம்புகள்?

கல்முனைப் பகுதியில் நீண்ட காலமாக நுளம்புத் தொல்லை இருந்து வருகிறது.

முன்பு இத்தோடு சம்பந்தப்பட்ட டிப்பாட்மன்கள் இப்பகுதியில் உள்ள வீடுகளிலும் ஏனைய இடங்களிலும் அவ்வப்போது நுளம்பை ஒழிக்கும் மருந்துக்களை தொளித்து நுளம்புத் தொல்லையில் இருந்தும் இப்பகுதி மக்களை காப்பாற்றி வந்தனர்.

ஆனால் இப்போது இப்பகுதியில் இவைகள் இடம் பெறுவதில்லை. மாறாக செயற்கை இரசாயண மருந்துக்கள் சேர்க்கப்பட்ட ஒரு சொற்ப நேரத்திற்கு நுளம்பை கட்டுப்படுத்தக்கூடிய நுளம்புத் திரிகளை இப்பகுதி மக்கள் பணம் கொடுத்து வாங்கி பாவித்து வருகின்றனர்.

இதனால் சிலருக்கு தலைவலி, ஜலதோஷம் போன்ற வியாதிகள் ஏற்படுகிறது. மேலும் நுளம்பு தீண்டுவதால் யானைக்கால் நோய் பரவும் அபாயமும் ஏற்பட்டுள்ளது.

தற்போது இப்பகுதியில் தொடர்ந்து மழை பெய்து வருவதால் மேலும் நுளம்புகள் உற்பத்தியாக வாய்ப்பு. ஏற்பட்டுள்ளது.

எனவே சம்பந்தப்பட்ட நிர்வாகப்பிரிவு இப்பகுதி மக்களின் உடல் நலம் கருதி உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எம்.சி.கலீல்-கல்முனை.

## அரசகரும மொழி அவஸ்தைப்படுகிறது! செந்தமிழுக்கா இந்தக் கதி?

ටක්‍රමයේ ශිෂ්‍ය/ ශිෂ්‍යාවනට ද ප්‍රවේශ පත්‍ර සඳහා ඉල්ලුම් කළ හැකි අතර ඔවුනට ද ඉඩ කඩ ලබාදීමට දගෙක සංවත්සර මණ්ඩලය සෑම උත්සාහයක්ම දරනු ඇත.

பூரண/ அரைவாசி முலமைபரிசு கல்குரியவர்களுக்கு கீழ் உள்ள படிவம்.

கொழும்பில் நடக்கவிருக்கு டெக் சிறிலங்காவின் 10 ஆண்டு நினைவு புர்த்தியும் அனுமதி படிவாவழங்கும் விசேட விழாவிற்கு கலந்து கொள்ள எனக்கும் அனமதி அட்டை ............. வழங்கவும்.

எல்லா மணவ/ மணவிகளந் கன்டிப்பாக பெற்றோர்/பாதுக்கவலர் கீவுடன் இந்த விழாவிற்கு கலந்து கொள்ள வேணடும். ஒரு மணவருக்கு அனுமதி உனடை கூனைழ 3 ாபனட வைடசபடபமுதுட0

முணயின் மணவ/ மணவிகளுக்கும் விழாவிற்கான வாங்குவதற்கான எல்லா ஒழுங்குகளையும் திணைக்களம் மேற் கொள்ளும்.

கணனி பயில்வதற்கு போட்டிப் பரீட்சை மூலம் சித்தி எய்தியவர்களுக்கு பாராட்டு விழா நடத்தும் முகமாக டெக் ஸ்ரீலங்கா நிறுவனத்தால் அனுப்பி வைக்கப்பட்ட அனுமதி அட்டையானது என்னவென்று வாசித்து புரியாத அளவிற்கு தமிழ் மொழியை உதாசினப்படுத்தியுள்ளனர். அரச கரும மொழியான தமிழுக்கு ஏற்பட்டுள்ள கதியை நினைத்து சிரிப்பதா? அழுவதா?

எஸ்.ராஜா-கண்டி.

www.padippakam.com

# புலிகள் பயன்படுத்திய டென்சில் கொப்பேகடுவவின் இராணுவ தந்திரம்!



## எக்ஸ்ரே ரிப்போர்ட் - நாரதர்

நாட்டை யுத்த நிலையில் வைத்திருக்க வேண்டும் என்று திருமதி சிறிமாவோ மீண்டுமொருமுறை எழுந்து சொல்லியிருக்கிறார்.

தனது கட்சியை எப்போதுமே உட்கட்சி யுத்த நிலையில் வைத்திருப்பவர். அந்த அனுபவத்தை முழுநாட்டுக்குமே பிரயோ கித்துப் பார்த்தால் என்னவென்று யோசித்திருக்கிறார். வேறொன்றும் இல்லை.

நாட்டு மக்களின் சுமைகளைக் குறைப்ப தற்கும், விரக்திகளை களைவதற்கும் வழிசொல்ல வேண்டிய எதிர்க்கட்சித் தலைவி விரக்திகளை மேலும் விசுவரூபமாக்கும் திட்டம் தருகிறார்.

எல்லோரும் அழுது கொண்டிருங்கள். எந்த நேரமும் யுத்தம் என்ற வார்த்தையை உச்சரித்துக்கொண்டிருங்கள்.

காலி முகத்திடலிலே காதலர்களை விரட்டிவிட்டு கனரக ஆயுதங்களை, டாங்கிகளை நிறுத்திவையுங்கள்.

காலி முகத்திடலிலே உள்ள அமரர் பண்டாரநாயக்காவின் உருவச்சிலையில் ஒரு ஏ.கே 47ஐயும் தொங்க விடுங்கள்.

திருமண வைபவங்களில் மங்கல வாத்தியங்களுக்குப் பதிலாக வேட்டுச் சத்தங் களை எழுப்பிப்பாருங்கள்.

கட்டில்களில் பூக்களுக்குப் பதிலாக முட்களை பரப்பிவிட்டு விடியும் வரை யுத்தம் பற்றியே பேசிக்கொண்டிருங்கள்.

முழுநாட்டு மக்களும் இவ்வாறான விதிகளைத்தான் கடைப்பிடிக்க வேண்டும் என்று திருமதி சிறிமாவோ அம்மையார் சொல்லவில்லை என்பது ஆறுதலான விசயம்.

அவ்வாறான விதிகளை அரசாங்கம் உடனே அறிவிக்க வேண்டும். அல்லது ராஜினாமாச் செய்து தனக்கு ஒரு சந்தர்ப்பம் தரவேண்டும் என்று அவர் கோராமல் விட்டதும் ஆச்சரியமான விசயம்.

இனப்பிரச்சனை விடயத்தில் சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்குள் இருந்து வித்தியாசமான சில குரல்கள் கேட்கின்றன.

இனப்பிரச்சனை இல்லை என்று சொல்லக்கூடாது என்றுகூட சமீபத்தில் அக்கட்சிக்குள் இருந்து ஒரு குரல் ஒலித்தது.

ஆனால் அம்மையாரின் அறிக்கை பொருத்தமற்ற நேரத்தில் விடுக்கப்பட்ட வருந்தத்தக்க அறிக்கையாக இருக்கிறது.

சிறிமாவோ பண்டாரநாயக்கா இனவாத அர்த்தத்தில் அப்படியொரு அறிக்கையை விடவில்லை.

அரசாங்கத்தின் மீது குற்றம் சொல்ல, அல்லது தன்னிடமும் ஒரு திட்டம் இருக்கிறது என்று காட்டிக்கொள்ள அப்படியொரு அறிக்கையை விட்டிருக்கலாம்.

ஆனால் நாட்டை யுத்த நிலையில் வைத்திருப்பது என்ற கருத்துப்படி காரியங்கள் நடந்தால் இனவாதமே மேலோங்கும்.

தற்போது நாட்டில் உள்ள நிலமை ஒன்றும் மேலானதல்ல.

தலைநகரில் சந்திக்கு சந்தி, சந்து பொந்துகள் என்று எங்குமே பொலிசாரும், படையினரும் சோதனைகள் நடத்திக் கொண்டிருக்கின்றனர்.

யுத்தம் சாப்பிட்டுவிட்டுத் துப்பிய சக்கைகளாக நாடெங்கும் இளைஞர்கள் கல்லறைகளாக விதைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

உறவுகளை இழந்த பந்த பாசங்கள் நெருப்பில் இட்ட புழுக்களாகத் துடித்துக் கொண்டிருக்கின்றனர்.

யுத்தம் கோடி கோடியாக செலவீனங் களை உருவாக்கிக் கொண்டிருக்கிறது.

ஒரு ஆயிரம் பேருக்கு வேலை கொடுக்கக் கூடிய அபிவிருத்தித் திட்டத்திற்கு பணம் இல்லை. ஒரு ஆயிரம் பேரை பலிகொடுத்து, பணமும் கொட்டி யுத்தத்தோடு கட்டியழ வேண்டியிருக்கிறது.

அரசாங்கம் பாதுகாப்புச் செலவுக்காக ஒதுக்கும் நிதி எவ்வளவு என்று கணக்குப் பார்த்து வடக்கே புலிகள் அறிக்கை விடுவார்கள்.

அரசாங்கம் இத்தனை கோடிகளை ஒதுக்கிவிட்டது. ஆகவே அதற்கு ஈடுகொடுக்க எமக்கும் நிதிப்பலம் வேண்டாமா என்று கேட்பார்கள்.

அதற்கு மறுநாளே எந்தெந்தப் பகுதியில் எந்தெந்த தினத்தில் மண் மீட்பு நிதி செலுத்தப்படவேண்டும் என்ற பட்டியலை வெளியிடுவார்கள்.

ஆக, யுத்தத்தின் முழுச்சுமையும் பகுதி வேறுபாடின்றி முழு நாட்டு மக்களையும் முதுகு வளைய வைத்திருக்கிறது. முனகவும் வைத்திருக்கிறது.

வடக்கே புலிகளின் தலைவர் சுதந்திரமாக நடமாட முடியாது.

தெற்கே நாட்டின் ஜனாதிபதி சுதந்திர மாக நடமாட முடியாது. நடமாடும் ஜனாதிபதிச் செயலகத்திற்கே நினைத்தபடி செல்ல முடியாது.

புலிகளின் தலைவரைச் சுற்றிப் பத்து பாதுகாப்பு வேலிகள்.

ஜனாதிபதியைச் சுற்றியும் பாதுகாப்பு வளையங்கள்.

இங்கே யாரை யார் வெல்வது? யார் முந்திக்கொள்வது என்று தொடரும் யுத்தம் தாம் வென்றெடுக்க வேண்டிய மக்களை விட்டு தலைவர்களைப் பிரித்துத் தூரமாக்கி வருகிறது.

இவ்வாறு யுத்தத்தின் விளைவுகள் சகல தளங்களிலும் வெளிப்பட்டுக் கொண்டே யிருக்கின்றன.

தினசரிகளைப் புரட்டினால் போதும். எங்கோ ஒரு திசையில் சண்டை நடந்த செய்தி இல்லாமல் போகாது.

இவற்றுக்கும் மேலாக எவ்வாறான ஒரு நிலையை, யுத்த சூழ்நிலையை அம்மையார் எதிர்பார்க்கிறார் என்பதுதான் புரியவில்லை.

அவரது ஆட்சிக்காலத்தில் வடக்கு- கிழக்கில் யுத்தம் நடக்கவில்லை.

ஆனாலும் யுத்தம் ஒன்று நடப்பது போல கற்பனை பண்ணிக்கொண்டு அவர் வினையை விதைத்ததையும் மறக்க முடியாது. இன்றைய விளைவுகளுக்கு அவரது ஆட்சிக்காலமும் ஒரு முக்கிய காரணம்.

நடந்தவற்றை மறந்துவிடலாம். இனி நடப்பவை நல்லவையாக இருந்தால்.

ஆனால் தற்போதைய நடப்பை அம்மையாரின் அறிக்கை மேலும் மோசமாக்கி விடக்கூடும் என்பதால் அந்தக் காலத்தை நினைவூட்டிப் பார்க்க வேண்டியதாயிற்று.

அரசாங்கம் எட்டடி பாய்ந்தால் எதிர்க்கட்சி பதினாறு அடி பாய்ந்தேயாக வேண்டும் என்று எழுதப்படாத விதி ஒன்று இருக்கிறது.

அந்த விதி இனப்பிரச்சனை விடயத்திலும் விளையாடியது. விளைவு, நாட்டின் தலை விதியே மாறியிருக்கிறது.

இனப்பிரச்சனை விடயத்திலும், யுத்தம் தொடர்பாக வெளியிடும் கருத்துக்களிலும் கவனத்தோடும் நிதானத்தோடும் நடந்து கொள்வது நாட்டு நலனுக்கு உதவும்.

திருமதி சிறிமாவோ அம்மையாரும் இதனை விளங்கிக்கொள்வாராக.

■

உள்ளூராட்சித் தேர்தல்களுக்கான ஆரம்ப மணி அடிக்கப்பட்டுவிட்டது.

தேர்தல்களில் கலந்துகொள்வோருக்கு எதிராக புலிகள் எச்சரிக்கை மணியை அடிக்கக்கூடும்.

எனினும் ஏனைய அரசியல் கட்சிகள் இப்போது கிழக்கில் தேர்தல் நடைபெறுவதை விரும்பவில்லை.

எனவே அரசாங்கம் வெளியிட்ட துரித அறிவிப்பு போதிய பயன் அளிக்கவில்லை.

தேதிகள் மாறினாலும் தேர்தலை நடத்துவதில் அரசாங்கமும், படையினரும் சற்றும் தளரப் போவதில்லை. படையினருக்கு அது ஒரு கௌரவப் பிரச்சனை.

பூநகரி மோதலின் பின் அரசாங்கத்தால் புலிகளை கட்டுப்படுத்த முடியாது என்று ஒரு அபிப்பிராயம் வெளியுலகில் மெல்லத் தலைகாட்டுகிறது.

பூநகரிப் போரில் ஏற்பட்ட இழப்புக்களை அரசின் மீதான அதிருப்தியாக்குவதில் எதிர்க்கட்சிகள் சில தீவிரம் காட்டுகின்றன.

இச் சூழ்நிலையில் அரசாங்கம் கிழக்கில் தேர்தலை நடத்தப்போவதாக அறிவித்து வேட்பு மனுத்தாக்கலுக்கு திகதி குறித்தமை நிலமை தனது கட்டுப்பாட்டில் இருப்பதை வெளிப்ப டுத்தவேயாகும்.

புலிகள் தாக்குதல் நடத்தினாலும் கூட கிழக்கிலும், வடக்கில் ஒரு பகுதியிலும் தனது அதிகாரம் நிலவுவதை வெளிப்படுத்தும் வகையில் அரசாங்கம் துரிதமான அறிவிப்பை வெளியிட்டது.

■

சமீபத்திய பூநகரி மோதலின் பின்னர் வடக்கு-கிழக்குக்கு வெளியே உள்ள தமிழர்கள் மத்தியில் சின்னதாய் ஒரு பதட்டம் தொற்றிக்கொண்டது.

வதந்திகளும் பஞ்சமே இல்லாமல் பரவிக் கொண்டிருந்தன.

வெள்ளைக் கொடிகளோடு தூர இடங்களுக்கான போக்குவரத்து வாகனங்கள் சென்று வந்தன.

பலியான படையினரின் தொகை அதிகமாக இருந்தமையால் அசம்பாவிதங்கள் தலைகாட்டலாம் என்றே கருதப்பட்டது.

புலிகள் படையினரின் அஸ்திகளை ஒப்படைக்கப் போவதாக செய்தி வந்ததும்



இராணுவத் தளபதி

கொழும்பில் தமிழ்மக்களது நடமாட்டமே குறைந்து காணப்பட்டது.

கொழும்பில் தமிழர்கள் அதிகமாக வாழும் வெள்ளவத்தைப் பகுதியில் அமைதி குடி கொண்டது. பொலிசாரும், இராணுவத் தினருமே அதிகமாகக் காணப்பட்டனர்.

பலியான படையினரின் எண்ணிக்கை உடனடியாக வெளியிடப்படவில்லை.

பாதுகாப்பு ஏற்பாடுகளும் பலமாகவே மேற்கொள்ளப்பட்டிருந்தன.

அதனால் பதட்டமான சூழலுக்கான சாதகங்கள் இல்லாமல் போயின.

சாதாரண சிங்கள மக்கள் மத்தியில் பிரச்சனை இல்லை. அவர்கள் முன்பை விட இப்போது நிலைமைகளைப் புரிந்து கொள்கின்றனர்.

சந்தர்ப்பத்தை பயன்படுத்தி சம்பாதிக்க முற்படும் சில தீய சக்திகள்தான் பிரச்சனை. அவர்கள் இன அபிமானம் பேசுவது தமது பைகளை நிரப்பிக்கொள்ளவே.

அவ்வாறான சக்திகளுக்கு அரசும், படையினரும் இடம் கொடாதவரை பதட்டம் எற்படப் போவதில்லை.

■

பூநகரித் தாக்குதலில் புலிகளின் தரப்பில் வெற்றியும் உண்டு. தோல்வியும் உண்டு.

பல கோடி பெறுமதி மிக்க ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டமை பெரிய வெற்றி.

400 உறுப்பினர்களை இழந்தமையும், தமது இயக்க நடவடிக்கைகளுக்கு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பூநகரியைக் கட்டுப் பாட்டுக்குள் கொண்டுவர முடியாமல் போனதும் தோல்வி.

ஆனால் யாழ்ப்பாணத்தில் புலிகளின் பிரச்சாரங்களை நோக்கும் போது 400 பேரின் உயிரிழப்புக்களை ஒரு தாக்கமான விசயமாக அவர்கள் கவலை தெரிவிக்கவில்லை.

பலியான உறுப்பினர்களின் பெயர்களை வெளியிட முன்னரே கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் பட்டியலைப் புலிகள் வெளியிட்டனர்.

தமிழ் சமூகத்தைப் பொறுத்தவரை 400 உயிர்கள் பலியாவது என்பது சாதாரண விசயம் அல்ல.

எதிர்கால சமூகத்தின் இரத்த ஓட்டமாக விளங்கவேண்டிய இளைய தலைமுறை இரத்தம் கொட்டி மடிந்து போவது மாபெரும் இழப்புத்தான்.

இழப்புக்கள் பற்றி பெரிதுபடுத்தினால் தமது நடவடிக்கை தோல்வியாகச் சித்தரிக் கப்படும் என்று புலிகள் நினைக்கிறார்கள்.

ஆனால் புலிகள் நடத்தியுள்ள பூநகரித் தாக்குதல் முன்னாள் வடபிராந்தியத் தளபதி டென்சில் கொப்பேக்கடுவ பயன்படுத்திய இராணுவத் தந்திரோபாயத்தை ஒத்ததாகவே இருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் புலிகள் நிலை கொண்டுள்ள பகுதிகளுக்குள் ஊடுருவித் தாக்கிவிட்டு மீண்டும் முகாமுக்கு திரும்புவதே டென்சில் கொப்பேகடுவ பயன்படுத்திய இராணுவத் தந்திரமாகும்.

அந்த இராணுவத் தந்திரத்தில் கெரில்லாத் தன்மை கலந்திருந்தது.

எதிரியின் போரிடும் ஆற்றலை அழிப்பது. எதிரியின் அணிகளில் இழப்புக்களை உருவாக்கு வது. எதிரியை நிம்மதியாக இருக்கவிடாமல் செய்வது. போன்ற நோக்கங்களோடு கெரில்லா நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுண்டு.

ஏதாவது ஒரு பகுதியை விடுவித்து அங்கே நிலை கொள்வது என்ற நோக்கம் பெரும்பாலான கெரில்லா நடவடிக்கைகளில் காணப்படுவதில்லை.

டென்சில் கொப்பே கடுவ தலைமையில் இராணுவம் மேற்கொண்ட சில நடவடிக்கைகளும் அவ்வாறே அமைந்தன.

புலிகளின் பதுங்கு நிலைகளை நிர்மூலமாக்கி, புலிகள் தரப்பில் உயிர் இழப்புக்களை உருவாக்கி விட்டு இராணுவம் முகாமுக்குத் திரும்பும்.

தமது சரிவை ஈடுசெய்து புலிகள் மீண்டும் தமது நிலமையைப் பயன்படுத்தும் போது மீண்டும் ஒரு தாக்குதல்.

இப்போது புலிகளும் பூநகரியில் அதைத்தான் செய்துள்ளார்கள்.

ஆனால் புலிகளின் தாக்குதல் இலக்கு நிச்சயம் அதுவல்ல. பூநகரி புலிகளுக்கு மிக முக்கியமான பகுதி. ஐ.சி.ஆர்.சி. மூலம் இராணுவத்தை அங்கிருந்து விலக வைக்க புலிகள் முயன்றனர். முடியவில்லை.

கடைசியாக தாமே நேரடியாக களத்தில் இறங்கினர். எனினும் படையினருக்கு இழப்பை யும் பாரிய நஷ்டத்தையும் மட்டுமே ஏற்படுத்த முடிந்திருக்கிறது.

இதனை யாழ்தேவி இராணுவ நடவடிக்கை யோடும் ஒப்பிடலாம்.

இன்றைய இராணுவத் தளபதி சிசில் வைத்தியரத்ன டென்சிலின் இராணுவ உபாயத்தை பின்பற்றவில்லை. புலிகளை முற்றாக ஒழித்து விட்டு முன்னேறும் பகுதியில் தமது நிலைகளை பலப்படுத்துவதே அவரது நோக்கம் போல் தெரிகிறது.

ஆனாலும் கிளாலிவரை முன்னேறிச் சென்ற படையினர் புலிகளின்தரப்பில் உயிரிழப்பு களையும் நஷ்டங்களையும் ஏற்படுத்தினர்.

எனினும் தொடர்ந்து அங்கு நிலைகொள்ள முடியாத சூழலைப் புரிந்து மீண்டும் முகாமுக்கே திரும்பினர்.

யாழ்தேவியும், தவளைப்பாய்ச்சலும் எந்த நோக்கத்தில் நடத்தப்பட்டனவோ அந்த நோக்கத்தை நிறைவேற்றவில்லை.

ஆயினும், யாழ்தேவி பற்றி படையினர் தரப்பும், தவளைப் பாய்ச்சல் பற்றி புலிகளின் தரப்பும் போரின் போக்கில் மாறிய சூழலுக்கு ஏற்ப தமது நோக்கங்களை மாற்றிக் கூறிக் கொண்டனர்.

ஆனால் கிளாலியில் படையினர் முகாம் அமைந்திருந்தால் படையினருக்கு ஏற்பட்டி ருக்கும் அனுகூலங்களை விடவும்,

பூநகரி புலிகளின் கரங்களுக்கு சென்றிருக்கு மானால் புலிகளுக்கு கிடைத்திருக்கக்கூடிய அனுகூலங்களே அதிகம்.

ஒப்பரேஷன் சக்சஸ் ஆனால் ஆள் தப்ப வில்லை என்று ஒரு ஜோக் உண்டு.

அப்படி இல்லாவிட்டாலும் கூட, பூநகரியில் புலிகளின் தாக்குதல் வெற்றி. ஆனால் இலக்கை அடையமுடியவில்லை.

■

## அதிரடி அய்யாத்துரை



வேட்பு மனு தாக்கல் திகதியை அறிவிச்ச உடனை கிழக்கிலை பழைய ஆட்கள் கொஞ்சப் பேர் துண்டை உதறித் தோளிலை போட்டுக்கொண்டு எழும்பியிருக்கினமாம். முந்தி யூ.சியிலை இருந்து ருசி கண்ட சிலரும் வெளிக்கிட்டிருக்கிறதாக் கேள்வி. ஜனநாயகத்திலை உதுதான் பாருங்கோ ஒரு வில்லங்கம். யார் வேணுமெண்டாலும் எலக்சன் கேட்கலாம். சாதாரண குடிமகனும் ஜனாதிபதியாகலாம் என்கிறது சந்தோசமான விசயம்தான் பாருங்கோ. ஆனால் சமூகத்துக்கு கூடாத ஆக்களும் தப்பித் தவறி பிரதிநிதியளா வரக்கூடியதா இருக்கிறதுதான் ஜனநாயகத்தை வீக் பண்ணுற விசயம்.

யாழ்ப்பாணத்திலை இருந்து ஒரு பூச்சி புழு கூட வெளியிலை போகக்கூடாது எண்டு இரெண்டு எழுத்தார் ஓடர் போட்டிருக்கினம். வெளியிலை இருந்து உள்ளுக்கை போறதுக்கும் தடைதான். போகவும் வேண்டாம். வரவும் வேண்டாம். பூட்டு கதவை எண்டு போகுது கதை. வருத்தக்காரரையும் வெளியிலை கொண்டுபோகக் கூடாது எண்டு சிகப்பு சங்கத்துக்கு உத்தரவாம். இரெண்டு எழுத்தார் போடுற உத்தரவுகளுக்கு காரணமோ கேட்கமுடியும்.

இரெண்டு எழுத்தாரின் காவல் துறைக்காரருக்கு புத்தூர் சனம் கைநீட்டிப் போட்டுது. அவை வாங்கிக் கொண்டு போய் மேலே சொல்ல, இரெண்டு எழுத்தார் வந்து வாட்டியிருக்கினம். இரண்டு மூன்று பேர் காலி. தங்களைப் பற்றிக் கதைக்கிறதே அவைக்குப் பிடிக்கிறேல்லை. கைநீட்ட விடுகினமே. சனத்துக்கு ஒண்டும் விளங்கிறேல்லை. காதல் தகராறு தான் பிரச்சனைக்கு காரணமாம். இப்ப அச்சுவேலியிலை ஒரு பத்துப்பேர், புத்தூரிலை ஒரு பத்துப்பேர் எண்டு பிடிச்சு உள்ளுக்கைப் போட்டிருக்கினமாம். சமத்துவமான சிறைப் பிடிப்புத்தான்.

கொழும்பு வத்தளைப் பகுதியிலை பள்ளிக்கூடப்பிள்ளையலை பொட்டு வச்சுக் கொண்டு வரவேண்டாம் எண்டு வீராதி வீரர் சிலர் மிரட்டியிருக்கினம். மஸ்கோவிலை மழை பெய்தா மாதகல் பக்கம் நிண்டு குடைபிடிக்கிற வேலை மாதிரித்தான் இதுவும். அடிக்கிறது யாரோ. சனத்தையோ கடிக்கிறது? உதுதானே சீண்டி விடுற விசயம்.

சூழ்நிலை கொஞ்சம் அப்படி இப்படி இருந்தாலும் கொழும்பிலை சூரன்போர் வலு கலாதியாத்தான் நடந்தது. எங்கட ராஜதந்திரியாரும் சூரசங்காரம் எண்டு அலசியிருக்கிறார். சூரன் சங்காரமானது அந்தக் காலம். இப்ப சூரர்கள் எல்லோ சனத்தைச் சங்காரம் செய்யினம். காலம் மாறிப்போச்சுது. எண்டாலும் சனத்துக்கு சூர சங்காரம் எண்டா மகிழ்ச்சிதான் பாருங்கோ. நடக்கிறது நடக்கட்டும் எண்டு சூரன் போர் பார்க்க வெளிக்கிட்டு வந்துட்டுகள் கண்டியளோ.

ஏ.கே 47. இப்ப அதைப்பற்றி ஆறுவயதிலை இருந்து ஆண்டியார் மட்டும் யாழ்ப்பாணத்திலை அறிஞ்சுவைச்சிருக்கினம். நல்லை ஆதினமே அதைப்பற்றிப் பேசினவர் எல்லோ. அந்த ஏ.கே47ஐ கண்டுபிடிச்சவர் ரஷ்யாவைச் சேர்ந்த ஏ.கிளாஸ்னிக்கோ. 47ம் ஆண்டிலை கண்டுபிடித்தவர். இப்பவும் உயிரோட இருக்கிறார். அவர் கிட்டடியிலை கவலையோடை சொல்லியிருக்கிறார் பாருங்கோ. "நான் புரட்சிகரமான நோக்கங்களுக்கு பயன்படுத்த கண்டுபிடிச்ச ஆயுதத்தை இப்ப சமூக விரோதியள், குண்டர்கள் எண்டு எல்லாரும் தூக்கி விளையாடுறதைப் பார்த்தா நெஞ்சு பொறுக்குதில்லையே" மிஸ்டர் கிளாஸ்னிக்கோவின் கவலையிலை நியாயம் இருக்கெண்டுதான் நான் நினைக்கிறன்.

# வளைகுடா யுத்தமும்- உலக ரவுண்டப்

# வாயு மர்மமும்! ஏவுகணையில் நச்சு வாயு



வளைகுடா யுத்தம் 1991 ஜனவரி மத்தியில் துவங்கியது. குவைத் நாட்டை இராக் படைகள் ஆக்கிரமித்ததைத் தொடர்ந்து நடைபெற்ற யுத்தத்தில் இராக்கை எதிர்த்து அமெரிக்காவின் தலைமையில் நேசப் படைகள் போரிட்டன.

சவுதி அரேபியாவிலிருந்துதான் நேசப் படைகளின் தலைமை செயற்பட்டது. இந்த யுத்தத்தின் போதுதான் 'ஸ்கட்' எனப்படும் கண்டம் விட்டுக் கண்டம் பாய்ந்து குறித்த இலக்குகளைத் தாக்கும் ஏவுகணைகள் பயன்படுத்தப்பட்டன.

இராக் இத்தகைய ஏவுகணைகளை ஏவும் போதெல்லாம், அவை ஏவப்பட்ட அதே நொடியில் சவுதியிலுள்ள நேசப்படைகளின் நிலைகளுக்கு உடன் தகவல் தெரிந்துவிடும். அத்தகைய நூதன தொழில் நுட்பம் கொண்ட கருவிகள் செயலில் அமர்த்தப்பட்டிருந்தன.

இராக் ஏவும் 'ஸ்கட்' கணையினை இடைமறித்துத் தாக்கி அழிக்கவல்ல 'பேட்றியட்' கணைகளை அமெரிக்க வீரர்கள் முடுக்கிவிடுவர். இவை இரண்டும் வான் வெளியில் மோதி 'ஸ்கட்' நிர்மூலமாக்கப் பட்டுவிடும். இதனையும் மீறி சில 'ஸ்கட்' கணைகள் சவுதிக்குள்ளும் விழுந்து வெடித்துள்ளன.

குவைத் நாட்டின் எல்லையிலிருந்து சவுதி அரேபியாவுக்குள் 160 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள ஓரிடத்தில் அமெரிக்கப் படை முகாமொன்று இருந்தது. 1991 ஜனவரி 20ம் திகதியன்று தனது முகாமிலுள்ள ஒரு கூடாரத்தில் லாறி கே என்ற வீரர் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தார். அப்போது தான், அந்த முகாமுக்கு கொஞ்சத் தூரத்துக்கு அப்பால், இராக் ஏவிய 'ஸ்கட்' ஏவுகணைக் குண்டு ஒன்று விழுந்து வெடித்தது. இதனைத் தொடர்ந்து ஒரு வெண்சாம்பல் போன்ற புழுதி மண்டலம் படிந்து வருவதை அங்கிருந்த துருப்புகள் அவதானித்தனர். இதனைத் தொடர்ந்து பல வீரர்கள் நோய் வாய்ப்பட்டனர். வீரர் கேயின் கைகளில் சிவப்பு வர்ண கொப்ப ளங்கள் தோன்றின. உடம்பின் மூட்டுகளெல்லாம் நோவெடுத்தன; வயிற்றோட்டமும் கண்டது.

'ஸ்கட்' ஏவுகணையில் இரசாயன நச்சுப் பதார்த்தங்கள்-நச்சு வாயுகள் நிரப்பப் பட்டிருக்க வேண்டும் என்று சந்தேகம் ஏற்பட்டது. இருப்பினும் உடனடி முடிவு ஏதும் கிடைக்கவில்லை. கேயுடன் அதே முகாமிலிருந்த பல வீரர்களுக்கும் இதே நிலைதான் ஏற்பட்டது. யுத்தம் முடிவடைந்து இரண்டு வருடங்களின்பின்னரும் இதே போர் முனைகளில் பணியாற்றிய பல வீரர்களுக்கு இன்றும் இந்த நோயின் தாக்கம் தீர்ந்தபாடில்லை.

இதற்கிடையில் அமெரிக்க முன்னாள் படைவீரர்களுக்கான இலாக்கா, இத்தகைய நோயினால் பீடிக்கபட்ட வீரர்களின் முறைப் பாடுகளையோ இவர்களை ஆராய்ந்த மருத்துவர்களின் அறிக்கைகளையோ சிரத்தையுடன் கவனத்தில் எடுத்துக் கொள்ளவில்லை என்று தெரிகிறது.

அதுமட்டுமல்லாமல் அமெரிக்க பாதுகாப்புத் திணைக்களமும் இவர்களுடைய முறையீடுகளுக்குச் செவிசாய்க்க வில்லை. கடமையிலிருந்து விலகுவதற்காக இவ்வீரர்கள் பாசாங்கு செய்கின்றனர் என்று இத்திணைக்களம் கருதுவதாகத் தெரிகிறது.

ஏறத்தாழ 8,000 துருப்புகள், இத்தகைய இரசாயன வாயுத்தாக்க நோயினால் பீடிக்கப்பட்டிருப்பதாகப் பாதுகாப்புத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

இதே காலகட்டத்தில், வளைகுடா யுத்தத்தின்போது நேசப்படைகளுடன் தோளோடு தோள் நின்று சமர் புரிந்த செக் நாட்டுப் படை வீரர்களுக்கும் இரசாயன வாயுத் தாக்கம் ஏற்பட்டிருப்பதாகவும் தெரிகிறது. அந்நாட்டு ஆய்வாளர்கள் சில நவீன கருவிகளையும் பயன்படுத்தி, யுத்த முனையில் ஒரு வகை நச்சு வாயுவின் பரவல் ஏற்பட்டிருந்ததைக் கண்டுள்ளனர்.

இப்பொழுது இந்த விவகாரம் மீண்டும் சூடு பிடித்திருக்கிறது. அமெரிக்கக் காங்கிரசின் முறையீட்டுத்துறைக் குழுவிடம் பாதிப்புக்குள்ளான வீரர்களும் அவர்களின் குடும்பத்தினரும் முறையிட்டுள்ளனர்.

நச்சு வாயுக்கள் இராக்கின் ஏவுகணை மூலம் பரவியுள்ளதா அல்லது தொழிற்துறைக் கழிவுகளின் மூலம் கசிந்துள்ளதா என்பதனைக் கண்டறிவதற்கான முயற்சிகள் இனிமேல்தான் மேற்கொள்ளப்படவிருக்கின்றன. இதனைத் தீரவிசாரித்து ஆராய்ந்தறிவதற்காக ரொக்ஃபெல்லர் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த நோபல் பரிசு பெற்ற நிபுணரான பேராசிரியர் ஜொஷுவா லெடேர்பேர்க் தலைமையில் குழு ஒன்று நியமிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# பிரிவின் துயரில் வாழும் யானை பிளந்து கட்டியது 44 பேரை



பிரிவின் சோகம் மனிதருக்கு மட்டும்தான். சொந்தமா? மிருகத்துக்கு கிடையாதா? ஏன் இல்லை.

இந்தியாவில் அஸ்ஸாம் மாநிலத்தில் சார் மற்றும் புத்தாமாரி என்ற கிராமங்களைச் சேர்ந்த 44 பேரை காட்டு யானை ஒன்று தாக்கிக் கொன்றுவிட்டது. இந்த யானையைக் கட்டப்படுத்தவோ, சுட்டுக்கொல்லவோ முடியாமலிருக்கிறது. காட்டுக்குள்ளிருந்து அவ்வப்போது திடீரெனத் தோன்றும் இந்த யானை மனிதர்களைத் தாக்கிக் கொன்றுவிட்டு ஓடி மறைந்துவிடுகிறது.

இந்த யானை ஒரு பெரும் யானைக் கூட்டத்துடன் திரிந்தது. சில வாரங்களுக்கு முன்னர் அக்கூட்டத்திலிருந்து தனியாகப் பிரிந்து, இந்த நாசகாரச் செயலில் இறங்கியிருக்கிறது. இந்த யானையின் இணை இறந்துவிட்டமையினாலேயே பிரிவுத்துயர் தாங்காமல் தனது கோபத்தை இவ்வாறு காட்டுகிறது என்று அதிகாரி ஒருவர் கூறுகிறார்.

# பொலித்தீனுக்குத் தடை!

பங்களாதேஷில் பொலித்தீன் பைகளுக்குத் தடை விதிக்கப்படுகிறது. இன்று உலகனைத்துமுள்ள நாடுகளில் பலதரப்பட்ட பொருட்களையும் கொண்டு திரிவதற்கு சர்வசாதாரணமாக பொலித்தீன் பைகளே பயன்படுத்தப்படுகின்றன.

இதனால் சுகாதாரக் கேடுகள் ஏற்பட்டு வருவதாக பங்களாதேஷ் அரசாங்கம் கண்டுபிடித்திருக்கிறது. உலகின் வேறு எந்த நாட்டிலும் பொலித்தீன் தீங்கு விளைவிக்கக்கூடியதென்று கருதப்படவில்லை. பொலித்தீனுக்குப் பதிலாக சணல்-சாக்குப் பைகளைப் பயன்படுத்தும்படி அரசு கூறுகிறது. ஜனவரி 18ம் திகதியுடன் அந்நாட்டிலுள்ள பொலித்தீன் உற்பத்தித் தொழிற்சாலைகளை மூடிவிடும் படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

(குறிப்பு: சணல் உற்பத்தியில் பங்களாதேஷ் முன்னணியில் நிற்கிறது என்பதை கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்!)

# மொஸ்கோ நகரில் அகழ்வாராய்ச்சி!

ரஷ்யாவின் தலைநகர் மொஸ்கோவில் அண்மையில் நடைபெற்ற அகழ்வாராய்ச்சியில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பல அரிய சான்றுகள் கிடைத்துள்ளன. அங்குள்ள மனேஸ் சதுக்கத்தில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 750 ஆண்டுகளுக்கு முன்னர் ஜெங்கிஸ்கானும் அவனது குதிரைப் படையினரும் தீக்கிரையாக்கியதாகக் கருதப்படும் ஒரு கிராமமும் பூமியைத் தோண்டும் போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. வரலாற்றின் மைய காலப் பகுதியில் மக்கள் பாவித்த ஆபரணங்கள் மற்றும் மட்பாண்டங்களும் கிடைத்துள்ளன. ஏராளமான நாணயங்களும் குழந்தைகளின் விளையாட்டுப் பொருட்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

# முன்னாள் அழகியின் முழு நிர்வாணப்படங்கள்!

*இந்தோனேஷியாவின் முன்னாள் அதிபர் சுகர்ணோவின் மனைவி தேவி சுகர்ணோவின் நிர்வாணப்படங்களைக் கொண்ட புத்தகம் ஜப்பானில் தற்போது விற்பனைக்கு வந்துள்ளதாகக் கூறப்படுகிறது. தேவி ஒரு ஜப்பான் நாட்டு அழகி. இப்பொழுது அவருக்கு வயது 53.*



## நகர ரவுண்டப்

-ஒற்றன்-

# எந்தக் காரிலும் இல்லாத ஒன்று அந்தக்காரில் இருக்கிறதோ?

எங்கே ஒற்றனைக் காணவில்லை என்று கடிதம் போட்டவர்களுக்கு என்ன செய்யலாம்?

ஒவ்வொருவராய் அழைத்து கன்னத்தில் ஒன்று கொடுக்க ஆசை. அடிதான். அதுவும் செல்லமாய்.

நாட்டு நிலமை தெரியாமல் ரவுண்டப் போனால் மாட்டுப்பட்டு, விழி உருட்ட வேண்டும்.

கேள்விகளுக்குப் பதில் சொல்லி, தடவ அனுமதித்து, கூச்சத்தில் நெளிந்து தப்பி வருவதற்குள் வாழ்க்கையே வெறுக்கும்.

அதனால் நகர ரவுண்டப் இப் போதைக்கு இல்லை என்றுவிட்டு வீட்டில் நிம்மதியாக இருக்க ஆசையோ ஆசை.

விடமாட்டீர்களே! ஒற்றன் தர்ம அடி வாங்கிக்கட்டுவதில் அப்படியொரு திருப்தி உங்களுக்கு.

கடிதங்கள் வந்து கதவைத் தட்டி ஒற்றன் எங்கே என்று விசாரிப்பதால், உடனே 'ஒற்றன் வரவும் ரவுண்டப் ரிப்போர்ட் தரவும்' என்று உத்தரவு.

சரி நடப்பது நடக்கட்டும் புறப்பட்டோம்.

■

வழக்கம் போலவே மினி பஸ்சுக்குள் ஒரு கடல். நீச்சலடித்து உள்ளே புகுந்தோம்.

காற்று என்று ஒரு விசயம் இருப்பதையே உள்ளே வந்தால் மறந்துவிட வேண்டியதுதான்.

68 சிக்னல் லைட். அங்கெல்லாம் பஸ் நின்று போக, நமக்கு கிட்டத்தட்ட மூச்சே நின்றுவிடும் போல ஒரு உணர்வு.

மினிபஸ் முகத்துவாரம் வீதியில் நிறைமாதக் கர்ப்பிணிபோல சென்று கொண்டிருக்க, நாம் பார்வையை வீதிக்கு வீசினோம்.

ஒரு காரைச் சுற்றி கூட்டம் நின்று கொண்டிருந்தது.

விபத்தாக இருக்குமோ? வாகனங்கள் அதிகமாகிவிட்டதால் அவை முட்டி மோதி முத்தமிட்டுக் கொள்வதும் வாடிக்கையாகிவிட்டது.

இந்த வாகனங்கள் காதலர்களை விட மோசம். நடுவீதியில் வந்து முத்தமிட்டுக் கொள்கின்றன.

ஆனால் காரைச் சுற்றி நின்ற கூட்டத்தின் இடையே ஊடுருவிப் பார்த்ததில் விபத்துப் போலத் தெரியவில்லை.

நமது பத்திரிகையாளர் மூளைக்குள் ஏதோ வித்தியாசமாய் ஒரு உணர்வுவர ஆராய்ந்து பார்த்து விடுவது என்று முடிவு செய்தோம்.

அடுத்த தரிப்பிடத்தில் இறங்குவதென்றால் அதற்குரிய ஆயத்தங்களை முன் கூட்டியே ஆரம்பித்துவிட வேண்டும்.

இல்லாவிட்டால் நாம் நீந்திச் செல்ல முன்னரே மினிபஸ் தரிப்பிடத்தில் இருந்து புறப்பட்டுவிடும்.

முனைந்து முன்னேறினோம். சிலர் விலகமாட்டோம் என்பது போல் விறைப்புக் காட்ட, விலகிக் கொண்டு சிலர் முறைப்புக் காட்ட அலட்சியம் செய்து தொடர்ந்து முன்னேறினோம்.

தரிப்பிடம் வந்தது. தாவிக் குதித்தோம். வாகனங்களின் புகை கலந்த காற்றுவந்து முகத்தில் தொட்டது. நடந்தோம்.

அது ஒரு இந்துக் கல்லூரி. அதன் அருகேதான் கூட்டம் நின்றது.



கூட்டத்தைப் பிளந்து கொண்டு முன்சென்று தலையை நீட்டினோம்.

கல்லூரிச் சுவரின் ஓரமாக ஒரு கார் நின்று கொண்டிருந்தது.

காரில் ஒரு சேதமும் கிடையாது. படு சுத்தம்.

அருகில் நின்றவரிடம் மெல்ல விசாரித்தோம். விசயம் வெளித்தது.

நீண்ட நேரமாக கார் நின்று கொண்டிருக்கிறது. யாரையும் காண வில்லை. சந்தேகம் வந்துவிட்டது.

"சந்தேகப்படும்படியான வாகனங்களோ பொதிகளோ, அல்லது நபர்களோ கண்ணில்பட்டால் உடனே தகவல் தரவும். விழிப்பாக இருக்கவும்."

இந்த பாதுகாப்பு அறிவுறுத்தல் சந்தேகப்பட்டவர்களின் மன்தில் எழ, உடனே பொலிசுக்கும் அறிவித்து விட்டார்கள்.

கூட்டத்தில் சிலர் விசயம் அறிந்ததும் காரில் இருப்பது குண்டுதான் என்று நூறுவீத நம்பிக்கையோடு இடத்தை விட்டு விலகினார்கள்.

திடீரென்று சல சலப்பு. குண்டுகளை கண்டுபிடித்து அழித்துவிடுவதில் பயிற்சி பெற்ற இராணுவப் பிரிவினர் வாகனத்தில் வந்து இறங்கினார்கள்.

"கூட்டமாக நிற்க வேண்டாம். எல்லோரும் போய்விடுங்கள்" என்று சொன்னார்கள்.

நாமும் மெல்ல நழுவி நடப்பதை அவதானிக்கக்கூடிய இடமாய்ப் பார்த்து நின்று கொண்டோம்.

வெடிக்குமோ, வெடிக்காதோ? என்று நெஞ்சுக்குள் திக்.திக்.

கார்க் கதவின் கண்ணாடிகள் உடைக்கப்பட்டு கதவுகள் திறக்கப்பட்டன. திறக்கப்பட்டு உள்ளே.முதலில் மேலோட்டமான ஆராய்ச்சி.

பின்னர் அடுத்த கட்ட முயற்சி. காரின் பின் ஆசனங்கள் வெளியே வந்து விழுந்தன. குண்டு இல்லை.

முன் ஆசனங்கள் அகற்றப்பட்டன. அங்கும் சந்தேகப்படும்படியாய் எதுவும் இல்லை. ஆராய்ச்சி தொடர்ந்தது.

இப்போது கார் ஏறக்குறைய பிரிக்கப் பட்டுவிட்டது.

காரின் நிலையைப் பார்க்க பரிதாபமாக இருந்தது.

என்றாலும் தற்போதைய நிலையில் தீர ஆராய்வது தவறு என்று சொல்ல முடியாது.

சக்கரங்களை இராணுவத்தினர் ஆராய்ந்து கொண்டிருந்தனர்.

அந்தத் தெருவின் வழியான போக்குவரத்தும் தடை செய்யப்பட்டு விட்டது. எங்கும் ஒரே பரபரப்பு. பதட்டம்.

முகத்துவாரம் இந்துக்கல்லூரி மாணவர்களுக்கும் செய்தி எட்டியது.

பின்புற மதில் வழியாகப் பாய்ந்து ஓடிக்கொண்டிருந்தார்கள்.

அயலில் உள்ள வீடுகளில் பரபரப்பு.

வீட்டுக்குள் இருந்தவர்கள் வெளியே பாய்ந்து ஓடிக்கொண்டிருந்தார்கள்.

அந்தப் பகுதியே ஆடிப்போய்விட்டது. எப்போது வெடிக்கும் என்று தெரியாத நிலை.

அப்போதுதான் காரை நோக்கி கையில் ஒரு பிளாஸ்டிக் கானுடன் ஒருவர் வந்து கொண்டிருந்தார்.

காரை நோக்கி-முகத்தில் அதிர்ச்சியோடு ஓட்டமும் நடையுமாக வந்து கொண்டிருந்தார்.

இடையிலே தடுக்கப்பட்டு, விசாரிக்கப்பட்டு, அவர் ஏதோ சொல்லி, பொக்கற்றில் இருந்து ஏதேதோ எடுத்துக் காட்டி விளக்குவது தெரிந்தது.

பின்னர் இராணுவ வீரர் ஒருவர் அவரைக் காருக்கு அருகே அழைத்து வந்தார்.

நமக்குப் புரிந்துவிட்டது. அண்ணர்தான் கார் உரிமையாளர்.

அவர் கையில் இருந்த பெற்றோல் கலன் விசயத்தை அறிய வைத்தது.

பெற்றோல் முடிந்திருக்க வேண்டும். அண்ணன் வாங்கிவரப்போயிருக்கிறார்.

காருக்கு அருகே அவரை அழைத்துச் சென்ற இராணுவ வீரர் காரின் சக்கரத்தை தீவிரமாய் ஆராய்ந்து கொண்டிருந்தவரிடம் அவரை அறிமுகப்படுத்தினார்.

வியர்வை சிந்த சக்கரத்தை ஆராய்ந்து கொண்டிருந்தவர் கார் உரிமையாளரை நோக்கி நிமிர்ந்து ஒரு பார்வை பார்த்தார்.

"நீர்தான் உரிமையாளரோ?"

கேட்டபடியே எழுந்தார்.

உரிமையாளர் முகத்தில் அசடு வழிந்தது. 'ஆம்' என்று தலையசைத்தார்.

அதுபோதும். எழுந்தவரின் கரம் உயர்ந்தது. உரிமையாளரின் முகத்தில் ஓங்கி ஒரே அறை. அத்தோடு விடவில்லை. நல்ல கவனிப்பு!

உரிமையாளர் பொறி கலங்கிப் போய் நின்றார். பின்னர் பிரிக்கப்பட்ட காரை பொருத்திக்கொண்டு உடனே இடத்தைக் காலி செய்ய வேண்டும் என்று இராணுவத்தினர் கூறினார்கள்.

எங்கோ சென்று ஒரு லொறியை பிடித்துவந்து, பிரிக்கப்பட்ட பகுதிகளை அள்ளிப் போட்டார்.

இப்போது பெற்றோல் போட்டாலும் கார் நகராது.

லொறியில் கட்டப்பட்டு இழுபட்டுச் சென்று கொண்டிருந்தது கார்.


சூழலைப் புரிந்து நடக்கத்தவறியதால் மகா செலவு. கவனிப்பும் கிடைத்தது. தேவையா இது?

நினைத்தபடியே மினி பஸ்சைத் தேடி நடந்தோம்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# சூர சங்காரம்

அலசுவது – இராஜதந்திரி



தீபாவளி- தமிழர்கள், குறிப்பாக இந்து சமயத்தவர்களுக்கு இப் பண்டிகை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

வாழ்வில் இருள் அகற்றி ஒளி யேற்றும் ஒரு பண்டிகையாகவே இந்து சமயத்தவர்கள் தீபாவளியைக் கருதுகிறார்கள்.

தீய அசுரசக்திகளை, இறைவன் தனது தேவ சேனையுடன் சென்று கொன்றழித்த வெற்றித் திருநாளாகவே தீபாவளி விளங்குவதாக இந்து சமய ஐதீகக் கதைகள் கூறுகின்றன.

முருகனை தமிழ்த்தெய்வம் என்று குறிப்பிடுவதுண்டு; இத்தகைய முருகனின் போர்க் கோலத்தை ஆறுமுகக் கடவுள் என்றே இந்துக்கள் வழிபடுகின்றனர்.

கையில் வேலுடனேயே இக் கடவுளின் திரு உருவம் சிருஷ்டிக்கப் பட்டுள்ளது. ஆனால் போர்க் கோலத்தில் காணப்படும் முருகக்கடவுளின் ஆறு முகங்களைக் கொண்ட வடிவம் பன்னிரு கரங்களையும், அக்கரங்கள் ஒவ்வொன்றிலும் பல்வேறுவகையான போர் ஆயுதங்களையும் கொண்டதாகக் காணப்படுகின்றது.

தேவ சேனாதிபதி என்றும் முருகக் கடவுளை இந்துக்கள் அழைப்பதுண்டு.

முருகன் ஒரு தமிழ்த் தெய்வமாக சித்தரிக்கப்படுவதால், முருகன் புகழ்பாடும் பாடல்கள் பல தமிழிலேயே காணப்படுகின்றன. அத்துடன் ஒவ்வொரு பாடலும், முருகனை ஒரு வீரதீரம் கொண்ட கடவுளாகவே சித்தரிப்பதாகவும் அமைந்து காணப்படுகின்றன.

இந்தியாவில் தமிழகத்திலேயே முருகக் கடவுளுக்கு அதிகளவில் கோயில்கள் காணப்படுகின்றன.

தமிழகத்திலுள்ள முருகக் கடவுளின் பிரதான கோயில்களாக திருத்தணிகை, பழமுதிர்ச்சோலை திருச்செந்தூர், திருப்பரங்குன்றம், சுவாமிமலை, பழனி என்பன விளங்குகின்றன.

முருகன் புகழ்பாடும் பாடல்கள் இத்தலங்களைக் கோயில்கள் என்று குறிப்பிடுவதை விட படைவீடுகள் என்றே வர்ணிக்கின்றன.

இதனால் தமிழகத்தின் பிரதான ஆறு முருகன் கோயில்களையும், 'ஆறுபடை வீடுகள்' என்றே இந்துக்கள் குறிப்பிடுவதுண்டு.

எனவே முருகக் கடவுளைக் கதாநாயகனாகக் கொண்டு பாடப் பட்டுள்ள 'கந்தபுராணம்' என்ற நூலில், அடியவர்களை வருத்திக் கொடுமைகள் புரிந்த சூரபத்மனையும், அவனது அசுர சேனையையும் சங்காரம், அதாவது துவம்சம் செய்யவே முருகக் கடவுள் தோன்றியதாகக் கூறப்படுகின்றது.

இக்கடவுள் சூர சங்காரத்துக்காக போட்டிருந்த பாசறைகளே ஆறு படைவீடுகள். அத்துடன் இறுதியாக சூரபத்மனை முருகக் கடவுள் அழித்தொழித்து வெற்றி கொண்ட படை வீடே தமிழகத்தின் தென் கேடியிலுள்ள திருச்செந்தூர் திருத்தலம் என்றும் கந்தபுராணம் கூறுகின்றது.

சூரபத்மனைக் கொன்றபின் இலங்கைத் தீவின் தென் கோடியிலுள்ள கதிர்காமத்துக்கு முருகன் மயில் மீது பறந்து வந்து, அங்கே தன் கண்ணில் பட்ட வள்ளி என்ற அழகிய வேடுவப் பெண்ணை மணம் புரிந்து, கதிர்காமத் திலேயே தங்கிவிட்டதாக கந்த புராணம் மேலும் கூறுகின்றது.

இலங்கையிலும் முருகக் கடவுளுக்கு கோயில்கள் பல காணப்படுகின்றன. வல்வெட்டித்துறையை அண்டிய தொண்டமானாறுப் பகுதியில் செல்வச் சந்நிதி என்ற பிரசித்தி பெற்ற முருகன் ஆலயம் காணப் படுகின்றது.

இது தவிர யாழ்ப் பாணத்தில் உள்ள நல்லூர்க் கந்தசுவாமி ஆலயம் உட்பட யாழ்குடா நாட்டிலும், மற்றும் வடபகுதியின் மூலைமுடுக்குகளிலெல்லாம் முருகன் கோயில்கள் காணப்படுகின்றன.

இன்று இலங்கையின் வடக்கு-கிழக்கு மாகாணங்கள் யுத்த பூமிகளாகவே காணப் படுகின்றன.

ஆனால் பல வருடங்களுக்கு முன்னர் யாழ்குடா நாட்டினர் தொண்டமானாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்திலிருந்து கால் நடையாக தென்னிலங்கையின் கதிர்காமம் வரை பாதயாத்திரைகளை மேற்கொண்டிருந்தனர்.

இப்பாதயாத்திரை செல்வச் சந்நிதியிலிருந்து ஆரம்பமாகும். பின்னர் முல்லைத்தீவு ஊடாக இலங்கையின் கிழக்குக் கரையோரமாக திருகோணமலையைச் சென்றடையும். தொடர்ந்து மட்டக் களப்பையடைந்து, பொத்துவில், மற்றும் யாலவனப்பிரதேசத்தினூடாக இந்த யாத்திரை கதிர்காமத்தைச் சென்றடையும்.

அண்மைக்காலம் வரை இந்த யாத்திரை இடம் பெற்றிருந்தது.

அத்துடன் இன்று யுத்த பூமியாகக் காணப்படும் வடக்கு-கிழக்குப் பகுதியின் அடர்ந்த வனப்பிரதேசங்களுக்கூடாக கிராமங்கள், மற்றும் நகர்ப்புறங்கள், காட்டுப்பகுதிகளில் அமைந்துள்ள தமிழ்க்கடவுள் முருகனின் கோயில்களைத் தரிசித்தபடி யாத்திரிகர்கள் கதிர்காமத்தைச் சென்றடைந்திருந்தனர்.

மட்டக்களப்புப் பகுதியிலும், சித்தாண்டி முருகன் ஆலயம், மண்டூர் கந்தன் ஆலயம் என்பனவும் கிழக்கிலங்கையில் உள்ளவர்களின் முருக பக்திக்கு எடுத்துக்காட்டாக இருக்கின்றன.

எனவே தமிழ்க் கடவுள் முருகனின் சரித்திரப் பிரசித்தி பெற்ற வழிபாட்டுத் தலங்கள் வடக்கே செல்வச் சந்நிதி முதற்கொண்டு தெற்கே கதிர்காமம் வரை பெருமளவில் காணப்படுகின்றன.

வடக்கு-கிழக்குப் பிரதேசம் தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய பூமி என்பதைப் பறைசாற்றும் வரலாற்றுச் சான்றுகளாகவும் இந்த ஆலயங்கள் காணப்படுகின்றன.

ஒவ்வொரு ஆண்டிலும் ஐப்பசி மாதத்தில் தீபாவளிப்பண்டிகையைத் தொடர்ந்து வருவது கந்தசஷ்டி விரதமாகும்.

இந்த விரதத்தின் இறுதி நாளன்றே சூரசங்காரத் திருவிழா முருகன் ஆலயங்களில் இடம் பெறும்.

சூரபத்மனின் அசுரக் கோலத்தைச் சித்தரிக்கும் மரத்தினாலான பொம்மைகளையும், மறுபுறத்தே முருகக் கடவுளின் திருவுருவத்தையும் சுமந்துநின்று, யுத்தம் ஒன்றை நடத்துவது போல, அடியார்கள் சூர சங்காரத் திருவிழாவை நடத்துவர்.

அத்துடன், அத்திருவிழாவின் போது இடம் பெறும் நிகழ்வுகள், அசுரரை, முருகக்கடவுள் அழித்து அடியவர்களைக் காப்பாற்றிய புராணக்கதையை மையமாகக் கொண்டதாகவே அமைந்திருக்கும்.

எனவே சூரசங்காரத் திருவிழாவை ஒரு யுத்தத் திருவிழாவாகவே இந்துக்கள் ஐப்பசி மாதத்தில் கொண்டாடி வந்தனர்.

ஆனால் இந்த ஆண்டு வடக்கே தீபாவளிப் பண்டிகைக்கு இரு தினங்கள் முன்னதாக பூநகரியில் இடம் பெற்ற யுத்தம், இதுவரை காலமும் திருவிழாவாக கற்பனை வடிவில் இருந்த சூரசங்காரம், நிஜமாகவே இடம் பெற்றுவிட்டதோ என்று எண்ணத் தோன்றும் வகையிலேயே அமைந்திருந்தது.

'தவளைப் பாய்ச்சல்' என்ற பெயரில் பூநகரியின் இராணுவ, கடற்படை நிலைகள் மீது புலிகள் மேற்கொண்ட திடீர் பாய்ச்சல், பெரும் உயிர்ச்சேதத்தை ஏற்படுத்தியதாகக் காணப்படுகின்றது.

யாழ்குடா நாட்டைச் சுற்றி வளைக்கும் வகையில் ஒரு கேந்திர முக்கியத்துவம் மிக்க பிரதேசமாகவே பூநகரியை இராணுவம் கருதுகின்றது.

இதன்காரணமாகவே இங்கு பெருமளவில் கடற்படையினரும் இராணுவத் துருப்பினரும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தனர்.

அத்துடன் இரவையே பகலாக்கும் அதிசக்திவாய்ந்த மின் வெளிச்சங்கள் பூநகரி இர்ாணுவ முகாமின் சுற்றாடல்களில் போடப்பட்டிருந்தன.

புலிகளின் நடமாட்டத்தைக் கண்காணிக்கக் கூடிய வகையில் நவீன ராடர் சாதனம் (Radar equipment) ஒன்றையும் பூநகரிப் படையினர் கொண்டிருந்தனர்.

இவை தவிர இருட்டில் நட



“போர் ஒன்றில் எவருமே வெற்றி காண்பதில்லை. இழப்புக்களையே அடைகின்றனர்.”

-மறைந்த ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசா-

மாட்டங்களைக் காண்பிக்கக்கூடிய கருவிகளும் (Night Vision Equipment) அவர்களிடம் இருந்தன.

இவையாவற்றுக்கும் மேலாக எதிர்ப்புக்களை சமாளிக்கக்கூடிய வகையில் அதிநவீன ஆயுதங்களும் பல்வேறு ரகங்களிலும் பூநகரியில் இருந்தன.

ஆனால் இந்த நவீன சாதனங்கள், ஆயுதங்கள் ஆகியனவற்றுக்கு மத்தியிலேயே புலிகளின் தவளைப் பாய்ச்சல் ஒப்பரேஷன் பூநகரியில் இடம்பெற்றிருந்தது.

கடந்த பத்து வருடகாலத்தில் புலிகளினால் மேற்கொள்ளப்பட்ட மிகப் பெரும் தாக்குதல் நடவடிக்கையாகவே பூநகரிச் சம்பவம் விளங்கியிருந்தது.

ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசா தமது வாழ்நாளில் நிகழ்த்திய உரையொன்றில், “போர் ஒன்று இடம்பெறும் பட்சத்தில் எவருமே வெற்றியையோ அல்லது தோல்வியையோ தழுவி விடுவதில்லை. போரில் ஈடுபடும் எத்தரப்பினரும் இழப்புக்களையே அடைகின்றனர்” என்று கூறியிருந்தார்.

எனவே பூநகரித்தாக்குதல் குறித்து புலிகளும், படையினரும் தத்தமக்கே வெற்றியென தமது இழப்புக்களைக் கூட்டிக்குறைத்து அறிக்கைகளை வெளியிடலாம்.

ஆனால் இரு தரப்பிலும் பெருமளவில் உயிர்ச்சேதங்கள் இடம் பெற்றிருப்பதை எவரும் மறுத்துவிட முடியாது.

பாதுகாப்பமைச்சின் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வணசிங்க பூநகரித்தாக்குதல் குறித்து இராணுவத் தலைமையகத்தில் பத்திரிகையாளர் மகாநாடொன்றை நடத்தியிருந்தார்.

அப்போது அவர் பூநகரியில் இடம் பெற்ற உயிரிழப்புக்கள் குறித்து பெரும் கவலை வெளியிட்டிருந்ததார்.

ஜெனரல் ஹமில்டன் வணசிங்கவின் சகோதரரின் மகனான இளம் இராணுவ மேஜர் ஒருவரும் பூநகரியில் கொல்லப்பட்டிருந்தார்.

ஜெனரல் வணசிங்கவுக்கு இது அண்மைக்காலங்களில் ஏற்பட்ட இரண்டாவது பெரும் இழப்பாகும். ஏனெனில் ஒப்பரேஷன் யாழ்தேவியின் போது அவரது சகோதரியின் மகனான இராணுவ அதிகாரி ஒருவரும் கொல்லப்பட்டிருந்தார்.

இந்த இரு இழப்புக்களுக்கும் முகங்கொடுத்த மனச்சுமையுடன் காணப்பட்ட ஜெனரல் வணசிங்க “உடமைகளை இழந்தால் மீளப்பெற்றுவிடலாம். ஆனால் உயிர்களை இழந்தால் அவற்றுக்கு ஈடாக எதனைத்தான் பெறமுடியும்?” என்று பெருமூச்சுடன் கூறியிருந்தார்.

பூநகரித் தாக்குதலையடுத்து புலிகளுக்கும், படையினருக்கும் பலத்த

“உடமைகளை இழந்தால் மீளப் பெறலாம். உயிர்களை இழந்தால் அவற்றுக்கு ஈடாக எதனையும் பெறமுடியாது.”

-ஜெனரல் ஹமில்டன் வணசிங்க-

உயிரிழப்புக்கள் தோன்றியுள்ள நிலையில் வடக்கிலும், தெற்கிலுமாக நாடுமுழுவதிலும் சோகமயமான சூழ்நிலையே காணப்படுகின்றது.

வடக்கே இளவயதினர் பலர் ஆண், பெண் வேறுபாடின்றி பெருமளவில் கொல்லப்பட்டுள்ளனர். தெற்கிலும் கிராமப்புறங்களைச் சேர்ந்த அப்பாவிச் சிங்கள இளைஞர்கள் நூற்றுக்கணக்கில் கொல்லப்பட்டுள்ளனர்.

இராணுவ நடவடிக்கைகள் இவ்வாறு மாதத்துக்கு மாதம் நூற்றுக்கணக்கில் உயிர்ப்பலி எடுக்க ஆரம்பித்துள்ளமை, நாட்டில் அசுரத்தனம் தாண்டவமாட ஆரம்பித்துள்ளதையே புலப்படுத்துவதாக இருக்கின்றது.

இந்நிலையில் நாட்டில் இன்று இருவேறு போராட்ட சக்திகளாக விளங்கி நிற்கும் இலங்கை அரச தரப்பினரும், தமிழீழ விடுதலைப் புலிகளும் தமது மூர்க்கத்தனமான போக்கைக் கைவிட வேண்டியது மிகவும் இன்றியமையாததாகின்றது.

தமிழீழ விடுதலைப்புலிகளும், அரச தரப்பினரும் தத்தமது பக்கமே நியாயமிருப்பதாகக் கூறிக்கொண்டு, தமது நியாயங்களை நிலை நிறுத்த யுத்தத்தில் ஈடுபட்டு நிற்கின்றனர்.

ஆனால் அவர்களின் இந்த யுத்தம் நாட்டில் அநியாயமாக உயிர்ச் சேதங்களையே ஏற்படுத்துவதாக இருக்கின்றது.

இருசாராரும் தத்தமது பக்கம் நியாயமிருப்பதாகக் கூறிக் கொள்ளலாம். ஆனால் எந்தவொரு யுத்தத்திலும் நீதியும், தர்மமுமே எப்போதும் வெற்றி பெற்று வந்துள்ளன.

இந்து சமய இதிகாசங்களும், புராணங்களும் அதர்மம், அநீதி என்பன போரினாலேயே வெல்லப் பட்டுள்ளன என்பதைக் கூறி நிற்கின்றன.

இராமாயணம், மகாபாரதம் ஆகிய இதிகாசங்களில் தெய்வங்களே மானிட உருவில் வந்து யுத்தங்களை நடத்தியதாகக் கூறப்பட்டுள்ளது.

மகாபாரதக் கதையில் வில்வித்தையில் தலைசிறந்த வீரனான அர்ச்சுனன் போர்க்களத்தில் தனது எதிரிகளைக் கொல்வதற்கு மனமின்றி சோர்வுடன் நிற்கின்றான்.

ஆனால் அவனது தேர்ச்சாரதியாக வடிவமெடுத்து வந்திருந்த கிருஷ்ணபரமாத்மா, “இது யுத்தம்; போர்க்களம் புகுந்துவிட்டாய். தர்மம் நிலைநாட்டப்பட வேண்டும்; அதர்மம் அழிக்கப்படவேண்டும். தயங்காமல் வில்லை வளைத்து அம்பை விடு” என்று அர்ச்சுனனைத் தட்டிக் கொடுத்து தாமே முன்னின்று போரை நடத்துவதாக மகாபாரதக் கதை அமைந்திருக்கின்றது.

மகாபாரதப் போர் இடம் பெற்ற குருஷேத்திரம் என்ற போர்க்களத்தில், போர்க்காலச் சூழ்நிலையிலேயே 'பகவத் கீதை' என்ற தர்ம உபதேசம் கிருஷ்ண பகவானால் உபதேசிக்கப் பட்டிருந்தது.

இராமாயணத்திலும் இராம பிரான் என்ற தெய்வம் மனித வடிவில் வந்து இலங்கையை ஆண்ட இராவணன் என்ற அசுரனைப் போர் புரிந்து கொன்றதாகக் கூறப்



படுகின்றது.

இன்று இலங்கையில் இடம் பெறும் யுத்தத்தில் இரதரப்பிலும், கெடுபிடிகள், அநீதிகள், அடக்குமுறைகள் என்பன மலிந்து கிடக்கின்றன.

இந்நிலையில் தமது நிதானத்துக்கும், சிந்தனைக்கும் இடந்தந்து தர்மம் எது? அதர்மம் எது? நீதி எது? அநீதி எது? என்று அரச தரப்பினரும் புலிகளும் ஆற அமர இருந்து ஆராயவேண்டியதே இன்றைய காலகட்டத்தின் தேவையாக இருக்கின்றது.

வன்முறை, அடக்குமுறை, இனவெறி, மதவெறி, வர்க்க வேறுபாடு, பிரதேச வேறுபாடு போன்ற கொடிய அரக்கத்தனமான நிலைப்பாடுகளை, தமது மதியினாலும், ஜனநாயக ரீதியிலான அணுகுமுறைகளினாலும் புலிகளும் அரச தரப்பினரும் சங்காரம் செய்ய வேண்டியதே இன்று இன்றியமையாததாகி இருக்கின்றது.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

# உங்கள் முக அழகு உங்கள் விரல் நுனியில்!

## இளமையான முக அழகுக்கு எளிமையான வழிகள்!

லேடீஸ் ஸ்பெசல்

உங்கள் முகத்தில் சுருக்கங்கள் தோன்றுகின்றனவா? தசைகள் தளர்ந்து தொங்குகின்றனவா? நீங்களாகவே இவற்றைப் போக்கிவிடலாம். மருத்துவரை அணுகவோ மருந்துகளைத் தடவவோ வேண்டியதில்லை. உங்கள் விரல்களைப் பயன்படுத்தியே இக்குறைபாடுகளை நீக்கிவிடலாம். மிகச் சுலபமான முறையில் பயிற்சியினை மேற்கொண்டால் இளமைத் தோற்றத்தைப் பெறலாம்.

சருமத்தின் தன்மைகளை பல ஆண்டுகள் ஆராய்ச்சி செய்து வரும் டாக்டர் ரொபேட் வில்னர் எழுதியுள்ள நூலில் பல உபயோகமான முக வசீகரம் தொடர்பான எளிய பயிற்சி முறைகள் தரப்பட்டுள்ளன.

"உங்கள் முகத்தில் ஏற்படும் சுருக்கங்களையும் தொய்வுகளையும் குறிப்பிட்ட சில இடங்களை விரல்களினால் அழுத்தியும் தட்டியும் பயிற்சி செய்தால் போதுமானது. நல்ல பலன் கிடைத்துவிடும். என்கிறார் டாக்டர் வில்னர்.

இதற்கு மருத்துவருடைய ஆலோசனைகளோ மருந்துகளோ தேவையில்லை, என்று கூறும் அவர், "என்னுடைய பயிற்சி முறையினால் முகத்திலுள்ள தசை நார்கள் இறுக்கமடைவதுடன் சதைகளும் தளர்ச்சியடையாமல் விறைப்படைகின்றன. முகத்தில் சகல அங்கங்களும் வழமையான தன்மையினை முழுமையாகப் பெறுகின்றன" என்கிறார்.

முகத்தில், குறிப்பிட்ட சில பகுதிகளில் குறிப்பிட்ட காலத்துக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் அல்லது தட்ட வேண்டும். முதல் 5 வாரங்களுக்கு வாரத்துக்கு மூன்று தடவைகள் இந்தப் பயிற்சி தொடர வேண்டும். அடுத்துவரும் 3 வாரங்களுக்கு வாரத்துக்கு இரு தடவைகள் பயிற்சி என்றிருக்க வேண்டும். பிறகு வரும் இருவாரங்களுக்கும் வாரத்துக்கு ஒரே தரம் மட்டும் பயிற்சி பெற்றால் போதும்.

இத்தகைய பயிற்சியினால் பெறப்படும் பலாபலன்களின் அடிப்படையில், தேவைப்பட்டால் இருவாரங்களுக்கு ஒரு தடவை மட்டும் பயிற்சியினை மேற்கொள்ளலாம்.

இத்துடனுள்ள படத்தினைப் பாருங்கள். ஆங்கில அரிச்சுவடியில் A முதல் Q வரை முக்கியமான இடங்கள் காட்டப்பட்டுள்ளன. இவ்விடங்களில்தான் குறிப் பிட்ட தசை நார்களும் நரம்புகளும் உள்ளன. முகத்தின் இரு புறமும் ஒரே எழுத்துக்கள் குறிப்பிடப்பட்டுள்ள அதே இடத்தில் விரல் நுனியினால் ஒரே சமயத்தில் தட்டவோ அல்லது அழுத்தவோ வேண்டும்.




### பயிற்சிகள்

1. **நெற்றியில் சுருக்கம் கண்டால்-**
   A மற்றும் C அடையாளமிடப்பட்ட பகுதிகளை- அவ்விடங்களில் தளர்வினை ஏற்படுத்துவதற்காகத் தடவிக் கொடுங்கள். இரண்டு முதல் மூன்று நிமிடங்கள் தடவுதல் நீடிக்க வேண்டும். பின்னர் B அடையாளமிட்ட இடத்தில் 30 நொடிகள் அழுத்தம் கொடுங்கள்.
2. **மூக்கில், கண்களுக்கிடையிலான மையத்தாழ்வுப் பகுதியில் சுருக்கம் காணப்பட்டால்-**
   B மற்றும் F பகுதிகளைத் தளர்த்தித் தடவுங்கள். 2 அல்லது 3 நிமிடங்கள் தடவி விட்டதன் பின்னர் C அடையாளத்தில் அழுத்தம் கொடுக்க வேண்டும். இது ஒரு நிமிடம் நீடிக்கலாம்.
3. **கண் இமை மற்றும் புருவத்தில் சுருக்கம் ஏற்பட்டால்-**
   C மற்றும் D பகுதிகளில் 1/2 நிமிடம் அழுத்தம் தரலாம்.
4. **கண்களின் வெளிப்புறத்தில் சுருக்கம் விழுந்திருந்தால்-**
   E,O மற்றும் H அடையாளங்களில் ஒவ்வொன்றையும் 3 நிமிடங்கள் தடவித்தளர்த்துங்கள். 60 முதல் 90 நொடிகள் வரை Cயில் அழுத்தம் கொடுங்கள் அல்லது தட்டுங்கள்.
5. **கண்களுக்குக் கீழே சுருக்கங்கள் தென்பட்டால்-**
   G மற்றும் H பகுதிகளில் அழுத்தம் கொடுங்கள்.
6. **முகத்தில் கண்களுக்குக் கீழே தாடை வரை சுருக்கம் காணப்படுமானால்-**
   I மற்றும் O அடையாளங்களில் 3 நிமிடங்கள் தளர்வினை ஏற்படுத்தி, N,Q அடையாளங்களில் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு நிமிடம் வரை அழுத்தம் கொடுங்கள்.
7. **மூக்கின் நுனியிலிருந்து கண்வரை படர்ந்து தாடைவரை சுருக்கங்கள் விழுந்திருந்தால்-**
   O அடையாளத்துக்குரிய பகுதியில் 3 நிமிடங்கள் தளர்வினைக் கொடுத்து N,Q அடையாளங்களுக்கு அழுத்தம் கொடுத்தல் வேண்டும். இது ஒரு நிமிடம் நீடிக்கலாம்.
8. **மூக்குத்துவாரத்தின் கீழ் வாயினைச் சுற்றி நாடி வரை சுருக்கம் கண்டால்-**
   J மற்றும் O பகுதிகளுக்கு 3 நிமிடம் தளர்வினை ஏற்படுத்தி Q,N ஆகியவற்றுக்கு தலா ஒரு நிமிட நேரம் அழுத்தம் கொடுக்கப்பட வேண்டும்.
9. **வாயின் இரு புறங்களிலும் சுருக்கமோ தொய்வோ காணப்பட்டால்-**
   N,Q மற்றும் P அடையாளங்களுக்கு 3 நிமிடம் தளர்வு ஏற்படுத்தி K அடையாளத்துக்கு ஒரு நிமிட அழுத்தம் தரப்படவேண்டும்.
10. **மேல் உதட்டுக்கும் மூக்குக்குமிடையில் தசைத் தொய்வோ சுருக்கமோ தென்பட்டால்-**
    N,M அடையாளங்களுக்கு 3 நிமிடங்கள் வரை தளர்வு கொடுத்து L,K மற்றும் O அடையாளங்களில் 30 நொடிகள் அழுத்தம் கொடுக்க வேண்டும்.
11. **கீழ் உதட்டுக்கும் நாடிக்குமிடையில் தொய்வு ஏற்படுமானால்-**
    P மற்றும் Q அடையாளங்களுக்கு 3 நிமிடங்கள் தளர்வினைத் தந்து, N அடையாளத்தில் ஒரு நிமிடம் அழுத்தம் கொடுத்தல் வேண்டும்.

## சமைப்போம் சுவைப்போம்

### 'றோல்ஸ்' செய்யும் முறை — தருவது சுகந்தினி

இறைச்சி அல்லது காய்கறி மற்றும் உருளைக்கிழங்கு போன்றவற்றை உள்வைத்துத் தயாரிக்கப்படும் 'றோல்ஸ்' மிகச் சுவையாக இருக்கும். மாலையில் தேனீருடனும் இரவு உணவுடன் ஒரு இணை உணவாகவும் உண்ணலாம்.

இறைச்சியை உள்வைத்துத் தயாரிக்கும் 'றோல்ஸ்' செய்யும் முறையைப் பார்ப்போம்.

**தேவையானவை:**

மைதாமா- 1/2 கிலோ
இறைச்சி- 1/2கிலோ
உ.கிழங்கு- 1/2 கிலோ
வெங்காயம்- 100 கிராம்
பச்சை மிளகாய்- 50 கிராம்
மிளகுதூள்- 1/2 மேசைக்கரண்டி அல்லது மல்லி கலந்த மிளகாய்த்தூள்- 1 மே.கரண்டி
முட்டை- 3
தேங்காய்-(முதற்பால்,-1/2கப்
றஸ்க்தூள்- 4 மே.கரண்டி
உப்பு -அளவாக
மஞ்சள்தூள்- அளவாக
எண்ணை- அளவாக

**செய்முறை:**

இறைச்சியை மிகச்சிறு துண்டுகளாக வெட்டிக் கழுவி நன்றாக வேகவைத்துக் கொள்ளுங்கள். இதே போல் உருளைக் கிழங்கையும் வேக வைத்து தோல்நீக்கி சிறு சிறு துண்டுகளாக வெட்டிக் கொள்ளவும்.

வெங்காயம், பச்சை மிளகாய் ஆகியவற்றை அரிந்து கொள்ளவும். ஒரு வாணலியில் எண்ணையை ஊற்றி வெங்காயத்தையும் பச்சை மிளகாயையுமிட்டு வதக்கவும். அதே வாணலியில் அரிந்த இறைச்சியையும் கிழங்கையும் போட்டு வதக்கவும். மிளகாய்த்தூள் அல்லது மிளகுதூளை அதனுள் விட்டுக் கிளறவும். பின்னர் தேங்காய்ப் பாலையும் விட்டுக் கிளறி உப்பு, மஞ்சள் தூள் ஆகியவற்றையுமிட்டு நீர்த்தன்மை வற்றியபின் இறக்கி வைக்கவும்.

மாவை தண்ணீர்விட்டு தோசைக் கரைசல் பதத்துக்குக் கலக்கிக் கொள்ளவும். தோசைக் கல்லை அடுப்பில் வைத்து மாக்கரைசலை கரண்டியால் எடுத்து தோசை போன்று



சுட்டு அவற்றை எடுத்து வைத்துக் கொள்ளவும்.


முட்டைகளின் வெள்ளைக் கருவை மட்டும் தனியாக ஒரு பாத்திரத்தில் எடுத்து ஒன்றாகக் கல்கிக் கொள்ளுங்கள்.

தோசையை ஒவ்வொன்றாக ஒரு பலகையில் வைத்து அதன் மேல் இறைச்சிக் கறியை அளவாக வைத்து தோசையைச் சுருட்டி உருட்டவும். உள் வைத்த கறி வெளியே கொட்டாமல் தோசையின் இரு புறமும் உள் மடித்து மூடிவிடவும். முட்டைக்கலவையில் இதனைத் தோய்த்து, றஸ்க்தூளில் உருட்டி எடுத்த பின் எண்ணையில் இட்டுப் பொன் நிறமாகப் பொரித்தெடுத்துப்பரிமாறுங்கள்.

மாமிசம் உண்ணாதவர்கள் இறைச்சியைத் தவிர்த்து; கிழங்கு, அல்லது காய்கறிகளை மட்டும் வைத்தே வெஜிட்டபிள் றோல்ஸ், அல்லது பொட்டாட்டோ றோல்ஸ் ஆகியவற்றைத் தயாரிக்கலாம்.

## நீங்களும் தைக்கலாம்

### 1 வயது குழந்தைகளுக்கான காற்சட்டை — திரு




படத்திற் காட்டியவாறு 16" நீளமும் 9" அகலமும் உள்ள துணியை எடுத்து சரி பாதியாக மடித்து ABCD எனப் பெயரிடுக.

Cயிலிருந்து 2" Eவரை எடுக்க. பின் Dயிலிருந்து 4" Fவரை எடுத்து Eயையும் Fஐயும் உள்நோக்கி இணைத்து கால் அளவை வெட்டுக.

பின் Eயையும் Fயையும் தனித்தனியே மெல்லியதாகத் தைத்த பின் பக்கப் பொருத்து AFயையும் இணைத்துப் பொருத்துக. பின் C Eயையும் இணைத்துப் பொருத்துக.

இறுதியாக ABயிலிருந்து 2" மடித்து இடுப்பு உள் நோக்கி மடித்துத் தைத்து உள்ளே இலாஸ்திக் போடலாம்.

இதில் சிறுவர்களின் கால்களுக்கு நாம் விதவிதமான லேஸ்கள் வைத்தும் அலங்காரம் செய்யலாம்.

## எந்தப் புறத்தில் தூக்க வேண்டும்!



பெண்கள் பெரும்பாலும் தங்கள் குழந்தைகளை இடப்பக்கமாகவே அணைத்துத் தூக்கிச் செல்லுகின்றனர். அந்த நிலையில்தான் குழந்தைகள் அமைதியாக உள்ளனர். வலப்புறம் மாற்றினால் அழ ஆரம்பிக்கின்றன. இடப்புறம் உள்ள இருதயத்தின் துடிப்பானது குழந்தைக்கு தாலாட்டைப் போன்ற சுகத்தைத் தருகிறது. ஆனால் வலப்புறம் இருக்கும் போது இதயத் துடிப்புக் கேட்காததால் அவை அழுகின்றன.

## சிரித்தால் பிடிக்கும்

அமெரிக்காவில் நியூஜேர்சி மாநிலத்தில் 3 மாத குழந்தைகளை ஆராய்ந்தார்கள்.



அவற்றுக்கு சந்தோசமான சிரித்த முகங்களே மிகவும் பிடித்துள்ளன.

சோகமான கோபமான முகங்களைக் கண்டால் அவை வெறுக்கின்றன என்று கண்டறிந்துள்ளார்கள்.

## வீட்டுக் குறிப்புகள்



உருளைக்கிழங்கைத் தோல் சீவாமல் அப்படியே சமைத்துச் சாப்பிடுங்கள். தோலில் தான் அதிக சத்து உள்ளது. தோலை மட்டும் தனியாகச் சீவி, எண்ணையில் போட்டு பொரித்தெடுத்து உப்பு, மிளகுத்தூள் கலந்து சாப்பிடலாம். சுவையாக இருக்கும்.


சிறு தீக்காயம் ஏற்பட்டுவிட்டால் உடனே பதறியடித்து அனைவரையும் பயமுறுத்தி விடாதீர்கள். தீப்புண் ஏற்பட்ட இடத்தில், ஐஸ்கட்டியை சிறிது நேரம் வைத்திருங்கள். தேன் இருந்தால் அதையும் தீப்புண் மீது பூசி விடுங்கள். கொப்பளம் ஏற்படாமல், உடனே ஆறிவிடும். ➡





⬆ பூச்சாடியில், பூ அலங்காரம் செய்யும் போது, அழுத்தமான, வெளிர்நிறமான பூக்களை கலந்து வைக்கவும். அழுத்தமான நிறமுள்ள பூக்களின் நிறம் விரைவில் மாறாமல் இருக்க, இந்தப் பூக்களை முதலில் பச்சை தண்ணீரில் முக்கி எடுக்கவும். பிறகு வெது வெதுப்பான நீரில் முக்கி எடுத்து, நன்றாக தண்ணீரை வடிகட்டி விட்டு பூச்சாடியில் வைக்கவும். நாள் முழுக்க புதுப்பூக்கள் போல் இருக்கும்.

உங்களது சட்டை (டீ சர்ட்) சிறியதாகி விட்டதா? சட்டையின் நிறத்துக்குப் பொருத்தமாக இருக்கும்படி கடும் நிறத்திலான நிறத் துணியை எடுத்து, படத்தில் உள்ளது போல் இடுப்பு, கைப் பகுதிகளில் இணைத்து தைத்து விடவும். புது சட்டை போல் மாறிவிடும். இன்னும் சிறிது காலத்திற்கு உபயோகப்படுத்தலாமே! ⬇



குளிக்கும் தொட்டியில் (பாத்டப்) குளிக்கும் பழக்கமுள்ளவர்கள், குளிக்கும் போது ஒரு பிளாஸ்டிக்கால் ஆன தலையணையை தலைக்கு அடியில் வைத்துக் கொண்டு குளிக்கவும். இதனால் ரிலாக்சாக படுத்தபடி குளிக்க முடியும். தொட்டியில் வெந்நீர் நிரப்பி குளித்து பாருங்கள். உடல் அசதி எல்லாம் இருந்த இடம் தெரியாமல் போய்விடும்.

## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

முதற்பரிசு - பட்டுச்சேலை
ஆறுபேருக்கு இல்ல உபயோகப் பொருட்கள் ஆறுதல் பரிசுகளாக காத்திருக்கின்றன.

மகளிர் மட்டுமே பங்குகொள்ளும் இப்போட்டியில் பங்கு கொள்வதும் சுலபம். பரிசுகளை பெறுவதும் மகா சுலபம்.

முரசு 9 முதல் தொடர்ந்து 27வது வரை (17 முரசுகள்) லேடீஸ் ஸ்பெசல் தரும் விடயங்களை அவதானமாய் படித்துவாருங்கள்.

பின்னர் உங்களை நோக்கி கேள்விகள் தரப்படும். ஆக பதினைந்து கேள்விகள் மட்டும்.

சரியான விடை எழுதுவோரில் ஏழு பேரை பிரபல பிரமுகர் ஒருவர் தெரிவு செய்வார்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# இராட்சத தேனீக்களின் படையெடுப்பு
# கால்நடைகளில் தொடங்கி மனிதரில் முடிந்தது!



அமெரிக்காவில் அரிசோனா மாநிலத்தில் கடந்த மாத நடுப்பகுதியில் கொலை வெறி கொண்ட இராட்சத தேனீக்களின் படையெடுப்பால் பல அநர்த்தங்கள் ஏற்பட்டுள்ளன.

ஆட்டைக்கடித்து மாட்டைக் கடித்து, இறுதியில் மனிதனையே கடிக்கும் என்று சொல்வதற்கேற்ப பல கால்நடைகள் இந்தத் தேனீக்களால் கொல்லப்பட்டுள்ளன. இரு மனிதர்களும். இந்தத் தேனீக்களின் படையெடுப்புக்குப் பலியாகியுள்ளனர்.

என்றிக்கோ கார்சியா கொன்ஸலாஸ் என்ற 63 வயதுடைய விவசாயி இந்த இராட்சதத் தேனீக்களின் தாக்குதலிலிருந்து தப்ப முடியாமல் துடிக்கத் துடிக்க உயிர்துறந்தார்.

இவருக்கு உதவுதற்காகச் சென்ற இவருடைய நண்பர் மரியோ சன்ரோஸ் மார்ட்டின்ஸ், சில தேனீக்களின் கொட்டத்தை வாங்கிக் கொண்டு ஓட்டமெடுத்து தனது மோட்டார் வண்டிக்குள் தஞ்சம் புகுந்து தப்பிக்கொண்டார்.

கோபம் கொண்ட தேனீக்கள் மோதியதில் தனது மோட்டார் வண்டியின் கண்ணாடிகள் உடைந்து விடக் கூடுமோ என்று பயந்தாராம். பூட்டிய கண்ணாடிகளுக்கூடாக தனது நண்பர் தேனீக்களின் கொட்டுதல் தாங்காமல் தவித்து இறந்ததை, செய்வதறியாது பார்த்துக் கொண்டிருந்தாராம்.

தங்கள் தாக்குதலை முடித்துக் கொண்டு தேனீக்கள் இடம் பெயர்ந்ததும் என்றிக்கோவின் உயிரற்ற சடலத்தை எடுத்துக் கொண்டு மருத்துவமனை சென்றுள்ளார். அளவுக்கு அதிகமாக அவரின் உடல் ஊதியிருந்தது. மருத்துவர்கள் பரிசோதித்த போது என்றிக்கோவின் உடலில் மொத்தம் 4,700 காயங்கள் காணப்பட்டன.

"அருகிலுள்ள நகரத்தில் பண்ணைக்கு வேண்டிய பொருட்களை வாங்கிக் கொண்டு மோட்டார் வண்டியில் திரும்பும் போது, இருண்ட புகார் ஒன்று மிக வேகமாக வருவதை அவதானித்தேன். பயங்கரமான புதிய ஓசையும் கர்ண கடூரமாகக் கேட்டது. வந்த புகார் வயலில் இறங்கியதைக் கண்டேன். என்றிக்கோவை அந்தப் புகார் சூழ்ந்ததைக் கண்டு பயந்தேன். அதே வேளை என்றிக்கோவும் பயங்கர அவலக் குரல் எழுப்பினான். ஏதோ விபரீதம் நடக்கிறது என்பதைக்கண்ட நான், வண்டியை விட்டு இறங்கினேன். சில அடிகள்தான் என்றிக்கோவை நோக்கி முன்னேறினேன். அப்போது தான் கருவண்டுகளை ஒத்த பூச்சிகள் என்னை நோக்கி வருவதைக் கண்டேன், தாமதியாமல் பின் சென்று மோட்டாருக்குள் ஏறிக் கொண்டேன். இதற்குள் இரண்டு மூன்று பூச்சிகள் என்னைக் கொட்டிவிட்டன.

"தாங்க முடியாத வலியுடன் வாகனத்தின் கண்ணாடிகளை உயர்த்தி விட்டேன். எனது நண்பன் துடியாய்த் துடிப்பதைப் பார்த்து செய்வதறியாது சும்மா இருந்தேன்."

என்று தனது பயங்கர அனுபவத்தை விபரித்துள்ளார்.

ஆடுமாடுகளையும் பல நாய்களையும் இந்தத் தேனீக்கள் கொட்டி கொன்றுள்ளன. இவை கூட்டமாகப் பறந்து வரும் போதே மக்கள் தங்கள் வீடுகளுக்குள் புகுந்து கதவுகளை இறுக்கமாக மூடிக்கொள்ளுகின்றனர். அவை எழுப்பும் பயங்கரமான ஒலி மறைந்த பின்னர்தான் மக்கள் வெளியே தலைகாட்டுகின்றனர்.

பியோரியாவுக்கு அப்பாலுள்ள ஒரு கிராமத்தில் வசித்த ஒருவருடைய வீட்டின் கீழ்ப் புறம் பலகைகள் அடுக்கி வைத்திருந்தார். அங்கிருந்து பயங்கரமான ஒலி கிளம்புவதை அவதானித்த அவர், அதனைக் கண்டறிய மற்றொருவருடைய துணையினை நாடியிருக்கிறார். அப்போது தான் இந்தப் பயங்கரத் தேனீக்கள் வெளிக் கிளம்பியுள்ளன. உடனடியாக இருவரும் ஓடிச்சென்று ஒளிந்துக் கொண்டனர். அடுத்த நாள் ஓசை இல்லாதமை கண்டு இருவரும் வெளியே வந்து பலகைகளை வெளியே எடுத்துப் பார்த்தனர். அந்த வீட்டுக்காரர் வளர்த்த பெரிய நாய் ஒன்று இறந்து கிடந்ததைக் கண்டனர். அதன் உடல் அளவுக்கு மீறி வீங்கியிருப்பதையும் உடல் முழுவதும் தேனீக்கள் கொட்டிய காயங்கள் இருந்ததையும் கண்டனர். அத்துடன் சற்றுத் தள்ளி ஒரு ஏழைத் தொழிலாளியும் தேனீக்கடியினால் இறந்துகிடந்ததையும் காண முடிந்தது.

இந்தத் தேனீக்கள் கூட்டத்தில் சுமார் 30,000 தேனீக்கள் இருக்கலாம் என்று கணக்கிட்டுள்ளனர்.


அரிஸோனா மாநிலத்தில் எங்கும் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது. இந்த இராட்சதத் தேனீக்களின் படையெடுப்பு எந்நேரமும் நடக்கலாம் என்று கூறப்படுகிறது.

35 வருடங்களுக்கு முன்னர் இத்தகைய இராட்சதத் தேனீக்களின் நடமாட்டம் பிரேஸில் நாட்டில் காணப்பட்டதாகவும், மெக்சிக்கோவிலும் சில இடங்களில் தலைகாட்டியதாகவும் கூறப்படுகிறது.

இந்த வண்டுகளின் தோற்றுவாய் பற்றி ஆராய முற்பட்ட பல ஆய்வாளர்கள், அமெரிக்கா போன்ற நாடுகளில் சுற்றாடலைப் பாழ் படுத்தும் தொழிற்துறைக் கழிவுப் பொருட்கள் இத்தகைய இராட்சத வண்டுகளின் உற்பத்திக்கு வித்திட்டிருக்கக் கூடுமோ என்றும் சந்தேகிக்கின்றனர்.



# இரண்டடி மனிதன் ரெடியாக இருக்கிறார்
# ஆறடி உயரமுள்ள அழகான பெண் தேவை!




உலகிலேயே உயரத்தில் மிகவும் குறைந்த மனிதன் யார்?

உலக சாதனைப் புத்தகமான 'கின்னஸைப்' புரட்டிப்பாருங்கள். அதில் படத்தோடு, அதுவும் கலரான சிகப்புப் படத்தோடு அவர் பெயர் இருக்கும்.

குல் முகமது. வயது 37. வசிப்பது இந்தியாவின் தலைநகரான புதுடில்லி. தொழில், வியாபாரம்.

அவரது உயரம் 24 அங்குலம்.

அதாவது இரண்டு அடி.

குல் முகம்மதுவின் படங்கள் உலகின் பல பாகங்களில் உள்ள சஞ்சிகைகளில் பிரசுரமாகியிருக்கின்றன.

இப்போது அவரது படத்தோடு புதிய செய்தியொன்றும் பிரசுரமாகியிருக்கிறது.

அதுதான் அவரது திருமண ஆசை.

37 வயது. வாலிபத்தை கடக்க முன்னர் ஒருவனிதை வேண்டாமா வாழ்க்கைத் துணையாக? வேண்டும்தான்.

ஆனால், முகமதுவின் ஆசை சின்னச் சின்ன ஆசையல்ல. மாபெரிய ஆசை.

மனைவி வேண்டும். அவள் ஆறு அடி உயரமாக இருக்கவேண்டும்.

ஏன் என்று கேளுங்கள்.

அப்போது தான் தனது தேவைகளை அவளால் பூர்த்தி செய்ய முடியுமாம்.

என்ன தேவைகள்? அதாவது குல் முகமது குள்ளமாக இருப்பதால் குளிக்கும் போது தன் தலைக்கு தண்ணீரை ஊற்றவே கஷ்டப்படுகிறார். சோப்புப்போட, முதுகைப் புரட்டமுடியாமல் தவிக்கிறார்.

எங்காவது போக வேண்டுமானால் அவரைத் தூக்கிச் செல்பவருக்கு பணம் கொடுத்தே இடுப்பில் இருந்து சவாரி செய்கிறார்.

ஆறடி உயரப் பெண் வாய்த்தால் வசதிதான். எங்காவது போக வேண்டுமானால் பிரச்சனையே இல்லை. அவளே தன் இடுப்பில் தூக்கி வைத்துக்கொண்டு போய் விடுவாள்.

ஐந்து வருடமாக ஆறடிப் பெண்ணை தேடுவதாக குல் முகமது கூறுகிறார்.

உலக சஞ்சிகைகளில் குல் முகமதுவின் ஆசை வெளியாகியிருப்பதால் இவருக்காக பிறந்திருக்கும் ராஜகுமாரி எங்கிருந்தாவது ஓடிவரக் கூடும்- குதிரையில் அல்லது விமானத்தில்.

# வெல்லம் போல் சுவையான வாழ்க்கை!
# செல்லப் பிராணியாய் வாழும் கரடியார்!





குறும்பு தாங்க முடியவில்லை. ஆனாலும் செல்லம் தான்.

இடைக்கிடையே தொல்லை கொடுக்கும். சிரித்துக் கொண்டே சகித்துக்கொள்ள வேண்டும்.

அந்தத் தம்பதியினருக்கு அதன்மீது அப்படியொரு பிரியம்.

ஆண்டி றொபின்ஸ் என்னும் அந்த அமெரிக்கத் தம்பதியினருக்கு குறும்புத்தனமான தொல்லை கொடுப்பது ஒரு கரடி.

800 இறாத்தல் எடையும் எட்டு அடி உயரமும் கொண்ட அந்தக் கரடியைப் பார்ப்பவர்கள் பயந்துதான் போவார்கள்.

ஆனால் றொபின்ஸ் தம்பதியினருக்கு அது செல்லப்பிராணி.

அவர்களது குடும்ப உறுப்பினராக மாறிவிட்ட அந்த செல்லக்கரடி அயலவர் எவரையும் தொல்லைப்படுத்துவதில்லை.

ஆண்டி றொபின்ஸ் ஒரு மல்யுத்தவீரர். எட்டு ஆண்டுகளுக்கு முன்னர் அந்தக் கரடி ஒரு சிறு குட்டியாக அவரிடம் வந்து சேர்ந்தது.

அவர் ஒரு மல்யுத்தவீரர் அல்லவோ! பிரியமான கரடிக்கும் மல்யுத்தம் பழக்கிவிட்டார். அதற்கு ஹேர்க்குலிஸ் என்று பெயரும் வைத்துவிட்டார்.

பல சேர்க்கஸ் அரங்குகளில் அந்தக் கரடியும், ஆண்டிறொபின்சும் மல்யுத்தம் செய்து காண்போரை வியக்க வைக்கிறார்கள்.

இதனைக் கேள்விப்பட்ட ஹோலிவூட் திரைப்பட தயாரிப்பாளர்கள் மிஸ்டர் கரடியாரை தமது படங்களில் நடிக்க அழைத்தனர்.

ஜேம்ஸ்பொன்ட் படமொன்றில் கரடியார் ஹேர்க்குலிஸ் நடித்திருக்கிறார். படத்தின் பெயர் "ஒக்டோபுசி"

படத்தின் நாயகன் "ரோஜர்மூர்" ஹேர்க்குலிஸின் தோற்றத்தை பார்த்து பயந்து விட்டார். அருகில் செல்லவே அஞ்சினாராம்.

பிரபல திரைப்பட நட்சத்திரமே பயந்து நடுங்கிய தோற்றம் கொண்ட கரடியார் ஆண்டி றொபின்ஸ் தம்பதியினருடன் சாப்பாட்டு மேசையில் அமர்ந்து மூன்று வேளை உணவையும் உண்ணுகி(றார்)றது.

தண்ணீருக்குப் பதிலாக தேநீர் அருந்துகிறது. ஐஸ்கிறீம், சொக்கிலேட் வகைகள் என்றால் மிகவும் பிடிக்கும்.

ஆண்டி றொபின்சுக்கு கரடியாரால் ஒரு பிரச்சனை. மதுபானம் குடித்தால் கரடியாருக்கு அறவே பிடிக்காது. முகத்தை திருப்பிக்கொண்டுவிடுவார்.

அதனால் மதுபான ஆசை வந்தால் ஒளித்துத்தான் குடிக்க வேண்டும்.

ஆண்டி றொபின்ஸ் தம்பதியினர் தூங்கச் செல்லும் போது மறக்காமல் குட் நைட் சொல்லி முத்தம் கொடுக்கா விட்டால் வந்தது வம்பு. கரடியாருக்கு வந்துவிடும் மகா கோபம்.

கரடியாரை எங்கு கூட்டிச் சென்றாலும் குளிரூட்டப்பட்ட வண்டியில் தான் அழைத்துச் செல்கிறார்கள்.

தொலைக்காட்சி விளம்பரங்களிலும் இப்போது கரடியார் நடித்து வருகிறார்.

நல்ல வருமானமும் கிடைக்கிறது. ஜாலியான வாழ்க்கை.

பிறந்தால் அந்தக் கரடியாக பிறக்க வேண்டும்!

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# சினி ஹிட்



கட்டப் பொம்மன் படத்தில்- சரத்குமார்- வினிதா





சரவணன்- தேவகி படம் அக்கரைச் சீமை யிலே



சுஜாதா ஒரு வித்தியாசமான நடிகை. அன்னக்கிளி அவர் திறமை சொல்லும். அதன்பின் எத்தனையோ படங்கள். சாதனைகள். சிவாஜி முதல் கமல் வரை அனைவரோடும் நாயகியாய் தோன்றி நடித்தவர்.

இப்போது இளமை குறைந்துள்ளது திறமை அப்படியே இருக்கிறது.

சத்யராஜோடு ஜோடியாக அவர் நடித்துள்ள படம் அமைதிப்படை. மங்காத நடிப்புத் திறமைக்கு உதாரணம். சுஜாதாவின் நடிப்புப்பசிக்கும் தீனி.

அமைதிப் படையில் சுஜாதா

## மினி சினி

★ ரஜினி நடிக்கவிருக்கும் புதிய திரைப்படத்தை இயக்கும் எஸ்.பி. முத்துராமன், இப்படம் முடிவடைந்ததும் கமலை வைத்து ஒரு படத்தை இயக்கத் திட்டமிட்டுள்ளார்.

★ எஸ்.ஏ. சந்திரசேகரின் செந்தூரபாண்டியில் முக்கிய வேடத்தில் நடிக்கும் விஜயகாந்திக்கு ஜோடியாக கௌதமி நடிக்கிறார்.

★ கலை நிகழ்ச்சிகளில் மேடைகளில் பாடச் சொல்லும் போது பிரபு, பட்டிக்காடா பட்டணமா படத்தில் இடம்பெற்ற கேட்டுக்கோடி உருமிமேளம் என்ற பாடலையே எப்போதும் பாடுவார்.

★ டிசம்பர் மாத இறுதியில் கலை நிகழ்ச்சிகளில் பங்கு கொள்வதற்காக வெளிநாடு செல்ல திட்டமிட்டுள்ளார் கனகா.

★ நான் பேச நினைப்பதெல்லாம் படம் நன்றாக ஓடியதால் நிறைய வாய்ப்புக்கள் வரும் என்று எதிர்பார்த்திருந்தார் மோகினி. அவர் எதிர்பார்த்தபடி நடக்காமல் போனதால், கன்னடப் படங்களில் கவனம் செலுத்த ஆரம்பித்துவிட்டார்.

★ தமிழில் தற்போது மார்க்கட் இல்லாமல் இருக்கும் ரேகா, மலையாளத்தில் ஒரு சில படங்களில் நடித்து வருகிறார். நடிப்பில் சாவித்ரி மாதிரி திகழ வேண்டும் என்பதுதான் இவருடைய ஆசையாம். இதற்காக சாவித்ரி நடித்த படங்களையே அதிகம் பார்ப்பாராம்.

★ தமிழில் 48, தெலுங்கில் 28, கன்னடத்தில் 13 உட்பட தொண்ணூறு படங்களுக்கு மேல் நடித்துள்ளார் அர்ஜுன்.

★ ஸ்ரீதரின் தென்றலே என்னைத் தொடு படத்தில் கதாநாயகியாக நடித்தவர் ஜெயஸ்ரீ திருமணம் செய்து அமெரிக்காவில் கணவருடன் வசித்து வரும் இவருக்கு குழந்தை ஒன்று பிறந்துள்ளது.

★ தனது திருமணத்தை முன்னிட்டு, பாரதிராஜாவுடன் பணிபுரியும் அறுபதிற்கும் மேற்பட்ட கலைஞர்களுக்கு புத்தாடைகளை பரிசாக வழங்கினார் நெப்போலியன்.

★ பெண் குழந்தையே இல்லாமல், பலவருடங்கள் கழித்து பெண் குழந்தை பிறந்துள்ளதால், அண்மையில் திருப்பதி சென்று மொட்டை அடித்துள்ளார் நட்சத்திர இயக்குநர் பி.வாசு.

★ பொறந்தாலும் ஆம்பளையா பொறக்கக்கூடாது படத்திற்குப் பின்னர் பாண்டியராஜன் நடிக்கவுள்ள புதிய படம் சிப்பாய். நகைச்சுவை இழையோடும் இப்படத்தில் பாண்டியராஜனுக்கு ஜோடியாக சிவரஞ்சனி நடிக்கவுள்ளார்.

## மீண்டும் ராஜேந்தரின் ராச்சியம்

டி.ராஜேந்தர் சகல கலா வல்லவராக திரையுலகில் பேசப்படும் இயக்குநர். பிரமாண்டமான காட்சி அரங்குகள், அதிரவைக்கும் விளம்பரங்கள் என்று சினிமா உலகையே திகைக்க வைப்பவர்.

இடையே சற்று ஓய்ந்தது போல தெரிந்தார்.

'உஷா' என்னும் சஞ்சிகை வெளியிட்டு அதிலே பிஸியாக இருந்தார்.



இப்போது தனது மகன் சிம்புவை வைத்து சபாஷ் பாபு, ஒரு வசந்த கீதம் இரண்டையும் இயக்கி வருகிறார். இந்த இரு படங்களும் ராஜேந்தர் ராச்சியத்துக்கு மீண்டும் மவுசு கொடுக்கும் என்று பேசப்படுகிறது. ஒரு வசந்த கீதம் வெற்றிப்படமாக அமையவேண்டும் என்பதற்காக டி.ராஜேந்தர் இரவு பகலாக உழைக்கிறார். கடும் உழைப்பு, விடா முயற்சி, தன்னம்பிக்கை இவை தான் டி.ராஜேந்தரின் மூலதனம், முதுகெலும்பு எல்லாமே.



ஒரு வசந்த கீதம் படத்தில் டி.ராஜேந்தர்

## "மிகப் பெரிய பரிசு இதுதான்" ஸ்ரீதேவியை அசத்திய பார்த்திபன்



நடிகரும், இயக்குநருமான பார்த்திபன் வித்தியாசமாகச் சிந்திப்பவர்.

புது வருடப் பிறப்புக்கு நண்பர்களுக்கு ஒரு மண் தொட்டியில் செடியை வைத்து அனுப்பி விருந்தார். கீழே ஒரு வாசகம். "நேற்று விதைத்தது. இன்று முளைத்தது."

இப்போது இன்னொரு தகவல். சமீபத்தில் நடிகை ஸ்ரீதேவியின் பிறந்தநாளுக்கு பார்த்திபன் ஒரு பரிசு அனுப்பினார்.

ஸ்ரீதேவியின் தந்தையின் படத்தை பிரேம் செய்து அதன் கீழே கீழ்வரும் வாசகங்களை எழுதியிருந்தார்.

"சந்தோசம் என்ற வார்த்தை இனி உங்கள் வாழ்க்கையில் இருக்க, மனிதர்களாகிய நாங்கள் வாழ்த்துவதை விட, தெய்வமாகி விட்ட உங்கள் தந்தை நீங்கள் பிறந்த போது அவர் பெற்ற மகிழ்ச்சியுடன் உங்களின் இந்த பிறந்த நாளிலும் வாழ்த்துவார்."

பரிசைப் பார்த்த ஸ்ரீதேவி மகிழ்ந்து போனார். நெகிழ்ந்து போனார்.

"என் பிறந்த நாளுக்கு வந்த பரிசுகளில் மிகப் பெரிய பரிசு இதுதான்." என்று ஸ்ரீதேவி சொல்லியிருக்கிறார். ■

இதயங்கள் இடம்மாற வேண்டுமானால் இந்த அழகுமயில் ஆடவேண்டும்!

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

### பாப்பா முரசு சிறுகதை

## பாப்பா முரசு

# கர்வம் பிடித்த ராஜா

ஓர் ஊரில் ஒரு ராஜா இருந்தார். புகழ், செல்வாக்கு, அதிகாரம் ஆகிய அனைத்திலும் தனக்கு மிஞ்சியவர் வேறு யாரும் இல்லை என்று நினைத்துக் கொள்ளுபவர் அந்த ராஜா. ஆனால் அதைப்பற்றி மற்றவரிடம் அவர் சொல்வதில்லை. தான் இப்படி நினைத்துக்கொண்டிருப்பது, மற்றவர்களுக்குத் தெரியுமா? என்பதைத் தெரிந்து கொள்ள விரும்பினார். உடனே, அரண்மனையில் வேலை பார்க்கும் அனைவரையும் அழைத்து, "நான் மனசுக்குள் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறேன் என்பது தெரியுமா?" என்று கேட்டார். ஒருவராவது சரியான பதிலைச் சொல்லவில்லை.

ராஜாவின் மனசுக்குள் என்ன நினைத்துக்கொண்டிருக்கிறார் என்பதைச் சொல்லக்கூடிய யாராவது ஒருவரை அழைத்து வருமாறு, தனது மந்திரியிடம் உத்தரவு போட்டார். மந்திரிக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. அப்பொழுது மந்திரியின் மகள் வந்தாள்.

"அப்பா நீங்கள் கவலையுடன் இருப்பது போல் தெரிகிறதே. உங்கள் கவலைக்கு என்ன காரணம்?" என்று கேட்டாள்.

ராஜா கூறியதை மந்திரி தன் மகளிடம் எடுத்துக்கூறினார்.

"இவ்வளவு தானே, கவலையை விடுங்கள். நாளை காலை, நான் ஒரு ஆளை அரண்மனைக்கு அனுப்பி வைக்கிறேன். அந்த நபர் ராஜாவின் மனசில் இருப்பதை தெள்ளத் தெளிவாக எடுத்துச் சொல்வார்," என்று மந்திரி மகள் சொன்னாள்.

மறுநாள் காலை, ஆடு மேய்க்கும் ஒரு ஆளை அழைத்து வந்து மந்திரியின் முன் நிறுத்தினாள் மகள். "அப்பா, இவரை அரண்மனைக்கு அழைத்துச் செல்லுங்கள். உங்கள் பிரச்சனையும், உங்கள் ராஜாவின் பிரச்சனையும் தீர்ந்து விடும்," என்றாள்.

ஆனால் மந்திரி பயந்து போய் விட்டார். அரண்மனையில் இருக்கும் அநேக அறிவாளிகளுக்குத் தெரியாத விஷயம், இந்த ஆடு மேய்ப்பவனுக்கு மட்டும் எப்படித் தெரிந்திருக்க முடியும் என்று யோசித்தார். இப்படி ஒருவனை அழைத்துச் சென்றால் தன்னை எல்லாரும் கேலி செய்வார்களோ என்று யோசித்தார். இவன் ஏதாவது ஏடாகூடமாகச் சொல்லி விட்டால், ராஜா தன் மீது கோபப் படுவாரோ என்ற பயமும் மந்திரிக்கு இருந்தது.

மகள் தைரிய மூட்டினாள்.

மந்திரி அந்த ஆளுடன் அரண்மனைக்குள் நுழைந்து ராஜாவின் சிம்மாசனம் இருக்கும் கூடத்திற்குப் போய்ச் சேர்ந்தார்.

முதலில் ஆடு மேய்ப்பவனைப் பார்த்து ஆச்சரியப் பட்ட ராஜா, மந்திரியின் பக்கம் பார்வையைத் திருப்பினார்.

"உங்கள் மனதில் இருப்பதை இவன் சொல்லுவான்" என்றார் மந்திரி.

"சரி பார்க்கலாம்...." என்றார் ராஜா.

ராஜா தன்னுடைய ஒரு விரலை உயர்த்திக்காட்டினார்.

இதற்கு விளக்கம் அளிக்கும் வகையில் ஆடு மேய்ப்பவன் இரண்டு விரல்களை உயர்த்திக் காட்டினான்.

உடனே ராஜா, மூன்று விரல்களை உயர்த்திக்காட்டினார்.

இதற்கு, "வேண்டாம்" என்று குறிப்பிட தலையை ஆட்டுவது போல் ஆட்டிவிட்டு, ஆடு மேய்ப்பவன் வேகமாக ஓடிவிட்டான்.

ராஜா சந்தோசத்தில் சிரித்து விட்டார். கூடி இருந்தவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. 'திரு...திரு..' என்று விழித்தனர்.

மந்திரி தைரியத்தை வரவழைத்துக் கொண்டு ராஜாவைப் பார்த்தார். ராஜா பேச ஆரம்பித்தார்.

"நான் என்னுடைய ஒரு விரலை உயர்த்தியபோது, உலகிலேயே செல்வாக்கு, புகழ், அதிகாரம் உடைய ராஜா நான் ஒருவன் மட்டும் தானே என்று கேட்டேன். அதற்கு அவன், நீங்கள் ஒருவர் மட்டும் இல்லை இன்னொருவரும் உண்டு. அவர் ஆண்டவன் எனப் பொருள்பட இரண்டு விரல்களைக் காட்டினான். அப்படியானால் மூன்றாவதாக யாராவது இருக்கிறார்களா என்று கேட்டேன். ஒருவரும் இல்லை என்று தலையாட்டிவிட்டு ஓடி விட்டான்."

அரச சபையில் கூடியிருந்த அனைவரும் வியப்பில் அசந்து போய்விட்டனர்.

பிறகு, வீட்டிற்குப் போன மந்திரி சேவகர்களை அனுப்பி ஆடு மேய்ப்பவனை அழைத்துவரச் சொன்னார். அவன் வந்தவுடன், "அவர் விரலைக்காட்டியபோது, தனக்கு ஒரு ஆடு வேண்டும் என்று கேட்கிறார் என்று நினைத்தேன். அவ்வளவு பெரிய ராஜாவுக்கு ஒரு ஆடு எப்படிப்போதும் என நான் நினைத்தேன். இரண்டு ஆடுகளைக் கொடுத்து விடுவோம் என்று இரண்டு விரல்களைக் காட்டினேன். ஆனால் ராஜா, மூன்று விரல்களையும் காட்டி, மூன்று ஆடுகளையும் கேட்டபோது, நான் முடியாது என்று தலையாட்டி, மறுத்து விட்டுப் பயத்தில் ஓடி வந்துவிட்டேன். மீதமுள்ள ஒரு ஆடு என் பிழைப்புக்கு வேண்டுமல்லவா? அதையும் ராஜாவுக்குக் கொடுத்து விட்டு நான் என்ன செய்வேன்? ராஜாவிடம் தயவு செய்து இதைச் சொல்லி விடுங்கள்," என்று சொல்லிவிட்டு மறுபடியும் ஓடி விட்டான், ஆடு மேய்ப்பவன்.

மந்திரியும் அவர் மகளும், ஆடு மேய்ப்பவன் கூறிய விளக்கத்தையும் ராஜா புரிந்து கொண்டதையும் நினைத்து வாய்விட்டுச் சிரித்தனர்.

ராஜா தன்னைப் பற்றி உயர்வாக நினைத்துப் பெருமைப்பட்டுக் கொள்வதையும், கர்வப்பட்டுக் கொள்வதையும் அன்று முதல் விட்டுவிட்டார்.

ராஜாவிடம் சொல்லி, ஆடு மேய்ப்பவனுக்கு நிறைய வெகுமதிகளை வாங்கிக்கொடுத்தார் மந்திரி.




### அர்த்தமான நேரங்கள்

- உழைக்க நேரத்தை எடுத்துக்கொள். அது வெற்றியின் விலை.
- சிந்திக்க நேரத்தை எடுத்துக்கொள். அது சக்தியின் ஊற்று.
- விளையாட நேரத்தை எடுத்துக்கொள். அது இளமையின் இரகசியம்.
- படிக்க நேரத்தை எடுத்துக்கொள். அது அறிவின் வாயில்.
- நல்லவைபுரிய நேரத்தை எடுத்துக்கொள். அது இன்பத்தின் பாதை.
- திட்டமிட நேரத்தை எடுத்துக்கொள். அது சாதனைக்கு வழி.
- அன்புகாட்ட நேரத்தை எடுத்துக்கொள். அது இறைவனின் கொடை.
- சேவை புரிய நேரத்தை எடுத்துக்கொள். அது வாழ்க்கையின் குறிக்கோள்.
- சிரித்து மகிழ நேரத்தை எடுத்துக்கொள். அது இதயத்தின் இன்னிசை.

செல்வன்.எம்.எம்.பாருக்-முள்ளிப்பொத்தானை.

### சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 04.12.1933.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 17
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்
கிருலப்பனை,
கொழும்பு-05.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 14

பரிசுக்குரியவர்
பி.ஜெயகணேஸ்
விபுலானந்தா வித்தியாலயம்
காரைதீவு-02.

பாராட்டுக்குரியவர்கள்
க. அபராஜிதன்
மட்டக்களப்பு.
எஸ். ஜெயலலிதா
நல் இணைப்பாற்றி மகளிர் பாடசாலை
நுவரெலியா.
அ.மு.நிலாம்தீன்
தி/அல்-அக்ஸா.ம.வி-கிண்ணியா.
பாத்திமா ரம்ஸா ரவுஸ்டீன்
கனிஷ்ட மகளிர் வித்தியாலயம் நாவலப்பிட்டிய.
எஸ். மதுநதர்சினி
இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி
கொழும்பு-4.
வினித்தா லோரன்ஸ்
லக்கிலேண்ட் தவி. உடபுஸ்ஸல்லாவ.
சரண்யா திருச்செல்வம்
பண்டாரவளை.
யூ.எல்.எம். அஸாம்
பிசாஹிரா கல்லூரி. புத்தளம்.
கே. மெபாய்தீன், குறிஞ்சாக்கேணி.

### பனை



காதோலை வந்ததும் பனையாலே
கழுத்துக்குத் தாலியும் பனையாலே
பண்பாடு பெற்றதும் பனையாலே
பயன்மிகப் பெற்றதும் பனையாலே.

01. அரிய மருந்தும் உணவும் தருவது பனை
02. ஆயிரம் ஆண்டு பயன்படுவது பனை
03. இல்வாழ்வுக்கான எல்லாந் தருவது பனை
04. ஈவதில் குறைவில்லாதது பனை.
05. உயிர்ச்சத்து ஊட்டமுள்ளது பனை
06. ஊருக்கு லட்சுமி போன்றது பனை
07. எண்ணூறு வகையில் உபயோகமானது பனை
08. ஏழைகட்கும் செல்வர்க்கும் இரங்குவது பனை
09. ஐயமென வந்தவர்க்கு ஆதரவு பனை
10. ஒடியல் வகையால் உயர்ந்தது எங்கள் பனை
11. ஓலைச்சார் தந்து ஊக்குவது எங்கள் பனை
12. ஔவையார் போற்றிய ஔடதம் பனை
13. கார் மழை தருவது பனை. கைத்தொழில் தருவது பனை
14. உணவுகள் தருவது பனை. உறைவிடம் தருவது பனை
15. ஏடு தருவது பனை. ஏற்றம் இறைப்பது பனை
16. பனை எங்கள் உயிர். பனை எங்கள் முதல்
17. பஞ்சம் போக்கும் பனை. பசிப்பிணி நீக்கும்பனை
18. பனையைத் தறிக்காதே பயனைக் குறைக்காதே
19. பனையை நடுக பயனைப் பெறுக.
20. பனைவளம் பெருகினால் பொருள் வளம் பெருகும்.

கந்தப்பெருமாள் நிமல்தாசன்
மட்/மாங்காடு சரஸ்வதி வித்தியாலயம்
செட்டிபாளையம்.

### தாய் எனும் கோயில்

தாய் ஒரு கோயில்
தாயின் மடியிலேதான் சொர்க்கம் உள்ளது.
மாதா, பிதா, குரு, தெய்வம்
எனும் வரிசையில் தாய்க்கே முதலிடம்.
தாயில் நாம் தெய்வத்தை
தரிசிக்கின்றோம். தாயின் அன்பு
உயர்வானது. அவ்வன்பை வேறு எதிலுமே
பெற்றுக்கொள்ள முடியாது. தாயின்
பாசம் வலுவானது.
அதற்கு விலை இல்லை.
தாயின் நேசம் எதிர்பார்ப்பற்றது.
சுயநலமில்லாதது. இவ்வாறான
மகத்துவம் மிக்க தாயின் அருமையினை
உரைக்க ஏழேழு ஜென்மமும்
போதாது எனக்கு!

ஜே.அன்ரன் சுரேஷ்.
பு/இந்து தமிழ் மகாவித்தியாலயம்
புத்தளம்.

### விடுகதைகளும் விடைகளும்

1. வெட்ட வெளிக்காட்டுக்குள்ளே விளக்கை வைத்துக்கொண்டு விக்கி விக்கி அழுது கொண்டு விரைவாக ஓடுகிறான். அவன் யார்?
2. தச்சன் செய்யாத பெட்டி தானே திறந்து மூடும் பெட்டி. அது என்ன?
3. உயிர் இல்லாத நீதிபதி ஒழுங்காக நீதி கூறுகிறார். அவர் யார்?
4. குற்றம் இல்லாமல் குடுமி பிடிக்கிறார். அவர் யார்?
5. தொட்டால் பிடித்துக்கொள்ளும் ஆனால் பசை அல்ல. அது என்ன?

4. ஆட்டுக்கல் 5. மின்சாரம்.
1. புகைவண்டி 2. கண் 3. தராசு

ஐனுல் ரிப்கா அன்வர்
புனித அன்தோனியார் மகளிர் கல்லூரி-
கடுகஸ்தோட்டை.

### இவை இப்படி

1. நத்தை ஒரு மைல் தூரத்தைக் கடக்க மூன்று வாரங்களாகும்.
2. விலங்குகளின் அரசன் என்று கூறப்படும் சிங்கத்தின் ஆயுட்காலம் 15 ஆண்டுகள் தான்.
3. கரப்பான் பூச்சி எப்போதும் சரியாக பதினாறு முட்டைகளே இடும்.



4. பிறந்த ஒருவருடமேயான திமிங்கிலம் தன் தாயைப் போல் பெரிதாயிருக்கும்.
5. விலங்குகளில் யானை ஒன்றுக்கு மட்டுமே நான்கு முழங்கால்கள் உண்டு.
6. ஒட்டகத்தின் முதுகெலும்பு வளைந்திருக்கும் என்று தானே நினைக்கிறீர்களா். அதன் முதுகெலும்பு நேராகத் தான் இருக்கும்.
7. உலகத்திலுள்ள முதுகெலும்புள்ள பிராணிகளில் மிகவும் சிறியது. 'பிக்மியா' எனப்படும் மீனாகும். இது கால் அங்குல நீளமுடையது.
8. தேள் முட்டையிடுவதில்லை. குஞ்சு பொரிக்கிறது. குஞ்சுகள் தாங்களாகவே நடமாடும் பருவம் அடையும்வரை தாய்த்தேள் தன் மார்பிலேயே அவைகளை வைத்திருக்கும்.
9. பல பாம்புகள் தங்கள் கடியால் தாங்களே இறக்கின்றன.

ராமசாமி ரமேஸ்குமாரி
நானு ஓயா.

### சின்னஞ்சிறு கிளியே கண்ணம்மா!

காலையில் பட்சிகளின் ஜாலமான தீஞ்சுவைக் குரல் கேட்டு துயில் எழுவது சுகமானது. இந்தச் சிறுமி ஒரு துள்ளும் வண்ணக்கிளி வளர்க்கிறாள். காலையில் சிறுமியின் உதட்டில் தனது சிறிய சொண்டினால் மெல்லக் கொத்தும் இந்தச் சின்னக்கிளி. சிறுமி சிரித்துக்கொண்டே துயில் எழுவதற்கு அது போதும்.





# தேன் கிண்ணம்

### நெருடல்கள்

வானத்துச் சிரிப்பில்
உள்ளக் குதூகலம்;
உனக்கும் எனக்கும்.
கறுப்பு முஸ்தீபுகள்
விலகிப் போன
வெள்ளை வானம்
உனக்குக் கீழும்;
எனக்குக் கீழும்.

அதோ!
பனம் பழம் விழுகிறது;
இப்போது பயமில்லை.

வெள்ளை வீதியில்
கறுப்பாய் ஏதோ
ஓடுகிறது;
இப்போது பயமில்லை.

அதோ! குர்ஆன்
ஓதுபவர்கள்,
அதோ பைபிள்
படிப்பவர்கள்,
அதோ..! அதோ!!
உப நிஷத பாராயணம்
செய்பவர்கள்.

துள்ளிக் குதி
சந்தோஷம் உனக்கும்
எனக்கும்.

வா வெருளி பார்த்தது
போதும்.
குதூகலம் கொள்வோம்.

உறுமலும்
உறுமியவும்
ஒழிந்து போன
நிம்மதி..?

வா..இலங்கையின்
அந்தத் தொங்கலுக்கும்
இந்தத் தொங்கலுக்கும்
ஓடிப் பார்ப்போம்.

வியாழ மாற்றத்தில்
சமூகப் பலன்களைக்
காண்பிப்போம்.

என்ன அது சிரிப்புச்
சத்தம்..
வா ஒற்றுக் கேட்போம்.

உன்னையும்
என்னையும் பார்த்து
இறைவன்
சிரிக்கிறான்..?...?...

■ அக்குறனை
இளைய அப்துல்லாஹ்.

### இது என்ன நியாயம்...?

வண்ணக் கோலமாய்
வாழ்க்கை வானில்
வலம் வந்தவள்
கணவனை இழந்த
காரணத்திற்காக
வெள்ளைக் கோலமாய்
வீதி உலா வருவது
வெறுப்பாக உள்ளதே.

• •

பதியினை இழந்தவள்
என்பதற்காக
பட்டமரம் என்று
பட்டப் பெயர் சூட்டி
பாவை அவளை- இப்
பாரினில் உள்ளவர்கள்
பறை சாற்றுவது
பாவமாக இல்லையா?

• •

விட்டது தொட்டதற்கெல்லாம்
விதவையவள் என்று
விமர்சித்து
விலக்கி நடப்பதும்
வீண் வேலை இல்லையா?

• •

மனைவியை இழந்தவனுக்கு
மட்டும்-புது
மாப்பிள்ளை என
மகுடம் சூட்டி
பெற்றவர்கள்
பேரம் பேசுவது
பெருமையாய்
உள்ளது ஏன்?

■ -பாண்டியூராள்
(கே.சந்திரிகா)

### ஜாதி

ஆதியில் மாடிகட்டி
அறநெறி போற்றியபின்
வீதியின் ஓரமதில்
விவேகியே ஏன் நின்றாய்
நீதியின் விளக்கமென
நீ நின்ற பின்னாலே
சாதிகள் ஏன் படைத்தாய்
சாகவோ பூமிதனில்.

■ செல்வி.கலைவாணி சண்முகம்
மஸ்கெலியா.

### தூரத்து நிலவுக்கு.....

உயிர் போவதுமாய்
போய்வருவதுமாய்
படபடத்தது
தேகம்!

•

உனக்கு
கொலைகூட வருமா..?
நான்-
துடித்துக் கொண்டிருக்கிறேன்
அறுபட்ட கோழியாய்..!

•

எப்படித் தகனம்
செய்யலாம்
மனசை மட்டும்;
அதை நீ-
தின்றுவிட்டாய்!

•

மரணம்தான்
நிம்மதியானது
ஏனெனில்-
என்னில் இருக்கும்
நீயும் இறந்துவிடுவாய்
இல்லையா..?

•

இக்கால கல்லறைகளும்
மௌனமாய்-
அழலாம் கண்மணி,
நம் விழிகளில் தான்
வெளிச்சமில்லை.
அதை கண்டு கொள்ள!

•

நீ-
என் நரம் பெங்கும்
குருதியாய் ஓடுகிறாய்
என் கனவுகளுக்கும்-
துணிவில்லை.
உன்னை-
துண்டித் தெறிய!

•

முடிச்சுகள் அவிழ்க்கப்படாத
என் கேள்விகளின்
கழுத்தில்,
மூச்சு விடுவது-
உன் மௌனம் மட்டும்தான்!

•

இன்றின் வாழ்வு
ஒரு "கமரா"வைப் போல்
முற்றுப் புள்ளிகள்,
வெகு தொலைவில்.

காதலி!
கடைசி வரை
ஒரு நம்பிக்கை
நாம்-
இந்த மண்ணில் வாழலாம்
தண்டவாளங்களைப்
போன்றாவது!

■ -ஒட்டமாவடி அறபாத்-

### சிரிப்பெதற்கு?

சிரிப்பெதற்கு?
இங்கே சிதறும்
மனித உடல்களைப்
பார்த்த பின்னும்.

கொலை வெறியும்,
குருதித் தாகமும்,
குடி கொண்டிருக்கும்
இதயங்களைச் சுமக்கும்
கொடியவர் கூட்டத்தைப்
பார்த்த பின்னும்?

மனதுக்குள்,
துயரக் கதைகளை
நிமிஷத்திற்கு நிமிஷம்
சேகரிக்கின்றோம்.
அதனால்,
மகிழ்ச்சிக்கு
விவாகரத்து வழங்கிவிட்டோம்.

என் இனிய தோழி,
மனம் விட்டு உன்னோடு
சிரித்திருக்கும்,
ஒரு சுதந்திர விடியல்
நமது மண்ணுக்கு
வரும் வரையில்,
நான் சிரிக்கிறேன்.
உதடுகளால் மட்டும்.
உள்ளத்தால் அல்ல.

■ பாலையூற்று அநா.

### ஏமாந்து போனது

அவள்
வருகின்ற பாதையில்
அள்ளித் தெளித்திருந்த
மலர்கள் நான்
இன்று
முட்களாய்
அவள் நினைவுகள்

• •

இன்றுள்ள சமாதானம் போல்
ஏமாந்து போனது
நானும் தான்

• •

அவள் பார்வையில்- இன்று
அருவருப்பானவன்
நான்
முன்பெல்லாம்
மூடும் விழிகளுக்குள்
விழித்திருப்பாள்- காதல்
முடமானபோது
விழிகளுக்கும் முள்ளானாள்.

• •

பாதங்கள் தடுமாறியதும்
நினைவுகள் நிலைகுலைந்ததும்
நெஞ்சுக்குள் இருப்பவளால்தான்.


■ எல்.கே.நாதன்.

## அதிரடியான ஒரு போட்டி

★ சுப்பர் ஸ்டார் ரஜினியை நேரில் காண விரும்புகிறீர்களா?
★ தமிழகச் சுற்றுலாவுக்கு நீங்கள் தயாரா?

### நீங்கள் செய்ய வேண்டியது இதுதான்:

★ ஒன்றிலிருந்து இருபது வரையான கூப்பன்களை நிரப்பி பத்திரமாக வைத்துக் கொள்ளுங்கள்.
★ போட்டி முடிவடைந்தவுடன் அனைத்துக் கூப்பன்களையும் எமக்கு அனுப்பி வைக்கலாம்.
★ போட்டி சம்மந்தமான எந்த விடயத்திலும் ஆசிரியரின் முடிவே இறுதியானது.
★ போட்டியில் பங்குகொண்டு சரியான விடை எழுதுவோரில் ஒருவர் அதிஷ்டசாலியாகத் தேர்ந்தெடுக்கப்படுவார்.
★ ஏனைய ஜம்பது அதிஷ்டசாலிகளுக்கு சுப்பர் ஸ்டார் ரஜினிகாந்தின் பெரிய அளவிலான வண்ணப்படங்கள் வந்து சேரும்.



**இலக்கம்-18**
**சுப்பர் ஸ்டார் சந்திப்பு**

காட்சி இடம்பெற்ற படத்தின் பெயர்:-.................................
படத்தின் இயக்குநர் பெயர்:-.................................
ரஜினியின் ஜோடி/ஜோடிகள் யார்:-.................................
இப்படம் வெளியான ஆண்டு:-.................................

பி.கு: இலக்க வரிசைப்படி 20 கூப்பன்களையும் நிரப்பி அனுப்புவோர் மட்டுமே போட்டியில் பங்குகொள்ள முடியும்.



### கொளுத்தப்பட்ட மனசு

விறகெரிக்கும் நெருப்பாகப் பேச்சு-இவள்
விழியேனோ இடியென்று ஆச்சு?
உறவென்று நான் தேடிப் போனேன்- இவள்
ஒதுக்கியதால் ஏமாற்ற மானேன்!

சிரித்தாளே! அதுவேசம் தானா?-இவளில்
சிக்கியதால் எல்லாமே வீணா?
விரித்தாளே போவென்று கையை- தினம்
வேதனையால் வாட்டுகிறாள் மெய்யை!

இன்றுவரை வந்ததெலாம் போலி-நான்
ஏமாற்ற மாகிப்போ காலி!
என்றுவரும் வசந்தமினி வாழ்வில்?-துயர்
இமயமலை ஆச்சே இந் நாளில்!

கண்டதிலை அப்படியோர் தோல்வி!- நயிக்
கன்னியேனோ புரியாத கேள்வி?
கொன்றுவிட்டாள் என்னுயிரைப் பேசி!
மனதைக்
கொளுத்திவிட்டாள் குப்பையென வீசி!

■ காத்தான்குடி அலு.

## கற்பனைச் சுகம்......

**-எம். சுரேஷ்-**

**நிகழ்வு ①**

ஒரு பிரபல நாவலாசிரியரைச் சந்திக்க ஒரு இளைஞன் வந்தான். நாவலாசிரியரைப் பார்த்த அவன்,

"நீங்கள் கடைசியாக எழுதிய "மீண்டும் ஒரு காதல்" என்ற நாவலில் "பிரவீனா" என்ற ஒரு அழகான பெண் பாத்திரத்தை சிருஷ்டித்திருந்தீர்கள்....... அந்தப் பெயரும், அந்தப் பாத்திரமும் தன்னைத்தான் குறிப்பிடுவதாகவும், தன்னை நினைத்துத்தான் நீங்கள் அதை எழுதியதாகவும் என் நண்பி சொல்கிறாள்.... அது உண்மையா?" என்று கேட்டான்.

"எல்லோருக்கும் கற்பனை செய்ய சுதந்திரம் உண்டு. உங்கள் நண்பி மேற்கூறிய வாறு கற்பனை செய்திருந்தால், அதை நான் பொய்யென்று கூறமாட்டேன்" என்றார். வந்தவன் வாயடைத்துப் போனான்.

நமது கலைத்துறைக்கும் இது பொருந்துகிறதல்லவா?

••••

**நிகழ்வு ②**

வழியில் ஒரு அழகான பெண்ணைக் கண்ட ஒரு எழுத்தாளன் அவளையே கதாநாயகியாக்கி ஒரு காதல் கதை எழுத விரும்பினான். கதை எழுதுவதற்கான அனுமதியை அவளிடமே பெறவிரும்பி, அருகில் சென்று சம்மதம் கேட்டான். கேட்டதும் கலகலவெனச் சிரித்த அந்த அழகி,



"அன்பரே! நீங்கள் எப்படிப்பட்ட கதை வேண்டுமானாலும் எழுதுங்கள். ஆனால், நான் விடியுமுன் போக வேண்டும்" என்றாள். திகைத்துப்போன எழுத்தாளன்.

"ஏற்கனவே எழுதிய நாவலுக்கு மேல், சிறுகதை எழுத எனக்கு விருப்பமில்லை.... தெரியாமல் கேட்டு, தெரிந்தபின் வாபஸ் பெறுகிறேன். என்னை மன்னித்துவிடு" என்று கூறித் தலைமறைவானான்.

சில எழுத்தாளரின் எழுத்து இலக்குத் தவறியும் போகலாம்!

நன்றி.

## இந்த வாரம் உங்கள் பலன்

**(28.11.93 முதல் 04.12.93 வரை)**

சோதிட மாமணி
'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| விருட்சிகம் | - சூரியன், செவ்வாய், இராகு, வெள்ளி |
| மகரம் | - சனி |
| இடபம் | - கேது |
| துலாம் | - வியாழன், புதன் |

30.11.93ல் விருட்சிகத்தில் புதன் சஞ்சாரம்
இவ்வாரம் இடபம், மிதுனம், கற்கடகம் ஆகிய இராசிகளில் சந்திரன் சஞ்சாரம்

### மீனம்:

(புரட்டாதி, நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | அந்நியர் நட்பு, பணவரவு. | பி.ப 3 மணி |
| திங்கள்- | பெரியோர் சகவாசம், தனலாபம். | பி.ப 1 மணி |
| செவ்வாய்- | வீண்முயற்சி பணச் செலவு. | பகல் 11 மணி |
| புதன்- | தனவிருத்தி, தருமச் செய்கை. | பி.ப 3 மணி |
| வியாழன்- | மனமகிழ்ச்சி, காரிய சித்தி. | பி.ப 2 மணி |
| வெள்ளி- | காரிய மேன்மை, பணவரவு. | பகல் 11 மணி |
| சனி- | துயர் நீங்கும், மனமகிழ்ச்சி. | பி.ப 4 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 9

### மேடம்:

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | பணவரவு, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| திங்கள்- | தொழில் மேன்மை, துயர் நீங்கும். | பி.ப 2 மணி |
| செவ்வாய்- | பெரியோர் நட்பு, சுப கருமம். | பகல் 11 மணி |
| புதன்- | செய்தொழில் உயர்வு, நோய் நீங்கும். | பகல் 12 மணி |
| வியாழன்- | திடீர் பிரயாணம், நிலைப்பிரிவு. | பி.ப 3 மணி |
| வெள்ளி- | கடன் பயம், காணி பூமி பிரச்சனை. | பகல் 11 மணி |
| சனி- | வீண் பிரயாசம், மனக்கலக்கம். | பி.ப 3 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்- 4

### இடபம்:

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | அந்நியர் உதவி, தொழில் மேன்மை. | பி.ப 1 மணி |
| திங்கள்- | துயர் நீங்கும், பண வரவு. | காலை 10 மணி |
| செவ்வாய்- | எடுத்தகாரியம் வெற்றி, மனமகிழ்ச்சி. | பி.ப 1 மணி |
| புதன்- | பணக்கஷ்டம், பிரயாணம். | காலை 8 மணி |
| வியாழன்- | செய்தொழில் விருத்தி, மனக்கஷ்டம். | காலை 10 மணி |
| வெள்ளி- | தனஇலாபம், பெரியோர் அனுகூலம். | பி.ப 1 மணி |
| சனி- | துன்பம் நீங்கும், காரியசித்தி. | காலை 10 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 2

### மிதுனம்:

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | எண்ணிய கருமம் வெற்றி, புகழ். | காலை 9 மணி |
| திங்கள்- | பெரியோர் நட்பு, பண வரவு. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | நினைத்த காரியம் வெற்றி, சுபகாரிய மேன்மை. | பி.ப 1 மணி |
| புதன்- | தனலாபம், வீண் பிரயாசம். | காலை 8 மணி |
| வியாழன்- | பணத்தட்டுப்பாடு, கடன்பயம். | பகல் 12 மணி |
| வெள்ளி- | புகழ் கீர்த்தி, தேகசுக நன்மை. | பி.ப 2 மணி |
| சனி- | அந்நியர் உத்வி, மறைமுக எதிர்ப்பு. | பி.ப 1 மணி |

அதிஷ்டநாள்-திங்கள்,அதிஷ்ட இலக்கம்- 5

### கும்பம்:

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், புரட்டாதி)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | அயலவர் நட்பு, தேகசுகம் பாதிப்பு. | பி.ப 3 மணி |
| திங்கள்- | துன்பங்கள் தீரும், பணவரவு. | காலை 7 மணி |
| செவ்வாய்- | காரிய மேன்மை, தொழில் சித்தி. | பி.ப 1 மணி |
| புதன்- | பணக்கஷ்டம், குடும்பப்பகை. | காலை 8 மணி |
| வியாழன்- | தனலாபம், கீர்த்தி மேன்மை. | பி.ப 3 மணி |
| வெள்ளி- | உயர்ச்சி நிலை, பிரயாண மிகுதி. | காலை 9 மணி |
| சனி- | கடன்சுமை, பணத்தட்டுப்பாடு. | பி.ப 2 மணி |

அதிஷ்டநாள்-புதன்,அதிஷ்ட இலக்கம்- 4

### கர்க்கடகம்:

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | பயம் பீதி, மனக்கலக்கம். | பி.ப 2 மணி |
| திங்கள- | வீண் முயற்சி, கோப மிகுதி. | பகல் 11 மணி |
| செவ்வாய்- | பெரியோர் நட்பு, தனலாபம். | பி.ப 3 மணி |
| புதன்- | உயர்ச்சி, தொழில் முன்னேற்றம். | காலை 10 மணி |
| வியாழன்- | வீண் பிரயாணம், நினைத்த காரியம் தடை. | பகல் 11 மணி |
| வெள்ளி- | நம்பிக்கையிழப்பு, பணக்கஷ்டம். | காலை 7 மணி |
| சனி- | உறவினர் பயம், கடன் தொல்லை. | பி.ப 1 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்- 3

### மகரம்:

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டது முன்னரை)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | உறவினர் பகை, புகழ் அதிகம். | பி.ப 4 மணி |
| திங்கள்- | வீண் முயற்சி, பெண்கள் தொல்லை. | காலை 10 மணி |
| செவ்வாய்- | அயலவர் உதவி, தொழில் கேடு. | பி.ப 2 மணி |
| புதன்- | பணவரவு, காரிய நன்மை. | பி.ப 3 மணி |
| வியாழன்- | தூர இடப்பிரயாணம், கீர்த்தி. | பி.ப 4 மணி |
| வெள்ளி- | வெளியிட வாழ்க்கை, தனலாபம். | பி.ப 1 மணி |
| சனி- | தெளிவற்ற நிலை, வீண் சந்தேகம். | காலை 8 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம் -2

### சிம்மம்:

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | மனமகிழ்ச்சி, காரியானுகூலம். | பி.ப 2 மணி |
| திங்கள்- | தனலாபம், உயர்ச்சி. | காலை 10 மணி |
| செவ்வாய்- | அந்நியரால் உதவி, கடன் சுமை. | பி.ப 3 மணி |
| புதன்- | காரிய நன்மை, மனக்கலக்கம். | பகல் 12 மணி |
| வியாழன்- | உயர்ந்த நிலை, வீண் வாக்குவாதம். | பி.ப 3 மணி |
| வெள்ளி- | தூர இடப்பயணம்,கடன் சுமை. | பி.ப 4 மணி |
| சனி- | மனச்சந்தோஷம், காரியசித்தி. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-திங்கள்,அதிஷ்ட இலக்கம்- 6

### தனு:

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | தனலாபம், உயர்ச்சி. | பி.ப 3 மணி |
| திங்கள்- | மனக்குழப்பம் தீரும், புகழ். | காலை 10 மணி |
| செவ்வாய்- | எடுத்த கருமம் வெற்றி, பணவரவு. | பி.ப 4 மணி |
| புதன்- | அந்நியர் சகவாசம், மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |
| வியாழன்- | உயர்ந்த நிலை, பணக்கஷ்டம். | பி.ப 3 மணி |
| வெள்ளி- | வெளியிடப் பிரயாணம், சிநேகித நன்மை. | காலை 7 மணி |
| சனி- | செலவு மிகுதி, வீண் சந்தோசம். | பி.ப 4 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம் - 1

### விருட்சிகம்:

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | புதிய முயற்சி, எண்ணங்கள் பலிதம். | பகல் 12 மணி |
| திங்கள்- | பணவரவு, மனக்கலக்கம். | பி.ப் 1 மணி |
| செவ்வாய்- | உயர்ந்த நிலை, மனமகிழ்ச்சி. | காலை 9 மணி |
| புதன்- | பகை தீரும், புதிய நட்பு. | பி.ப 3 மணி |
| வியாழன்- | வீண் பிரயாசம், செலவு. | காலை 9 மணி |
| வெள்ளி- | அந்நியரால் உதவி, மன ஆறுதல். | பகல் 12 மணி |
| சனி- | செலவு மிகுதி, கடன் பயம். | பி.ப 2 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்- 1

### துலாம்:

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | தனவிருத்தி, செலவு மிகுதி. | பகல் 10 மணி |
| திங்கள்- | உயர்ச்சி, மகிழ்ச்சி நிலை. | காலை 7 மணி |
| செவ்வாய்- | வீண் பிரயாசம், செலவு. | பகல் 12 மணி |
| புதன்- | பெரியோர் பகை, உத்தியோக உயர்வு. | காலை 8 மணி |
| வியாழன்- | துயர் நீங்கும், பூமி பலனுண்டு. | காலை 9 மணி |
| வெள்ளி- | அந்நியர் நட்பு, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| சனி- | தெளிவு நிலை, மனப்பயம் நீங்கும். | காலை 9 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 8

### கன்னி:

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | தனலாபம், உயர்ந்த நிலை. | பி.ப 4 மணி |
| திங்கள்- | பெரியோர் நட்பு, மன மகிழ்வு. | பகல் 11 மணி |
| செவ்வாய்- | தார சுகம், மேன்மையான வாழ்க்கை. | பகல் 12 மணி |
| புதன்- | உயர்ந்த நிலை, உறவினர் உதவி. | பி.ப 3 மணி |
| வியாழன்- | வீண் மனஸ்தாபம், சஞ்சலம். | பகல் 11 மணி |
| வெள்ளி- | கடவுள் பக்தி, தனலாபம். | பி.ப 3 மணி |
| சனி- | மகிழ்ச்சி, செலவு மிகுதி. | காலை 10 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி,அதிஷ்ட இலக்கம்- 7

# மருத்துவ விந்தைகள்

# தேனீ மருத்துவம்

பாற் வாக்னர் எனும் குடும்பப் பெண் தனது வீட்டில் தேனீக்களை வளர்க்கிறார். இவற்றின் மூலம் தேன் சேகரிப்பதல்ல அவருடைய நோக்கம். அவரைத் தேடிவரும் பல்வேறுபட்ட நோயாளர்களின் நோய்களிலிருந்து அவர்களைக் காப்பாற்றுவதற்கு இந்தத் தேனீக்களை பாற் பயன்படுத்துகிறார்.



அமெரிக்காவிலுள்ள மிடிலெக்ஸ் மாநிலத்தில் வால்டோஃப் நகரில் வசிக்கும் பாற் வாக்னரின் இல்லத்தில் தினமும் நூற்றுக்கணக்கானவர்கள் வரிசையாக நிற்பதைக் காணலாம். இவர்களனைவரும் பலதரப்பட்ட நோய்களினால் துன்புறுபவர்களாவர். இவர்கள் ஒவ்வொருவரும் தேனீக் களிடம் கொட்டுவாங்குவதற்கே வரிசை யாக வருகின்றர். தேனீக்களின் முகத் திலுள்ள நுண்ணிய ஊசி போன்ற முள் மனிதர்களின் உடலைக் கொட்டும் போது மிகக் கடுமையான வலி ஏற்படும். அப்போது ஒருவகைத் திரவம் தேகத்தின் உள்ளே புகுந்து விடுகிறது. இது வாதம் மற்றும் நரம்புடன்கூடிய பல நோய்களைக் குணமாக்கும் தன்மை வாய்ந்தது என்று தெரியவருகிறது.

பாற் வாக்னர் தேனீக்களிடம் உள்ள இந்த அபூர்வ ஆற்றலினை தற்செயலாகவே கண்டார். தான் பெற்ற அனுபவத்தை முன் மாதிரியாகக் கொண்டு அதனை ஏனையோருக்கும் உதவுவதற்கு அவர் முன்வந்தார்.



பாற், 1970ல் நரம்புத்தளர்ச்சி நோயினால் பீடிக்கப்பட்டுப் படுக்கையில் வீழ்ந்தார். இவருடைய கண்களும் பார்வையினை இழக்கும் நிலைக்குள்ளாயின. காதுகளும் கேட்கும் சக்தியினை இழக்க நேரிட்டது. மலம் சலம் போவதையும் கட்டுப்படுத்தும் தன்மையும் குறைந்து போதிய பலமின்றி வாடினார்.

கடந்த 1992ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில், தேனீக்களைக் கொட்டவைப்பதன் மூலம் பல நோய்கள் தீர்ந்து விடுகின்றன என்பதனை இவருடைய நண்பர் ஒருவர் மூலம் அறிந்தார். அந்த முறையினைக் கைக்கொள்ள நாட்டம் கொண்டார். ஒரு தேனி வளர்ப்பாளரிடம் சென்று அவருடைய உதவியுடன் சில தேனீக்களை ஒரு ஜாருக்குள் பிடித்துப் போட்டுக்கொண்டார். பின்னர் அந்த ஜாரின் வாயினைத்திறந்து அதனை தனது முழங்கால் மீது வைத்தார். உள்ளே இருந்த சில தேனீக்கள் இவருடைய இடது முழங்காலுக்கு சற்று மேற்புறத்தில் கொட்ட ஆரம்பித்தன.

பாற்றின் கால்கள் ஏற்கனவே உணர் வற்றிருந்தன. இதனால் பூச்சிகள் கொட்டும் போது வேதனை தெரியவில்லை. அதுவரை வெறுமனே மூச்சுமட்டும் விடும் சடலத்தைப் போன்றிருந்த பாற், தேனீக் களிடம் கொட்டு வாங்கிய 20 நிமிடங்களில் தனது உடம்பில் உணர்வு மெதுவாக ஏற்படுவதை உணரலானார்.

"சில நாட்கள் நான் தேனீக்களிடம் கொட்டு வாங்கினேன். இரண்டொரு தினங்களில் தேனீக்கள் கொட்டும் போது வேதனை ஏற்படுவதை உணர்ந்தேன். தொடர்ந்து எனது இழந்து போன சக்திகளை மீண்டும் பெற்றேன். இன்று பூரண குணமாகிவிட்டேன். எனது முன்னேற்றத்தைக் கண்ட எனது கணவர் றே, ஒரு தேன்கூட்டையே வீட்டில் கொண்டு வந்து சேர்த்துவிட்டார்." என்று மகிழ்ச்சிப் பெருக்கில் பாற் கூறிப் பெருமைப்படுகிறார்.

தனக்குக்கிடைத்த முன்னேற்றத் தினைப் பிறரிடம் சொல்லிக்குதூகலித்த பாற்றைத் தேடி பலர் வர ஆரம்பித்தனர். எட்டு ஆண்டுகள் தள்ளுவண்டியில் நடமாடிய ஒருவர் தேனீக்களின் கொடுக்கினால் கொட்டப்பட்டு சுயமாக நடமாடித்திரிவதாக அவர் கூறுகிறார். இருவருடங்களாக தனது கை இயங்காமல் துன்புற்ற பெண் ஒருவர் இப்பொழுது பூரண குணம் கண்டுள்ளார்.

திங்கள், புதன், வெள்ளி ஆகிய நாட்களில் மட்டுமே தனது தேனீ கொட்டும் சிகிச்சையினை பாற் தொடர்கிறார். அவருடைய கணவர் ரேயும் உதவுகிறார். ஏறத்தாழ 80 சதவிகிதமானவர்கள் பூரண குணம் பெற்றுள்ளதாக பாற் கூறுகிறார்.

"தேனீக்களிடமுள்ள விஷம் பலநோய்களைக் குணப்படுத்தும் சக்தி வாய்ந்தது என்று பரவலாக நம்பப் பட்ட போதிலும், இதனை விஞ்ஞான ரீதியில் ஆராயவில்லை" என்று வாஷிங்டன் நகர நரம்பியல் நிபுணர் டாக்டர் ஜோண் ரிச்சேட் தெரிவித்தார்.

## திரவ மருந்துகளில் தீமை

பலதரப்பட்ட நோய்களுக்கும் மருத்துவர்கள் சிபாரிசு செய்யும் திரவமருந்துகள் பல தீங்கு விளைவிக்கக்கூடிய பொருட்களைக் கொண்டிருக்கின்றன. இவற்றை உட்கொள்வதால் குறிப்பிட்ட நோய் குணமாகலாம். அதேவேளை வேறு பல நோய்களுக்கு அவை வித்தாகவும் அமையக்கூடும். இந்தியாவின் பல பாகங்களிலும் நடத்தப்பட்ட ஆய்வுகளின்படி புதிய தகவல்கள் வெளியாகியுள்ளன.

கந்தகாமிலத்தின் சில மாற்றுமருந்துகள், உணவுப்பண்டங்களோ மருந்துகளோ நீண்ட நாட்களுக்குப் பழுதுபடாமல் இருப்பதற்காகச் சேர்க்கப்படுகின்றன. இது ஆஸ்துமா நோயாளிகளுக்குப் பொருந்துவ தில்லை. வர்ணத்துக்காகச் சேர்க்கப்படும் புளியகக் கூட்டும் பல நோய்களுக்குக் காலாகிறது.

நீரிழிவு நோயாளிகள் இனிப்பு மருந்துகளைத் தவிர்க்க வேண்டும். இருமல்நோய்களுக்குத் தரப்படும் மருந்துகள் சீனிப்பாணிக்கலப்பில் சேர்க்கப்படுகின்றன. இவற்றில் சீனியின் செறிவு மிகவும் அதிகமாகும். சீனி முலாம் பூசப்பட்ட மாத்திரைகளையும் இவர்கள் ஒதுக்கிவிட வேண்டும்.

சிரப் அல்லது ரொனிக் எனப்படும் திரவ மருந்துகளில் பல்சிதைவை ஏற்படுத்தும் அமிலங்கள் உள்ளன.

இந்திய மருத்துவர்கள், மருந்துக் கடைகளில் விற்பனைக்காக வைத்திருந்த 499 மருந்துகளை பகுப்பாய்வுக்குள் உட்படுத்தியபோது, அவற்றில் போதை தரும் 'அல்க்கஹோல்" 53 மருந்துகளில் அதிக அளவில் கலக்கப் பட்டிருப்பதனைக் கண்டனர். சில மருந்துகளில் 20 சதவிகிதம் அல்க்கஹோல் இருந்தது. இனிப்புத் தன்மை இம்மருந்துகளில் 82 சதவிகிதமானவற்றில் காணப்பட்டன.

இனங்கண்டு பிடிக்க முடியாத வர்ணக்கலவைகள் 72 சதவிகித மருந்துகளில் காணப்பட்டன. இவற்றால் நன்மையை விட தீங்குதான் அதிகரிக்கும் என்று வல்லுநர்கள் கூறுகின்றனர்.

## கொழுப்புக் குறைந்த சிற்றுண்டியை நாடுங்கள்

| வேண்டப்படாதது (இதற்குப்பதிலாக → | வேண்டுவது இதனை உண்ணுங்கள்) | கிட்டும் பலன் கலோரி- | கொழுப்பு |
|---|---|---|---|
| உ.கிழங்குப் பொரியல்(3அவு) | அவித்த கிழங்கு 1 | 134. | 14கி |
| கொழுப்புள்ள இனிப்புப் பலகாரம் (2 அவு.) | கொழுப்புக்குறைந்த உழுந்து முறுக்கு | 87. | 18கி |
| சொக்கலேற் கேக் (ஒருதுண்டு) | சாதாரண கேக் | 140. | 15கி |
| ஐஸ் கிறீம் (1/2கப்) | தயிர்-(1/2)கப் | 180. | 14கி |
| பொரித்த கடலை (1அவு) | சோறு 3கப் | 55. | 14கி |

## பேன்களை ஒழிக்க.

பேன் தொல்லை பொறுக்க முடியவில்லையா? கண்ட மருந்துகளையும் பாவித்து முடியைக் கெடுத்துக்கொள்ளாதீர்கள். தேங்காய் எண்ணெயில் சிறிதளவு கற்பூரத்தை கரைத்து இரண்டு மூன்று நாட்களுக்கு நன்றாகத் தேய்த்துக் குளித்தால் பேன்கள் ஒழிந்துவிடும்.

## மந்தமான மனநிலையை மாற்றுவதற்கு ஏற்ற வழிகள்!

எத்தகைய மனிதரானாலும் எப்போதாவது மந்த நிலை ஏற்படவே செய்யும். எப்போதும் சுறுசுறுப்பாக இருப்பவருக்கும் எதிர்பாராத வகையில் மந்தமான மன நிலை ஏற்பட்டு அவரை செயலிழக்கச் செய்து விடும். "எனக்கு இன்று 'மூட்' நல்லாவேயில்லை" என்று ஒதுங்கிவிடும் பலரை பார்க்கிறோம்.

இத்தகைய மந்த நிலை ஏற்பட்டு அதிலே அமிழ்ந்து தன் திறமையையும் தகைமையையும் இழந்து விரக்தியடைய இடம் கொடுத்தால் அந்நபரின் நிலை மிகப் பரிதாபகரமாகவே முடிய நேரிடும். ஆகவே மந்த நிலையிலிருந்து மீளக்கூடிய சில வழிமுறைகளை உளவியல் நிபுணரான டாக்டர் ரொபட் பெல் கூறுகிறார்.

மந்தமான மனநிலையினை நீக்கா விட்டால் ஏமாற்றம், கோபம் போன்ற நிலைக்குள்ளாகி ஒருவர் வாழ்க்கையினையே நிலை குலையச் செய்து விடக்கூடும் என்று டாக்டர் பெல் கூறுகிறார்.

"மந்தமான மன நிலையினை நீக்குவது மிகவும் சுலபமானது" என்று டாக்டர் பெல் சில முறைகளை இங்கு கூறுகிறார்:

- உங்களுடைய மனநிலை பாதிப்புக்குள்ளானமைக்கான காரணத்தை முதலில் கண்டறிய முயற்சி செய்துபாருங்கள். கண்டு பிடிக்க முடியாமற் போனால் வீணாக அதற்காக மண்டையைப் போட்டுக் குழப்பாதீர்கள். இத்தகைய சூழ்நிலை எப்போதோ சில தடவைகள் வருவது தவிர்க்க முடியாத ஒன்று என்பதனை உணர்ந்து கொள்ளுங்கள். இந்த எண்ணம் ஏற்பட்டாலே பாதிச்சுமை உங்களிடமிருந்து வெளியேறிவிடும்.
- உங்களுடைய சிந்தனையை- எண்ணங்களை உங்கள் மனநிலை மந்தம் சிதறடிப்பதற்கு இடம் தராதீர்கள், மனநிலை ஒருவருடைய எண்ணங்களை தேவையற்று மிகைப்படுத்தி விடக் கூடும். இதனால் உண்மை நிலையை உணர விடாமல் தெளிவற்ற சிந்தனைகள் வியாபிக்கக்கூடும். உங்கள் மனநிலையை மேலும் மோசமடையச் செய்பவரை நாடாதீர்கள்.
- உங்கள் நண்பர்களில் யாரோ ஒருவர் நகைச்சுவையுடன் கூடிய கதைகள் கூறி உங்களை மகிழ்விப்பவராக இருப்பார். அவரைத் தேடிப் பிடியுங்கள். அல்லது தனிமையில் ஓய்வெடுங்கள். இது நல்ல பலனளிக்கும். ஆனால் இந்தத் தனிமை ஒரு நாளோ அல்லது இரு நாட்களோ மட்டுமே நீடிக்கலாம். கூடியகாலத் தனிமை மன ஓட்டங்களை சிதறடித்துக் குளப்பிவிடவும் கூடும்.
- உங்களுடைய பிரச்சனைகளை உங்களுக்கு நம்பிக்கைக்குரியவர்களிடம் கூறுங்கள். அவர்கள் நல்ல பரிகாரங்களைக் கூறக்கூடும்.

டாக்டர் பெல் மேலும் கூறுகையில், "வழமையாக உங்களுக்கு மகிழ்வூட்டும் எந்தச் சாதனத்தையும் நீங்கள் நாடலாம். உங்களுக்கு தொலைக்காட்சி பார்ப்பது மகிழ்வூட்டுமானால் உங்கள் புலனை அதில் ஈடுபடுத்துங்கள். மகிழ்வூட்டும் எந்தக் காரியத்தில் புலனைச் செலுத்தினாலும் அதில் ஈடுபடும்போது கவலைகள் தாமாக மறைந்துவிடும்" என்கிறார். ■



www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

## புதுமைத் தொடர்



### அத்தியாயம்—22




வெளியே உள்ள சந்தோஷின் ஆட்கள் உசாராகிவிட்டார்கள்.

உள்ளே சந்தோஷிற்கு ஆபத்து என்று புரிந்துகொண்டார்கள்.

ரம்யா சூழலின் விபரீதம் உணர்ந்தாள். எனினும் பதட்டம் கூடாது. அபாயம் சூழும்போதுதான் நிதானம் தேவை. எதிரியை நோக்கி எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியிலும் கவனம் தேவை. கவனம் தப்பினால் எதிரியின் கரத்தால் மரணம் நிச்சயம்.

சந்தோஷ் நிலத்தில் இருந்து தலை உதறியபடி எழுந்தான்.

ரம்யா பிஸ்டலை லோட் பண்ணியபடி சந்தோஷைப் பார்த்து இதழ்களில் பய வாசனையே இல்லாத புன்னகை காட்டினாள்.

"சந்தோஷ், உன் ஆட்கள் வெளியே துள்ளுகிறார்கள். துணையாகத் துள்ளலாம் என்று நீ நினைத்தால் என் பிஸ்டல் உன் உயிரை அள்ளிவிடும். என்ன செய்யப் போகிறாய்?"

சந்தோஷ் ரம்யாவின் முகம் பார்த்தான். இறுக்கமாய் இருந்தது. இடிபடும் கதவைத் திரும்பிப் பார்த்தான். ரம்யா நிச்சயமாய் சுடுவாள் என்று புரிந்தான். ஒரு கணம் யோசித்தான்.

"ஓ.கே.ரம்யா. உன்னையும் குலாம்ஷாவையும் விடுதலை செய்கிறேன். ஆனால்...."

"ஆனால் இருக்கட்டும் சந்தோஷ். விடுதலை செய்தால் மட்டும் போதாது. பத்திரமாய் கொண்டு சென்று உன் பாதாள உலகின் எல்லையில் விட்டுவிடவும் வேண்டும்."

"ரம்யா, நீ என்னை அதிகமாகச் சீண்டுகிறாய். இதன் விளைவை..."

"சும்மா மிரட்டாதே சந்தோஷ். ரம்யாவால் உன்னைக் கட்டிலில் மட்டுமல்ல, சாவின் தொட்டிலிலும் வீழ்த்த முடியும்."

பேசிக்கொண்டிருக்க, கதவு இடி தாங்காமல் உடைந்து வழிவிட்டது.

ஆயுதங்களை நீட்டியப்படி ஒரு கூட்டமே உள்ளே புகுந்தது. ரம்யா விவேகமானவள் மட்டுமல்ல வேகமானவள்.

கதவு உடைபட்ட தருணத்தில் சந்தோஷை நோக்கிப் பாய்ந்தாள்.

ஒரு கரத்தால் சந்தோஷின் கழுத்தை வளைத்துப் பிடித்தபடி பிஸ்டல் உயர்த்தி சந்தோஷின் இடது புற நெற்றியில் பிஸ்டல் முனையை அழுத்திப் பதித்தாள்.

உள்ளே புகுந்த கூட்டம் அதிர்ச்சியில் உறைந்து நின்றது.

"என்னப்பா, உங்கள் தலைவன் உயிரோடிருந்தால்தானே உங்களால் பிழைக்க முடியும்? இல்லை, வேண்டாம். எப்படியாவது பிழைத்துக்கொள்வோம் என்று நினைத்தாலும் வைத்தியின் ஆட்கள் உங்களை வேட்டை நாய்கள் போல துரத்திக்கடிப்பார்கள். கூட்டிக்கழித்துப் பார்த்தால் உங்களுக்கு சந்தோஷ் உயிர் முக்கியம்."

ரம்யா சொல்ல குறிவைத்து நீண்டிருந்த அயுதங்கள் தலை தாழ்த்தின. எல்லோரும் சந்தோஷைப் பார்த்தார்கள். சந்தோஷ் எதுவும் பேசாமல் ரம்யாவின் பிடியில் அசையாமல் நின்றான்.

"சந்தோஷ்! மௌனம் உதவாது ராஜா. எந்த நேரத்தில் எதைச் செய்வதென்றே உனக்குத் தெரியாது என்று எனக்குத் தெரியும். இப்போதும் அதை நிரூபிக்கிறாய் பார். ம்... சொல்லு. ஆயுதங்களை போட்டுவிட்டு நல்ல பிள்ளைகளாக நடக்கச் சொல்லு. சொல்லு சந்தோஷ்.....சொல்லடா."

பிஸ்டலால் அழுத்தினாள். சந்தோஷ் வாய்திறந்தான்.

"ஆயுதங்களை கீழே போட்டுவிட்டு வெளியே செல்லுங்கள்."

"குட்! பட், அதுமட்டும் போதாது. குலாம்ஷாவையும் பத்திரமாக காருக்கு அழைத்துவரச் சொல்லு."

சொன்னான். ஆயுதங்கள் கீழே வீசி வெளியே சென்றார்கள்.

ரம்யா சந்தோஷைப் பிடிவிலக்காமல், பிஸ்டல் முனை பதித்தது விலக்காமல் நடத்திச் சென்றாள்.

குலாம்ஷாவை ஒருவன் கூட்டிவந்தான்.

குலாம்ஷா ரம்யாவை வியப்பாய் பார்த்தார். சாகசங்கள் ரம்யாவின் கூடப்பிறந்ததோ என்று நினைத்தார்.

வெளியே காவலுக்கு நின்றவர்கள் கைகளில் ஆயுதங்கள் இருந்தன.

உள்ளே நடந்தது தெரியாமல் போனதால் சந்தோஷ் மடக்கப்பட்டு அழைத்துவரப்படுவது கண்டு அதிர்ந்து ஆயுதம் உயர்த்தினார்கள்.

சந்தோஷ் ரம்யாவின் பிடியில் இருந்தபடியே, தன் கரம் உயர்த்தி வேண்டாம் என்பது போல சைகை காட்டினான்.

கட்டுப்பட்டார்கள். கலக்கம் முகங்களில் தெரிந்தது.

ஏ.கே.47ஐ கீழே பதித்து முகத்தில் அதிர்ச்சி வாங்கி நின்றவனை அருகே வருமாறு குலாம்ஷா கூட்டுவிரல் அசைக்க, அருகே வந்தான்.

"என்னிடம் ஒரு ஏ.கே.வாங்கினீர்கள் பாருங்கள். அது உள்ளே இருக்கிறது. இதை எனக்குத் தந்துவிட்டு அதைப் போய் நீ எடுத்துக்கொள். கணக்குச் சரி. அட...யோசிக்காதே."

அவன் கொடுக்கலாமா கூடாதா என்று யோசிக்கவே அவகாசம் இல்லை. அவனது ஏ.கே47 குலாம்ஷாவால் பறிக்கப்பட்டது.

ஏ.கே.47ஐ கையில் ஏந்திய குலாம்ஷா கண்ணிமைக்கும் நேரத்தில் அதை உயர்த்தினார்.

எதிரே அடர்த்தியாய் இருந்த மரக்கிளை யொன்றை நோக்கி குறிவைத்து உயர்ந்த ஏ.கே.47 உதடு திறந்தது.

டுமீல்...

மரக்கிளையில் இருந்து தீனமான குரலுடன் ஒரு உருவம் கீழே விழுந்து இரத்தம் சிகப்பு நிறம் என்று மண்ணுக்குச் சொன்னது.

குலாம்ஷா சுற்றி நின்றவர்களை நோக்கி விழிகளால் தடவியபடி பேசினார்.

"அதொன்றுமில்லைத் தம்பிகளா. அவன் மரக்கிளையில் இருந்து ரம்யாவை குறிவைத்து தக்க தருணம் தேடினான் பாருங்கள். பாவம், அவனுக்கு ஏன் வீண் சிரமம். அதுதான் சுட்டுவிட்டேன். நிச்சயமாய் செத்திருப்பான். நாங்கள் போனபின் புதைக்கலாம். அல்லது எரிக்கலாம்."

குலாம்ஷா கேலியாய் பேசினார். தம்மில் ஒருவன் செத்து வீழ்ந்ததில் அனைவர் முகத்திலும் பயம் படையெடுப்பு நடத்திக் கொண்டிருந்தது.

சந்தோஷ் ரம்யாவின் பிடியில் இருந்தபடி தன் ஆள் ஒருவன் மடிந்த கோரம் பார்த்து திகைத்தான்.

ரம்யா சந்தோஷைக் காருக்கருகே கொண்டு சென்று நிறுத்தியபடி குலாம் ஷாவைப் பார்த்தாள்.

குலாம்ஷா காருக்கருகே விரைந்து வந்து, காரின் முன் கதவு திறந்து,

"சந்தோஷ், உள்ளே சந்தோசமாக ஏறப்பா. எங்களுக்கு என்ன சொன்னாய்? ஆ...சாகசம் காட்டக்கூடாது என்று சொன்னாய். இப்போது அதையே உனக்கு சொல்ல வேண்டியிருக்குது பார். ஏறு."

ரம்யா காரின் முன் புறமாய் சுற்றிவந்து முன் கதவு திறந்து சாரதி ஆசனத்திற்கு அருகே அமர்ந்தாள். பிஸ்டலை சந்தோஷின் விலாவில் பதித்தாள்.

குலாம்ஷா காரின் பின் கதவு திறந்து ஏறி,

"ஓ.கே. சந்தோஷ். அந்த வழக்கமான சிக்னல் எல்லாம் மறக்காமல் போட்டு, வழியில் உள்ள உன் ஆட்களுக்கு சந்தேகம் வராமல் பக்குவமாய் போ. ம்.... போ."

கார் கிளம்பியது. காரின் கதவுக் கண்ணாடி கீழே இறக்கினார் குலாம்ஷா.

வெளியே கை நீட்டி சந்தோஷின் ஆட்களுக்குக் கையசைத்தார். பின் சாரதி ஆசனத்தில் இருந்த சந்தோசைப் பார்த்து,

"சந்தோஷ், இப்படியொரு திருப்பத்தை நீ எதிர்பார்க்கவில்லை. இல்லையா?"

ரம்யா சிரித்தாள்.

"ஷா, நான் சந்தோஷிற்கு ஒரு வாக்குக் கொடுத்திருக்கிறேன்."

"என்ன வாக்கு ரம்யா?"

"அவனைப் பொலிஸின் கரங்களில் சிக்கவைப்பதில்லை என்று. அதாவது என் மூலமாக."

குலாம்ஷாவுக்குப் புரியவில்லை. சந்தோஷை இப்படியே பொலிஸ் நிலையத் திற்குக் கொண்டு செல்லலாம் என்று நினைத்தார். ஆனால் ரம்யா வாக்குக் கொடுத்திருக்கிறாள்.

ரம்யாவின் நட்பு சுத்தமானது. ரம்யாவின் நேசம் உன்னதமானது. ரம்யா தன் வாக்குத் தவறுவதை விரும்பவில்லை. அவள் விருப் பத்தை மீறிச் செயற்படுவது தூய நட்புக்கு ஏற்றதல்ல. தன்னோடு நட்புக் கொண்டவர் களின் பிடிப்புள்ள எண்ணங்கள் நிறைவேற உதவுவதே நேசங்களைப் பொத்திக் காப்பதாய் அமையும்.

வாக்குக் கொடுத்தது ரம்யா தானே, எனக்கென்ன என்று நினைப்பது சுத்தமான சுயநலம்.

"சரி ரம்யா, உன் வாக்கைக் காப்பாற்ற லாம். ஆனால் சந்தோஷ் ஒன்றை மட்டும் மறவாதே. குலாம்ஷா உன்னை விடமாட்டான். நீயாகச் சரணடைவது புத்தி. யோசித்து முடிவு செய்."

குலாம்ஷா சொல்ல ரம்யா சிரித்தாள்.

"ஷா உங்களுக்குப் போதாது புத்தி. சரணடைந்தால் என்ன செய்வீர்கள்? சரணடைந்து விட்டானே என்று கொஞ்சம் கருணை காட்டுவீர்கள். நீதிபதியும் தண்டனையைக் குறைத்து தாராளம் காட்டுவார். பின்னர் விசேட நாட்கள், விழாக்கள், பண்டிகைகள், மன்னிப்புகள் என்று கூட்டிக் கழித்து ஏதோ ஒருநாள் சந்தோஷ் வெளியே விடப்படுவான். போதுமா இது?"

ரம்யா என்ன சொல்கிறாள்! பேச்சிலே ஒரு புதிர் போடுகிறாள் என்று புரிந்தது.

மரங்கள் அடர்ந்த பாதையில் இருந்து வெளியே வந்து தெருவில் ஏறியது கார்.

"சந்தோஷ். இது போதும் காரை நிறுத்து."

என்றாள் ரம்யா. நிறுத்தினான். ரம்யா சந்தோஷ் எதிர்பாராத தருணத்தில் அவன் கன்னத்தில் முத்தமிட்டாள்.

திகைத்துப்போய் சந்தோஷ் ரம்யாவின் முகம் பார்த்தான்.

"என்ன பார்க்கிறாய்? எத்தனை முத்தங் களைப் பரிமாறியிருக்கிறோம். கட்டில் மேலே எழுதப்பட்ட கதைகள் எத்தனை? இப்போது முடிவுரை எழுதும் நேரம். முடிவு சுபமாக இருக்கவேண்டாமா? அதற்குத்தான் இந்த முத்தம்."

சொல்லிச் சிரித்தாள்.

"குலாம்ஷா நாங்கள் நடந்து போவது நன்றாக இருக்காது என்று நான் நினைக்கிறேன். நீங்கள் என்ன...?"

"நானும் அதைத்தான் நினைக்கிறேன். உன் வாக்குறுதி சந்தோஷிற்கு மாத்திரம்தானே. சோ நாம் காரைக் கொண்டுபோகலாம்."

"அது சரி. சந்தோஷ் அப்படியே இறங்கி, திரும்பிப் பார்க்காமல் விரைந்து நட. முறைக்கிறான் பார். முகமே இருக்காது. போடா."

சந்தோஷ் கார் விட்டு இறங்க, ரம்யா அப்படியே நகர்ந்து டிரைவிங் சீற்றில் அமர்ந்தாள். சந்தோஷ் வேகமாய் நடந்து கொண்டிருந்தான்.

"டியர் சந்தோஷ். ஒரு நிமிசம்."

என்றாள் ரம்யா.

சந்தோஷ் நின்று திரும்பிப் பார்த்தான்.

ரம்யா நிதானமாய் பிஸ்டலை உயர்த்தி, சந்தோசை நோக்கி குறிவைத்தாள்.

டுமீல்... டுமீல்... டுமீல்...

மூன்று தோட்டாக்கள். முதல் தோட்டா வயிற்றிலே. இரண்டாவது அவன் மார்பிலே. மூன்றாவது நெற்றியின் மையத்திலே.

அப்படியே மடங்கிச் சரிந்தான் சந்தோஷ்.

"ரம்யா என்ன இது?"

குலாம்ஷா அதிர்ச்சியுடன் கேட்க, ரம்யா பின்புறமாய்த் திரும்பி குலாம்ஷாவின் மார்பை நோக்கி பிஸ்டலை

"இன்னும் இதற்குள் தோட்டாக்கள் உண்டு மிஸ்டர் ஷா. பசிக்கிறதாம். இன்னும் வேண்டுமாம் உயிர்."

என்று சொல்லி கலகலவென்று சிரித்தாள்.

"என்னையும் கொல்லப் போகிறாயா நீ?"

"ஏன் கூடாதா? ஷா, எனக்கும் தலை வியாகும் ஆசை வந்துவிட்டது. இது நியாயமான ஆசை என்று நான் நினைக்கிறேன். நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?"

குலாம் ஷா பதில் சொல்லவில்லை. ரம்யாவின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தார்.

■

மதுமிதா என்ன சொல்லப் போகிறாள் என்று டி.ஐ.ஜி டென்சில் ஆர்வமானார்.

வைத்தி இன்ஸ்பெக்டர் அரவிந்தின் பிடியில் இருந்து திமிறிக்கொண்டிருந்தார்.

"யெஸ் டி.ஐ.ஜி. இவர் என் தந்தையே அல்ல. எல்லாமே வேசம். காரணம் ஆசை. சொத்துக்கள் மேல் உள்ள ஆசை. டி.ஐ.ஜி எனக்கு நீங்கள் ஒரு உதவி செய்யவேண்டும்."

"என்ன உதவி மதுமிதா"

"இவரோடு- அதுதான் என் தந்தையாக நடித்த மிஸ்டர் வைத்திலிங்கத்தோடு ஒரு மூன்று நிமிசம் நான் தனியாகப் பேசவேண்டும்."

டி.ஐ.ஜி டென்சில் யோசித்தார்.

"யோசிக்கவேண்டாம் டி.ஐ.ஜி. அந்த மூன்று நிமிசங்களுக்குள் வைத்தி என்னை எதுவும் செய்திட முடியாது. பல்லுப் பிடுங்கப்பட்ட பாம்பு என்ன செய்ய முடியும்?"

டென்சில் மதுமிதாவை கூர்ந்து பார்த்தார். இறைஞ்சுவது போல மதுமிதா பார்த்தாள்.

"ஓ.கே. மூன்று நிமிடங்கள் மட்டுமே." என்றார்.

"தாங்யூ டி.ஐ.ஜி. தாங்யூ வெரிமச். அந்த மூன்று நிமிடங்கள் போதும். அதனால் உங்களுக்கும் பல உண்மைகள் கிடைக்கும்."

என்றாள். நேர் எதிராய் இருந்த அறைக்குள் சென்றாள்.

இன்ஸ்பெக்டர் அரவிந்த்தைப் பார்த்து, வைத்தியை விடுமாறு தலையசைத்தார் டி.ஐ.ஜி.

பிடி விலக்கி, வைத்தியை மேல் இருந்து கீழ்வரை அலசிப் பார்த்துவிட்டு அறைக்குள் செல்ல அனுமதித்தார் இன்ஸ்பெக்டர்.

வைத்தி உள்ளே செல்ல அறைக்கதவு சாத்தப்பட்டது. உள்ளே தாழிடப்படும் சத்தம் கேட்டது.

இன்ஸ்பெக்டர் அரவிந்த் டி.ஐ.ஜியை திரும்பிப் பார்த்தார்.

வாசலில் யாரோ வரும் சத்தம் கேட்க பார்வையை வாசலில் போட்ட டி.ஐ.ஜி, முகத்தில் அதிர்ச்சி வாங்கினார்.

இன்ஸ்பெக்டர் ரஞ்சித்

வேகமாய் வர, பக்கத்திலே வந்து கொண்டிருந்தாள் மதுமிதா.

"மன்னிக்க வேண்டும் டி.ஐ.ஜி. உங்களை ஏமாற்றிவிட்டு தப்பிச் சென்றதற்கு."

என்று சொல்லியபடி மதுமிதா வர,

டி.ஐ.ஜியின் உத்தரவுக்கு காத்திராமல் அறைக்கதவை நோக்கிப் பாய்ந்தார் இன்ஸ்பெக்டர் அரவிந்த்.

கதவின் சாவித்துவாரம் வழியே உள்ளே பார்வையைச் செலுத்தினார்.

உள்ளே அறை தனக்குள் யாரும் இல்லை என்று சுத்தமாகக் காட்டியது.

பதட்டமாய் பார்வை விலக்கி "டி.ஐ.ஜி சம்திங் ரோங். ஏமாற்றிவிட்டார்கள்."

என்று சொல்லி, கதவின் மீது தன் உடலால் மோதினார் இன்ஸ்பெக்டர் அரவிந்த்.

மதுமிதா சிரித்தாள்.

டி.ஐ.ஜி டென்சில் சினத்தோடு மதுமிதாவை நோக்கி பார்வையை எறிந்தார்.

■

வைத்தி மதுமிதாவை இறுக்கமாய் அணைத்து அவள் இதழ்களைக் கடித்தார்.

"ஐயோ வலிக்கிறது வைத்தி. இந்த நேரத்தில் போய் உங்களுக்கு......"

இதழ்களை விடுவித்து சிணுங்கினாள்.

"இதற்கெல்லாம் நேர காலம் பார்க்க முடியாது மது. பெயரிலேயே மயக்கம் இருக்கிறது. உன் இதழ்களில் போதை இருக்கிறது. சுவைக்காவிட்டால் என் மூளையே இயங்காது."

"எனக்கு என்ன தரப் போகிறீர்கள்?"

"எதற்கு?"

"உங்களைக் காப்பாற்றியதற்கு. இல்லா விட்டால் இந்த நேரம் தகுந்த மரியாதையோடு விசாரித்துக் கொண்டிருப்பார்கள்."

"மது உனக்கு என்ன வேண்டுமோ கேள். தருகிறேன். ஆனால் எனக்கு இப்போது நீ வேண்டும். நீ தரும் தேவ சுகம் வேண்டும்."


சொல்லிக்கொண்டே மதுமிதாவை அணைத்து கழுத்திலே முகம் புதைத்தார். தொலைபேசி முதலில் என்னைத் தொடு என்று அழைத்தது.

மனமின்றி விலகி தொலைபேசி அருகே போய் ரிசீவரை தூக்கி காதில் வைத்தார்.

மறுமுனை பேசியது. வைத்தி தன்னையும் அறியாமல் உடல் முழுதும் நடுக்கம் கண்டார்.

(இன்னும் வரும்)


## பேனா நண்பர் அரங்கம்




பெயர்: ஆர். பாலசந்திரன்
வயது: 20
முகவரி: 191/4, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு-06.
பொழுதுபோக்கு: வானொலி கேட்டல், பத்திரிகை வாசித்தல், கவிதை எழுதுதல், உதைபந்து விளையாடுதல்.



பெயர்: ரி. மல்லிகா
வயது: 18
முகவரி: 88, ஹிஜ்ரா மாவத்தை, கதுறுவெல.
பொழுதுபோக்கு: வானொலி கேட்டல், பத்திரிகை வாசித்தல், டி.வி. பார்த்தல்.



பெயர்: ஏ.எல். சபூர்
முகவரி: டீன்ஸ் வீதி, அக்கரைப்பற்று-01.
பொழுதுபோக்கு: பத்திரிகை வாசித்தல்.



பெயர்: எம்.எஸ்.எம். அஷ்ரப்
முகவரி: SAUDIOGER LTD.
POST BOX 30231
YANBU AL-SINAIYAH
K.S.A.
பொழுதுபோக்கு: முத்திரை சேகரித்தல், பத்திரிகை, நவால் படித்தல்.

பெயர்: துரைசாமி உதயகுமார்
வயது: 22
முகவரி: கோட்லோஜ் எஸ்டேட் கந்தப்பளை.
பொழுதுபோக்கு: கதைப்புத்தகம், பத்திரிகை.

பெயர்: செல்வி எஸ். மாலா
முகவரி: 47-B, மாவள ரோட், இரத்தினபுரி.
பொழுதுபோக்கு: பத்திரிகை, பேனா நண்பர் தொடர்பு.

பெயர்: எம்.ஐ.எம். ரிஸ்லான்
வயது: 17
முகவரி: 138, மாவடி வீதி, பெரிய நீலாவணை -03 கல்முனை.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வரலாற்றுப் புத்தகங்கள் படித்தல்.


பெயர்: ஜெ. இனாயா
முகவரி: 141/1, மோதர வீதி, கொழும்பு-15.
பொழுதுபோக்கு: வானொலி கேட்டல், பத்திரிகை வாசித்தல், தொலைக்காட்சி பார்த்தல்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

## சிறுகதை

# இழப்புக்கள்

-தி. இளையவன்-



முத்தலிப் சைக்கிள் திருத்தும் கடை என்றால் எல்லோருக்கும் நன்கு தெரியும். அவரது சைக்கிள் கடைக்கு அருகேயிருந்த அடர்ந்த 'கொய்யா' மர நிழலின் கீழே நீண்ட நேரமாகவே 'அவர்' நின்றிருந்தார். வழமைபோல தனது கடையில் ஏகப்பட்ட வேலைகள் இருந்தமையினால் அவரைக் கண்டும் புன்னகைத்துவிட்டு தொழிலே கவனமாக இருந்தார் முத்தலிப்.

"இஞ்ச வாங்களேன்....! எவ்வளவு நேரமா அவர் நிக்கிறார்? பாவம் என்னவென்று கேட்டுத்தான் அனுப்புங்களேன்."

சைக்கிளுக்குப் புதிதாக செயினைப் போட்டு முடிந்த பின்னர் அது சரியாக வேலை செய்கின்றதா என்பதைப் பரீட்சித்துப் பார்ப்பதற்காக இரண்டு மூன்று தடவை பெடலைச் சுற்றிய பின்னர், வழியில் குறுக்காக கிடந்த பழைய உதிரிப்பாகங்களை காலால் ஒதுக்கி வழியைச் சுத்தப்படுத்திக் கொண்டே மனைவியைப் பார்த்து,

"அவர் ஒரு பிரிட்டிஷ் காலத்து சைக்கிளை வாங்கியிருக்கார். அதைத் திருத்துவதற்காகத்தான் வந்திருக்கார்." என்றார்.

"செய்துதான் கொடுங்களேன். பாவம்! எப்படி வாழ்ந்த மனுசன்."

"கொடுக்கத்தான் வேண்டும். காசு இப்ப இல்லையாம். பிறகு விறகு போட்டு கழிச்சுக் கொள்கிறாராம்."

என்ன பதிலைச் சொல்வது என்று தடுமாறிய பின்னர் கணவர் மீது ஒரு உருக்கமான பார்வையை செலுத்திக்கொண்டே,

"காசு என்னங்க காசு. மனுசன்தான் முக்கியம். நாளைக்கு நமக்கு."

"உண்மைதான். இப்போ அவரோட நிலைமையில காசை எதிர்பார்க்க முடியாது. ஒழுங்கா திருத்திக் கொடுப்பதாக இருந்தா எப்படியும் அயிரத்துக்கும் மேல செலவாகும்."

"அல்லாஹ்ட சோதனையைப் பார்த்தீங்களா? அந்த காலத்துல புதுசு புதுசா அயின் கொழையாம அவர் உடுத்திட்டு வந்தாரென்றால் மாப்பிள்ளை மாதிரியிருப்பார். இப்போ, நல்ல சைக்கிலுக்கும் வழியில்லாம.... பார்க்கப் பாவமா- மனசுக்கு கஷ்டமா இருக்கு."

"ஏதோ நம்மளால் முடிஞ்சத செஞ்சு கொடுப்போம். இப்போதைக்கு அவ்வளவு தான் முடியும்."

முத்தலிபின் அழைப்பையேற்ற, கொய்யா மர நிழலில் நின்ற தனது சைக்கிளை எடுத்துக் கடைக்குள் கொண்டுவர, முத்தலிப் அச்சைக்கிளை தூக்கி அதற்கென வைக்கப்பட்டிருந்த 'ஸ்டான்ட்' டில் நிறுத்தினார்.

"எவ்வளவுக்கு எடுத்தீங்க...?" அக்கேள்வி அவரைச் சங்கடப்படுத்தியிருக்க வேண்டும். உடன் பதில் சொல்லாது சற்றுத் தடுமாறினார். அவருக்குள் ஏற்பட்ட அவமான உணர்வுகளை முகம் தெளிவாகவே காண்பித்தது.

"750 ரூவா சொன்னாங்க இன்னும்...."

"இதுக்கா...?" ஆச்சரியப்பட்டுப் போனார்.

"காசு இப்போ கொடுக்கிறதில்லை...." வெட்கத்தால் மீண்டும் தடுமாறினார்.

"பரவாயில்லை சொல்லுங்க."

"அதுக்கு ஒரு நாளைக்கு 50 ரூபாவுக்கு விறகு போடுறதா பேச்சு."

'நல்லமுறையா திருத்திறதா இருந்தால் எப்படியும் 1000 ரூபாகிட்ட போகும்' சைக்கிளைத் திருத்திக் கொண்டிருந்த முத்தலிபின் எண்ணங்கள் சிறகடித்தன. சில வருடங்களுக்கு முன்னர் ஒரு நாளைக்கு 400 அல்லது 500 என வீட்டிலிருந்தபடியே விறகு விற்று வருமானமாகப் பெற்றுக் கொண்டவர். இப்போ தன் உடம்பை வருத்தி 10 அல்லது 20 மைல்களுக்கப்பால் சென்று மரத்தை வெட்டிக் கொத்தி ஊர் ஊராகச் சென்று விற்பனை செய்வதென்றால்....சே! எவ்வளவு பரிதாபம்! அவருக்காக மனதிற்குள் அழுதார்.

நல்லா வாழ்ந்தவர்கள் நொந்துபோகவே கூடாது. அவர்கள் கஷ்டப்படுவதைக் காண இஷ்டப் படாத குணம் கொண்டவர்தான் முத்தலிப். தனக்கும் நன்கு பழக்கப்பட்டவர். அப்போ முதலாளி என வாய்நிறைய கூப்பிடப்பட்ட மனுசன் இன்று காசுக்காக வெட்கப்பட்டு தலைகுனிந்து 'ஆண்டவா இப்படியா காலம் மனுசனை சோதிக்கணும்?'

மூன்று வருடங்களுக்கு முன்னர் 'வளவுக்காரர்' என்று சொன்னால் நிலாவெளிப்பகுதியில் சின்னக் குழந்தைகளுக்குக்கூட அடையாளம் தெரியும். பணத்துடன் மிகுந்த செல்வாக்கிலும் வாழ்ந்தவர் முதலாளி உதயகுமார். அவரிடமிருந்த வாகனங்களில் சாரதியாக வேலை பார்த்தவர்கள் மட்டும் மூன்று பேர்கள். அதைவிட வயல் காணி, தோட்டம், மாட்டுப்பண்ணை ஆகியவைகளைக் கவனிப்பவர்கள் என்று கணக்குப் பார்த்தால் எப்படியும் அவரை நம்பி 25 அல்லது 30 குடும்பம் சீவியம் நடாத்தும். இத்தனைக்கும் அவரோ, தான் என்றும் ஊரிலே பெரிய பணக்காரர் அல்லது பல பேருக்கு முதலாளி என்று சிறிதும் காட்டிக்கொள்வதில்லை. சில வேளைகளில் காலில் செருப்புக்கள் இல்லாமல் கூட வீதியில் வலம் வருவதைக் கண்டு அந்தப் பெருந்தன்மைகளை ஊரே புகழும். யார் கண்கள் பட்டதோ அவர் வாழ்க்கையிலும் விழுந்தது ஒரு இடி.

தான் உழைக்கவெனத் தொடங்கிய இளமைக் காலத்திலிருந்து தன் உடல் வருத்திக் கஷ்டப்பட்டு பணத்தையும் ஊர் மக்களையும் சம்பாதித்துக் கொண்டவர். 25 வருடங்களுக்குள் முதலாளி என்ற அந்தஸ்த்தைப் பெறக்கூடிய நிலமைக்குத் தன்னை உயர்த்திக் கொண்டதை ஒரு போதும் பெருமையாகவோ அல்லது சிறப்பாகவோ கூறிக்கொள்வதில்லை. யாராவது கேட்டால் 'எல்லாம் அந்த ஆண்டவன் செயல்' என வானத்தைப் பார்த்து தன் இரு கைகளையும் உயர்த்திக் கொள்வார். அவர் அதிகமாகச் சொல்லிக் காட்டும் 'அந்த ஆண்டவன் தருகிறான். அவர் இஷ்டப்பட்டா பறிச்சிடுவான் என்ற அந்த வார்த்தைகளே அவர் வாழ்க்கையில் நிஜமாகிவிட்டது. அவருக்குச் சிறுகச் சிறுகக் கொடுத்த ஆண்டவன் அனைத்தையும் மொத்தமாகப் பறித்துக்கொள்ள நியமித்திருந்த அந்த நாள்தான் கடந்த 1990ம் ஆண்டு ஜுன் 13ம் திகதி.

யார் கண்டார்கள் வடக்கு-கிழக்குத் தமிழர்களுக்கு அது ஒரு சாபக் காலமென்று. அரை கோடிக்கும் மேல் பெறுமதியான சொத்துக்களுக்குச் சொந்தக்காரரான உதயகுமார் முதலாளி அரை நாளுக்குள்ளேயே எல்லாவற்றையும் இழந்து அனாதையாக, அகதியாக ஆக்கப்பட்டு அல்லல்பட்டது உண்மையில் காலத்தின் கொடுமை.

மூன்று வருடங்களின் பின்னர் நிலமை வழமைக்குத் திரும்பி விட்டது என்ற பத்திரிகைச் செய்திகளை நம்பி அந்த மண்ணில் கால் வைத்தவர் வியந்து போனார். தன்னை வளர்த்த ஊரும், தான் வளர்த்த தோப்புக்களும் தன்னை விட பரிதாபமான நிலமைக்காளாகியிருப்பது கண்டு கலங்கினார். வீதிகளெங்கும் விதவைக் கோலத்தில். வீடுகள். மனிதர்கள் வாழ்ந்த வீட்டினுள் விச ஜந்துக்களும் சிறு காட்டு விலங்குகளும் ஜீவனம் நடாத்திக் கொண்டிருந்தது. இருந்தும் அவருள்ளத்தில் ஒரு உறுதி. அவரோட ஆரம்ப காலத்து உறுதிபோல. இது எமது மண். எம்மை வாழ வைத்தமண். ஒன்றுமே இல்லாது வந்த எம்மை பணத்தோடும் புகழோடும் வாழச் செய்த மண். அவருடைய பார்வையில் அந்த மண்ணுடைய அமைப்பு மனச்சுமைகளை வெறுமையாக்கி உழைத்து உயரலாம் என்ற உறுதியை கொடுத்தது. அவர் தனது ஆரம்ப இளமைக்கால வாழ்விற்கு தன்னை தயார்ப் படுத்திக்கொண்டார். அதனோட முதல் முயற்சியே முத்தலிப் சைக்கிள் கடையில் திருத்தத்திற்காக காத்திருந்தது.

அவர் கொடுத்திருந்த சைக்கிளை முத்தலிப் காட்டியதும் வியந்து போனார். ஒரு கிழமைக்குள்ளே இப்படி மாறிவிட்டதே!

"என்ன...? உங்கட சைக்கிள் தான். ஓடியெல்லாம் பார்த்தாச்சு. ஒரு வருசத்திற்குச் சின்ன சத்தமும் கேட்காது எல்லாமே ஜப்பான் பாட்ஸ்கள் தான்."

"சந்தோசம் தம்பி. அவசரமா மீன் வாங்கிட்டு போகணும் அப்ப நான் வாரன்." முத்தலிபுக்கு தன்னுடைய நன்றிகளை புன்னகையாலும் வார்த்தையாலும் முடித்துவிட்டு, மனதிற்குள் கடவுளை நினைத்துக்கொண்டு பயணத்தைத் தொடங்கினார்.

புதிய அமைப்பைப் பெற்றிருக்கும் தனனுடைய பழைய சைக்கிளை மனைவிக்குக் காண்பித்து அவளையும் சந்தோசப்படுத்த வேண்டும் என்ற எண்ணம் மேலிட விரைவாகச் சென்றவர் 3ம் கட்டைச் சந்தியில் இருந்த மீன் கடை சந்தைக்குள் சென்றார்.

முச்சந்திக்கு முன்பாக அந்தப் பெரிய புளிய மரத்தை அடுத்தாற்போலிருந்த சந்தைக்கு முன்பாக இருந்த பிரதான வாசல் பக்கமாகச் சைக்கிளைக் கொண்டு சென்றால் அதற்கென ஏற்பாடு செய்திருக்கும் இடத்தில் சைக்கிளை நிறுத்த வேண்டும். அங்கு வைத்தால் இலகுவில் எடுத்துப் போக முடியாதபடி மேலதிகமான சைக்கிள்களையும் நெருக்கமாக வைத்து விடுவார்கள். சிரமங்களைத் தவிர்த்துக் கொள்வதற்காக வேண்டி அவர் அவ்விடம் செல்லாது அன்புவழிபுரம் வீதியில் பழைய கிளாஸ் தொழிற்காலைச் சுவரோடு சாத்தி வைத்ததன் பின்னர் சந்தைக்குள்ளே சென்றார்.

மீன் விலைகள் ஒவ்வொருவரிடமும் வித்தியாசப் பட்டது. இன்னும் உள்ளே சென்றால் மலிவாக வாங்கலாமென்ற எண்ணத்திற்கு முதலிடம் கொடுத்தார். மீனை வெட்டி 'சொப்பிங், பைக்குள் போட்டு வியாபாரி கொடுத்ததும் அதை வாங்கிக் கொண்டு திரும்பியவர் பார்வையில் பரபரப்பாக அவரது ஊர்க்காரர்.

"முதலாளி உடனே போங்க. அக்காவுக்கு உடம்பு சரியில்லை. வேன்கார ராசையா கிட்ட செய்தி சொல்லியனுப்பிருக்காங்க."

"என்ன..? என்னாச்சு?" தடுமாறிப்போனார்.

"வீட்டுக்குள் அடுக்கி வைச்சிருந்த விறகுக் குள்ளிருந்த பூச்சி கடிச்சிடுச்சாம். வாயெல்லாம் நுரைதள்ளிட்டதாம்." தகவல் சொன்னவனைக் கூட பொருட்படுத்தாது உடல் வியர்த்தது! தனது சைக்கிளை நோக்கி ஓடினார். கண்ணுக்கு எட்டிய தூரம் வரைக்கும் பார்த்தார். தனது சைக்கிளைக் காணவில்லை. தான் சைக்கிளைப் பூட்டாது வந்த முட்டாள் தனம் உடனே மனதில் பளிச்சிட்டது. 5 மணிக்குப் பின்னர் போவதற்கு வாகனங்கள் ஏதும் இல்லாமையினால் நிலைமைகளையுணர்ந்தும் மனதை திடப்படுத்திக்கொண்டு இருட்டையும் பொருட் படுத்தாது கால் நடையாகவே ஊரை நோக்கி விரைந்தார்.

•

சைக்கிள் கடையை திறப்பதற்கு முன்னரே தன்னை அழைப்பது யாராக இருக்கும் என்பதை பார்ப்பதற்காக வெளியே வந்த முத்தலிப் எதிரே அறிமுகமில்லாத ஒருவர் நிற்பதைக் கண்டார்.

"நீங்களா கடை முதலாளி...?"

"நீங்க யாரு?"

"நான் நிலாவெளி இருந்து வாறன். உங்ககிட்ட குமார் முதலாளி சைக்கிள் திருத்தினாராம்..."

"ஓம். செலவுக்கு விறகு போடுறதா சொன்னார். வாக்குத் தவறாத மனுசன். ஏனோ ரெண்டு கிழமையா ஆளைக்காணோம்."

"இனிமேல் வரமாட்டார்." அந்த வார்த்தையிலிருந்த சோகம் முத்தலிப் உள்ளத்தைத் தொட்டது.

"ஏன்...!"

"அந்த சைக்கிளை எடுத்தது அவரோட கெட்ட காலமாக இருக்கணும். உங்ககிட்ட சைக்கிளைத் திருத்தி எடுத்த அண்ணைக்குன்னு பார்த்து மனுசிய பாம்பு கடிச்சு அவ செத்துப் போயிட்டா. 3ம் கட்டை சந்தியில் வைச்ச அவரோட சைக்கிளும் களவுபோய் வாகனங்கள் இல்லாமையினால் முதலாளி தனியா இருட்டு வேளை ஊர் பக்கம் கால் நடையா வந்திருக்கார். நேரம் கெட்ட நேரம் பாருங்க யாரென்று தெரியல. காட்டுப் பாதையில வைச்சு சுட்டுப் போட்டாங்க. விடிஞ்சதும் தான் சவத்தை எடுத்தோம்."

"இன்னாலில்லாஹி வயின்னா இலைஹி ராஜிஊன். யா அல்லாஹ்! நல்ல மனுசனுக்கு இப்படியும் ஒரு சோதனையா...?"

"நம்மட கையில என்ன இருக்கு? எல்லாம் பரந்தாமன் செயல். அவர் எப்பவோ தன் சொத்துக்கள் எல்லாத்தையும் இழந்ததோடவே செத்துப் போன மாதிரிதான். அவரோட சைக்கிள் திருத்தியதற்கு எவ்வளவு வந்திச்சு? காசை நான் தாறன்."

"என்னண்ணே? எங்களையும் மனுசனா நெனையுங்க. நாங்க மதத்தாலதான் வேற ஆட்கள். மற்றப்படி உங்களோட விளையாடி வளர்ந்த வங்கதான். உங்களோட பழகி உங்க காசுகளையும் நம்பி தொழிலை ஆரம்பிச்சவங்க. எங்களுக்கும் மனசிருக்கு. அதுல அன்பு, பாசம், இரக்கம் எல்லாமே நிறைஞ்சிருக்கு. முதலாளி செத்துட்டார் என்று இப்போ கேள்விப்பட்டதும் என்னையறியாமலே மனசு துடிக்கிறத உங்களால் ஏன் புரிஞ்சுக்க முடியிறதில்ல. அவரோட இழப்பு எனக்கும் வேதனைதான். இன்னைக்குக் கடை பூட்டு. இதுதான் நான் அவருக்காக செய்யும் துக்க அஞ்சலி."

மேற்கொண்டு எதுவும் பேசாது சற்று முன்னர் திறந்த தனது கடையை இழுத்துப் பூட்டி வெளிப் பக்கமாகப் பூட்டைப் போட்டு, கடையின் மேல் ஒரு கறுத்தக் கொடியினை கட்டும் நோக்கில் வீட்டுப் பக்கமாக விரைந்தார். ■

---

**எனக்குப் புரியவில்லை**
**இஸ்ரா...**
**நிலவுக்கு-உன் பெயர்**
**சூட்டப்படாத காரணம்**
**இன்னும்**
**எனக்குப் புரியவில்லை...**

நீ புன்னகைத்த போதுதான் என் விடியலில் பனி விலகியது. உன் சிரிப்பின் சிதறல்களால்தான் பூக்கள் சிலிர்த்துக் கொண்டன.

நம் பிணைப்பின் ஆரம்பம் வழமையானதுதான். ஆனால் அதன் நிகழ்வுகள் நிச்சயம் வித்தியாசமானவை. அந்த உணர்வின் ஆரம்பத்தை இன்னும் என்னால் நிச்சயப்படுத்த முடியவில்லை. வரிசைப் படுத்த இயலவில்லை.

இந்த ஊர் வாய் நம்மை மென்று கொண்டிருந்த போதும் நம் பார்வைகளில் சலனம் இல்லை. நம் உணர்ச்சிகளில் களங்கம் இல்லை. ஆயுள் குறைந்த ஆபாச உணர்வுகள் நம்மைத் தீண்டவேயில்லை. உனக்குப் புரியும் இஸ்ரா... இந்த வரிகளின் அர்த்தம் உனக்கு மட்டுமாவது நிச்சயம் புரியும்.

நீ அடிக்கடி பிரிக்கப்பட்டாய். என் கண் பார்வையிலிருந்து மட்டுமே நீ பிரிக்கப்பட்டாய். ஆனால் பிரிவால் இந்தத் தீ மூட்டப்படுகின்றது. இன்னும் ஊதப் படுகின்றது என்பது உன்னவர்களின் இரும்பு இதயங்களுக்குத் தெரியவில்லை.

என் டயரியின் வரிகள் உன் இதயத்துடிப்பால் எழுதப்பட்ட போதும், சுவர்க்காலண்டரின் நிறை பக்க இழப்புகளால் குறைந்த போதும், பொழுதுகள் மட்டும் எனக்கு விடிவேயில்லை. உன் நினைவுகள் என்னை அழுத்தியதால் நான் நடந்த வழிகளில் என் பாதச் சுவடுகள் அழியவேயில்லை.

**நினைக்கத் தெரிந்ததை**
**மறந்திடும் மனம் வேண்டும்**
**பழகத் தெரிந்தும்- அதை**
**விலக்கிட உயிர் வேண்டும்.**

நான் நினைக்கிறேன் இஸ்ரா.... கண்ணதாசனுக்கும் என்நிலமை வந்திருக்கும்... இல்லையா? நிச்சயம் வந்திருக்கும்.

"மறந்துவிடு" என்று சொல்கிறார்கள் விரலிடுக்கில் புகையும் சிகரட்டோடு. "பெண்ணுக்கா பஞ்சம்?" என்கிறார்கள்... வளையம் வளையமாக புகைவிட்டுக் கொண்டு. மறந்துவிடலாம், நான் நினைக்காமல் இருப்பதானால்...எத்தனை பெண் கிடைத்தாலும் எனக்கு இன்னொரு "நீ" கிடைக்கமாட்டாயே இஸ்ரா. எப்படி மறப்பேன்? உன்னோடு வாழ்ந்த ஒவ்வொரு வினாடியும் என் இதயத்துடிப்போடு இணைந்துவிட்டதே... என் சுவாசத்தோடு சேர்ந்துவிட்டதே எப்படி மறப்பது? என் கனவுகளும் சாம்பலாகிப் போகின்றன. அவர்களின் சிகரட்டுக்களோடு.....

நீ என் வீடு தேடி வந்தும், என்னிடம் அடைக்கலம் புகுந்தும் உன்னை




இழந்துவிடக்காரணமாக இருந்தது எது இஸ்ரா? என் அறியாமையா? நடப்பதைத் தடுக்க எனக்கு உரிமையில்லை என்ற உணர்வா? அல்லது சுற்றியிருந்தவர்களின் வார்த்தைக்குக் கட்டுப்பட்ட என் முட்டாள் தனமா? அல்லது நான்தான் அப்போது கோழையாகிவிட்டேனா? எது? எனக்குத் தெரியவில்லை இஸ்ரா? ஆனால் நான் ஏங்குகின்றேன். இன்னொரு முறை, ஒரேயொருமுறை அப்படியொரு நிகழ்வு ஏற்படக்கூடாதா என்று தினம் தினம் ஏங்குகின்றேன். இந்த உயர்வு எண்ணம், இதெல்லாம் தவறு என்பதற்காக நாம் பிரிக்கப்பட்டிருந்தால் என்னைத் தேற்றிக் கொள்ள நான் முயுற்சித்திருப்பேன். ஆனால் பணம், அந்தஸ்த்து என்ற மோசமான வேலியல்லவா நமக்கிடையில் போடப்பட்டுவிட்டது.... நான் என்ன செய்வேன்?

உன்னைப் பார்க்க வேண்டும், உன் குரலைக் கேட்க வேண்டும், அப்புறம்... எனக்குத் தெரியவில்லை இஸ்ரா... என் உணர்வுகளை விபரிக்க எனக்குத் தெரியவில்லை. எப்படிச் சொல்வேன், உனக்குப் புரிகிறதா? இந்தத் தவிப்பு, ஏக்கம் உனக்குப் புரிகிறதா? இஸ்ரா....

எங்கே இருக்கிறாய்? இனி உன்னைக் காணவே மாட்டேனா? இன்னொருவனுக்கு மனைவியாக என் இஸ்ரா... முடியவில்லையே..... கற்பனை பண்ணினாலே நான் செத்துவிடுவேன் என்று தோன்றுகின்றதே... இஸ்ரா. அவன் உன்னைப் புரிந்து கொள்வானா இஸ்ரா?

உன் நினைவில் விழித்திருப்பதால் நட்சத்திரங்கள் எனக்கு அறிமுகமாகி விட்டன. வானம் பழகிவிட்டது. கூரை முகட்டில் வலையமைக்கும் சிலந்தியின் காலசைவுகள் எனக்குப் புரிந்து விட்டது. கவனி இஸ்ரா.... திங்களுக்கொருதடவை என் மனதைப் போலவே ஆகாயம் இருண்டு போகிறது... கடலைப் போலவே என் கன்னங்களிலும் கண்ணீரால் உப்பு விளைகிறது.

நம்மைப் பிரித்த ஆண்டவனிடம் நான் ஒன்றைக் கேட்டுக் கொண்டிருக்கின்றேன். உனக்குத் திருமணம் நடந்தால் அது எனக்குத் தெரியாமலே போகட்டும். என் இஸ்ராவுடன் நான் கற்பனையிலாவது வாழ்ந்து கொண்டிருப்பேன். என் உணர்வுகள் மரத்துப் போகும்வரை, என் சுவாசம் சுயமாக நிகழும் வரை, என் இதயம் நிரந்தரமாய் இயங்க மறுக்கும்வரை நான் உன்னுடன் வாழ்ந்து கொண்டிருப்பேன்.

கடைசியாக நீ எழுதியிருந்தாய் உன் கடிதத்தில்...

"சோதனைகளை சாதனையாக்க முயற்சிப்போம்."

இங்கே சோதனைகளே வாழ்க்கையாகி விட்டதே இஸ்ரா. நம் நேசம் சரித்திரமாகாதுதான். ஆனால் சில இதயங்களிலாவது இது ஒரு சம்பவமாகட்டும். இதை நீ படிக்க நேர்ந்தால், இதனால் உன் வேதனைகள் கிளறப்பட்டால் என்னை மன்னித்துவிடு இஸ்ரா....தயவு செய்து மன்னித்துவிடு....

இனியும் பனி விலகும்...உன் புன்னகை இல்லாமலே.....

பூக்கள் சிலிர்த்துக்கொள்ளும்- நீ சிரிக்காமலே

வழக்கம் போல் நிலவுக்கு நிலவு என்றே சொல்லப்படும். ●

---

# என்று தணியும் இந்த....

-ஸ்ரீவரணி-



மாரிமுத்து எவ்வளவு எடுத்துச் சொல்லியும் சுந்தரி கேட்டபாடில்லை.

"மகள், விரலுக்கு ஏத்தபடிதான் வீக்கம் வேணும். எங்கட தகுதிக்கு ஏத்தாப் போலத்தான் மாப்பிள்ளை பாக்க வேணும், நமக்கெல்லாம் படிச்சவன் மாப்பிள்ளையா வருவானா?"

"அதெல்லாம் எனக்குத் தெரியா, கூலிக்காரன என்னால கட்டிக்க ஏலா, கொஞ்சம் படிச்ச ஏதாவது வேலையில இருக்கிற மாப்பிள்ளையெண்டா பாருங்க."

"அப்ப உன்ர அப்பன் நான் கூலி வேல செய்யலய்யா? நேரத்துக்கு நேரம் உங்களுக்கு சாப்பாடு போடலயா?"

"ஓமோம் உங்கட உழைப்புல அம்மா படுறபாடு எனக்கல்லா தெரியும்."

தோளைமீறி வளர்ந்தவள். அவளைப் படிப்பித்து ஆளாக்கிய அவளது தந்தையைப் பார்த்து எகிறினாள்.

"உங்களயெல்லாம் ஆளாக்க எவ்வளவு கஷ்டப்பட்டன். இப்ப உங்கட வாய்ச் சொல்லாலயும் கஷ்டப்பட வேண்டியிருக்குது" மாரிமுத்துவின் கண்கள் கலங்கியிருந்தன.

"புள்ள அப்பா சொல்லுறதக் கேளன். அப்பா நெஞ்சு வருத்தக்காரரல்லவா?" தாய் செல்லம்மா பரிந்து வந்தாள்.

"அதுக்காக என்ர வாழ்க்கைய நான் நாசமாக்க வேணுமே? அதுமட்டும் நடக்காது" தாயைப் பார்த்துக் கூறியவள் சோகமாய் வெளியேறினாள்.

மாரிமுத்து, அன்றாடம் உழைத்து அன்றாடம் வயிற்றைக் கழுவும் ஒரு கூலித்தொழிலாளி. நாற்பது வயது கொண்ட அவரை மூப்பு அதிகமாக ஆக்கிரமித்திருந்தது. காரணம் கவலைகள். சம-காலத் தமிழனொருவனுக்கு காணப்படும் சமகாலக் கவலைகள்.

மாரிமுத்துவிடம் செல்வம் இருந்ததோ இல்லையோ பிள்ளைச் செல்வம் நிறைய இருந்தது. அச்செல்வங்கள்கூட நாட்டுப் பிரச்சனையால் குறுகி விட்டதுதான் அவரை அதிகளவு வாட்டம் பெறச் செய்திருந்தது. ஆறு பிள்ளைகளில் மூன்று ஆண்வாரிசுகளை "பிரச்சனை" விழுங்கி விட்டிருந்தது. மூத்த பெண்ணைக் கட்டிக்கொடுத்து ஆறுமாதம் கழியவில்லை. அவளும் கைம்பெண்ணாய் திரும்பி விட்டிருந்தாள். மாரிமுத்துவும் பொறியில் அகப்பட்டவர் தான். உயிர் தப்பியதுதான் அதிஷ்டம். ஆனால் இப்போது நினைத்துக் கொள்கிறார் துரதிஷ்டமென்று. கடைசி வாரிசு பையனொன்று, அதற்கு மூத்தது சுந்தரி. கடைசியை நினைத்தால் அடுத்த கவலை. வயதுக்கு மீறிய வளர்ச்சி. போதாக்குறைக்கு கறுப்பு வேறு. ஊரில் 'ரவுண்டப்' என்றால் போதும் பிடித்து வைக்கப்படுபவர்களில் அவன்தான் முதலில்.

எல்லாக் கவலைகளும் சேர்ந்து மாரிமுத்துவை இதய நோயாளியாக்கியிருந்தது. அடிக்கடி வைத்தியாசலை வாசம். கால், முகம் வீங்கி ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதித்து வீட்டிற்கு வந்து சில நாட்கள்தான் ஆகியிருந்தன. வரும்போது டாக்டர் சொல்லி விட்ட விடயம் 'கடுமையான வேலைகளெதுவும் செய்ய வேண்டாமென்று. வீட்டிற்கு வந்தால் மனைவி செல்லம்மா சொன்ன விடயம் வேறு அவரைக் குழப்பியது. சுந்தரி, ஒரு துர்நடத்தைப் பையனோடு சுத்துகிறாள்

17ம் பக்கம் பார்க்க...

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்



# தாம்பத்திய ஊடல்

என். உதயகுமார்



மனேஜர் அவசரமாக அந்தப் ஃபைலை அனுப்பவேண்டுமென்று கூறியும் பிரதாப்பால் ஃபைலில் கவனத்தைச் செலுத்த முடியாமலிருந்தது. அவனுடைய மனத்தில் திரும்பத் திரும்ப நேற்றிரவு மனைவி காயத்ரி கூறிய வார்த்தைகள் தான் காதில் ரீங்காரமிட்டபடியிருந்தன.

'காயத்ரி இவ்வளவு அற்பமாக நீ என்னை எடைபோட்டு விட்டாயே... நான் உன்னைச் சுற்றி சுற்றி வருவதெல்லாம் அந்த அற்ப சுகத்திற்காகத்தான் என எண்ணித்தானே அவ்விதம் கூறிவிட்டாய்.'

பிரதாப்பின் மனம் வேதனையால் துடித்தது.ஒரு ஏக்கப் பெருமூச்சொன்று அவனிடமிருந்து வெளிவந்தது.

"என்ன மச்சான் பிரதாப். நானும் காலையிலயிருந்து பார்க்கிறன், உனக்குள்ள ஏதோ பேசிக்கொண்டு பெருமூச்சுக்களா விட்டுக்கொண்டிருக்கிறாய், ஐயாவுக்கு என்ன நடந்தது...? கல்யாணமாகி மூன்று மாதத்திற்குள்ளேயே குடும்ப வாழ்க்கை கசக்க ஆரம்பித்துவிட்டதோ.." கிண்டலும் கேலியாயுமாகப் பக்கத்து சீட்டில் அமர்ந்திருந்த பார்த்திபன் கூறியது கூட பிரதாப்பின் காதில் விழவில்லை. அவனது மனம் நேற்று நடந்த சம்பவத்தை திரும்பவும் அசைபோட்டுப் பார்த்துக்கொண்டிருந்தது......

• • •

அன்று மலையும் ஆபிஸ் முடிந்த கையோடு பிரதாப் வழக்கம் போல் காயத்ரி எப்போதும் விரும்பிக்கேட்பதை வாங்கிக் கொண்டு வீட்டை அடைந்தபோது மணி 5.30 தான் இருக்கும். காயத்ரி தேனீர் தயாரித்துக்கொண்டிருந்தாள். பிரதாப் ஓசை எழுப்பாமல் அவள் பின்னால் வந்து நின்று "காயத்ரி டார்லிங்" என அவளை அணைத்துக்கொண்டான். "சீ. என்ன இது. வந்ததும் வராததுமாக?" அவள் அவசரமாக அவன் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக்கொண்டாள்.

"சீக்கிரமாய் டிரஸ் சேஞ்ச் பண்ணிக் கொண்டு வா காயத்ரி."

"என்னத்துக்காம்" அவள் பொய்க் கோபத்துடனே கேட்டாள்.

"ரஜனியின் புதுப்படம் ரிலீஸாகியிருக்கு, உனக்கு பிடிக்குமேயென்றி டிக்கெட் ரிசேவ் பண்ணியிருக்கிறேன். அப்புறம் இரவைக்கு வரும்போது எங்கேயாவது ஹோட்டலில டின்னர் சாப்பிடலாம்..... அப்புறம்...." பிரதாப் பேச்சை இடை நிறுத்திவிட்டு அவளை விழுங்கி விடுவது போல் ஒரு பார்வை பார்த்தான்.

"அப்புறம் என்னவாம்...?" அவனது குறும்பு தெரிந்தும் தெரியாதவளாகக் கேட்டாள்.

"பிறகு வீட்டுக்கு வந்து..." பிரதாப் அவளைப் பார்த்துக் கண்களைச் சிமிட்டினான். காயத்ரிக்கு அவனது செய்கை எரிச்சலாயிருந்தது. சிலிர்த்துக் கொண்டாள்.

"அந்தப் படத்தை நான் முன்பே டெக்கில் பார்த்துவிட்டேன், உங்க புரோகிராம் எல்லாம் இன்னைக்கு கான்சல்..." பிரதாப்பிற்கு நாக்கை நீட்டி பழித்துக் காட்டினாள் காயத்ரி. "ஐயோ பிளீஸம்மா காயத்ரி, இப்படிக் கூறினால் எப்படி....?"

"நான் எவ்வளவு ஆசையாய் ஆபிஸிலிருந்து ஓடி வருகிறேன். என்னை ஏமாற்றியது சரியா...." பிரதாப் கெஞ்சினான்.

காயத்ரி ,அவனது கெஞ்சல் மனதிற்குள் மகிழ்ச்சியை ஏற்படுத்தவே, அவள் இன்னும் பிகு காட்டினாள்.

"முடியாதுன்னா முடியாது தான். இன்னிக்கு நான் வேற புரோகிராம் போட்டுட்டேன்...."

"எங்க போகப் போகிறாய்..?" பிரதாப் அவசரமாகக் கேட்டான்.

"என்ர சிநேகிதி கமலாவீட்ட வாறதா சொல்லியிருந்தன் பிரதாப்....

"பிளாஸ்கில டீ இருக்கு, ஹாலில இன்றைய பத்திரிகையெல்லாம் வைச்சிருக்கன், அப்படியும் தனியா இருக்க போரடிச்சுதென்றா, ரீ.வியில ஏழு மணிக்கு ஒலி ஒளி பாருங்க..." கூறியபடி காயத்ரி போக முற்பட்டாள்.

"நீ போகக் கூடாது." என்று அவளைப் போகவிடாது வழியை மறித்தபடி நின்றான் பிரதாப்.

காயத்ரிக்கு கோபத்தில் முகம் சிவந்து விட்டது. இவர் என்ன இவ்வளவு பிடிவாதம் பண்ணுகிறார் என நினைத்தாள்.

"சரி உங்களுடன் ஒரு பந்தயம் , இதில் நீங்கள் ஜெயித்துவிட்டீர்களென்றால், இனிமேல் உங்களுடைய சொல் ஒன்றையும் தட்டாம நீங்க சொல்றபடியெல்லாம் நடப்பன்..."

என்ன பந்தயம் என்பது போல் கேள்விக்குறியான பார்வையுடன் அவளைப் பார்த்தான் பிரதாப்.

"பத்து நாட்களுக்கு என்னைத் தொடவோ, என்னுடன் பேசவோ கூடாது. ஆனால் நீங்கள் என்னுடன் தான் இங்கு இருக்க வேண்டும்." கூறிவிட்டு கேலியாக அவனைப் பார்த்தாள் காயத்ரி.

"என்னால முடியாது. நீ இப்பவே உன் விருப்பப்படி சினேகிதி வீட்டுக்குப் போ காயத்ரி. பந்தயம் எதுவும் வேண்டாம், பத்துநாட்களுக்கு என்னால் தாங்க முடியாது." பிரதாப் அவசரமாக கூறிவிட்டு அவள் போவதற்கு வழிவிட்டு நின்றான்.

"உங்களுக்கு ரோஷமேயில்லையே, இப்படி பேசுகிறீர்களே..." கிண்டலாகக் கூறினாள் காயத்ரி.

"உன்னைத் தொடாமலாவது இருக்கலாம், ஒரு வார்த்தை கூட பேசாமல் எப்படி இருப்பது காயத்ரி? வேண்டாம் இந்த பந்தயம்." பிரதாப் சற்று சீரியஸாகவே சொன்னான்.

"இந்த ஆம்பிளைகளே இப்படித்தான், ஒரு நாளைக்காவது பெண்டாட்டியின் முந்தானையைப் பிடித்துக்கொள்ளாமல் இருக்கமாட்டார்கள்."

காயத்ரியின் இந்த வார்த்தைகள் சுர்ரென்றிருந்தது பிரதாபிற்கு. இவளென்ன இப்படி மட்டமாக எண்ணுகிறாள். பந்தயத்திற்கு சம்மதிப்போமா என்று யோசிக்கத் துவங்கினான். பிரதாப்பின் முகமாற்றத்தை அவதானித்த காயத்ரியும் "பந்தயத்திற்கு சம்மதம் போலிருக்குது வேண்டாம். உங்களால் என்னை விட்டு இருக்க முடியாது, என்னிடம் சரணடைந்து விடுங்கள்..."

என்று இன்னும் அவனுக்கும் உறைக்கும்படி கூறினாள் காயத்ரி.

"பந்தயத்திற்கு நான் சம்மதம், பத்து நாட்களுக்கு இனி நீயாக வந்து கதைத்தாலும் நான் பேசமாட்டேன், குட்பை..." கூறியபடி அவனுடைய அறைக்குப் போனான் பிரதாப். இப்போதைக்கு இவரிடமிருந்து தப்பித்தோம். நான் போகிற காரியம் என்னவென்று தெரியவந்த பிறகு, அவரே வந்து என்னுடன் பேசிவிடுவார் என மனதிற்குள் நினைத்துக் கொண்டாள். ஆனால் காயத்ரிக்கு பெரும் ஏமாற்றமாயிருந்தது. அவள் வீடு விரும்பும்போது பிரதாப் நல்ல உறக்கத்திலிருந்தான்.

எவ்வளவு ஆசையுடன் ஓடிவந்தேன், அதற்குள் தூங்கிவிட்டாரே என அவன்மேல் கோபப்பட்டுக் கொண்டாள்.

காலையில் எப்படியும் சமாதானமாக்கி விடலாம் என்று அவள் மனதைத் தேற்றிக்கொண்டாள். ஆனால் காலையிலும் பிரதாப் தன்னுடன் பேசாது அவனே தன் வேலைகளை கவனித்துக்கொண்டது காயத்ரிக்கு முதன்முதல் பயத்தையும் கவலையையும் கொடுத்தது.

இவரென்ன நிஜமாகவே பத்து நாட்களுக்கு என்னுடன் பேசாமலிருக்கப் போகிறாரோ.... நான் விளையாட்டாகப் பேசியது இப்படி விபரீதமாய்ப் போய் விட்டதே என்று வருத்தப்பட்டாள். காயத்ரிக்கு என்ன செய்வதென்று புரிய வில்லை. தானாகச் சென்று கதைப்போமா என்று நினைத்தாலும், அதற்கும் அவள் தன்மானம் இடம் கொடுக்கவில்லை. மறுகணம் முடிவை மாற்றிக்கொண்டாள். பத்து நாட்களுக்குத்தானே, இருந்து தான் பார்ப்பமே என அவளும் பந்தயத்திற்கு தயாரானாள்.

என்றாலும் மனசு கேட்காமல், பிரதாப் வேலைக்குப் போகும் போது, வழக்கம் போல் அவன் தரும் முத்தத்தை எதிர்பார்த்து ஆவலுடன் அவன் முகத்தைப் பார்த்தாள்.

ஆனால் பிரதாபோ அவளைப் பார்த்து மௌனப்புன்னகை புரிந்துவிட்டுச் சென்றுவிட்டான். காயத்ரிக்கு அவன் மீது கோபம் கோபமாய் வந்தது. "இவருக்கு இவ்வளவு பிடிவாதமா? எவ்வளவு ஆசையுடன் பார்த்தேன், தெரிந்தும் தெரியாதவர் மாதிரி போகிறாரே, வரட்டும் இனி நானும் பேசவே கூடாது" மனதிற்குள் பொருமிக் கொண்டாள்.

• • •

காயத்ரியைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்த பிரதாப்பின் நினைவுகளை பியோன் வந்து, மனேஜர் அவனை அழைப்பதாகக் கூறி கலைத்தான். அப்போது தான் பிரதாப்பிற்கு மனேஜர் ஃபைல்களைப் பற்றிக் கூறியது ஞாபகத்திற்கு வரவே, அவசர அவசரமாக அவற்றைப் பார்க்கத் துவங்கினான். வேலையிலேயே மூழ்கியிருந்த அவனை, டெலிபோனில் யாரோ அழைப்பதாகக் கூறினார்கள். டெலிபோனில் பேசிவிட்டு வந்ததிலிருந்து பிரதாப்பின் முகத்தில் காணப்பட்ட பிரகாசத்தைப் பார்த்த பார்த்திபன், "என்ன மச்சான் பிரதாப், காலையிலிருந்து உம்ம்...ன்னு கவலையாயிருந்தாய், டெலிபோன் பேசியதிலிருந்து ஒரே குஷியாயிருக்கிறாய், அப்படியென்ன டெலிபோனில் சொன்னார்கள்...?"கேட்டான்.

"எல்லாம் நல்ல சமாச்சாரம் தான், சமயம் வரும்போது சொல்கிறேன்." என சமாளித்து பேச்சை துண்டித்துக் கொண்டான் பிரதாப்.

• • •

மாலையில் பிரதாப் வழமைபோல் நேரத்துடன் கையில் பார்சலுடன் வந்து நின்றதைப் பார்த்த காயத்ரிக்கு அப்போ தான் நிம்மதியாயிருந்தது.

'அது தானே பார்த்தேன், இவரால் எங்கே என்னைப் பிரிந்து இருக்க முடியும்' என அவள் தன்னைத்தானே மெச்சிக் கொண்டாள்.

ஆனால் எப்போதும் போல், பார்சலிலுள்ள உணவுப் பண்டத்தை அவள் வாயில் திணித்து கன்னத்தில் கிள்ளும் பிரதாப், இன்று பார்சலை மேசையில் வைத்துவிட்டு அறைக்குச் சென்றது காயத்ரிக்கு ஏமாற்றமாயிருந்தது.

'சீ...சீ.. அப்படியிருக்காது, டிரஸ் மாற்றிக்கொண்டு வருவார்..' அவள் அலைபாயும் தன் மனதை சமாதானமாக்க முயன்றாள்.

பிரதாப்போ அவளை சட்டை செய்யாதவன் போல் அடுப்படிப்பக்கம் போனான். பிரதாப் தேனீர் தயாரிக்க ஆயத்தம் செய்து கொண்டிருந்தான். காயத்ரிக்கு அவனது இந்தச் செய்கை மேலும் கோபத்தை உண்டாக்கியது.

"நான் தயாரித்த தேனீரையும் நீங்கள் குடிக்கக்கூடாதென்று நான் பந்தயத்தில் கூறவில்லையே" என கேலியாகக் கூறியபடி ஏற்கனவே பிளாஸ்கில் உற்றி வைத்திருந்த தேனீரை அவனுக்கு ஊற்றிக் கொடுத்தாள்.

"எப்போதும் போல, நீங்கள் ஊட்டி விடுவீர்களென்றால் நான் சாப்பிடுவேன், இல்லாவிட்டால் அந்த உணவுப் பார்சலை பிரிக்கவே மாட்டேன்." தன்னைக் கவனியாதவன் போல் பத்திரிகை படித்துக் கொண்டிருந்த பிரதாப்பின் மேல் சீறி விழுந்தாள். ஆனால் அவன் அதற்கும் மசிந்ததாகத் தெரியவில்லை.

காயத்ரிக்கு, பிரதாப் தனக்காக ஆசையோடு வாங்கிவந்த உணவுப் பண்டத்தை வீச மனம் வராமல், தானாகவே அந்தப் பார்சலைப்பிரித்து பார்த்தாள். வழக்கத்திற்கு மாறாக நிறைய சுவீட்ஸ் இருந்தது. அவளுக்கு ஒன்றுமே புரியவில்லை.

"இது என்னத்துக்காம்?" என்று அவளாகவே பேச்சுக்கொடுத்து அவன் முன் சுவீட்ஸை நீட்டினாள்.

பிரதாப் அவளை ஒரு முறை பார்த்துவிட்டு, தன் கைகள் அவள் மீது படாது சுவீட்சை எடுத்து அவள் வாய்க்குள் போட்டுவிட்டான்.

காயத்ரிக்கு சற்று நிம்மதியாயிருந்தது. அவளும் பதிலுக்கு சுவீட்சை எடுத்து அவனது வாய்க்குள் போட்டாள். சற்று நெருங்கி அவள் அங்கங்கள் அவன் மீது உரசும்படி- பிரதாப்போ அவளைப் பார்த்து கேலிச் சிரிப்பொன்று சிரித்துவிட்டு விலகிச் சென்றான். அப்படியும் காயத்ரி அவனை விடவில்லை. அவன் படுக்கையறையிலிருக்கும் போது அவள் தன் இரவு ஆடையை மாற்றிக்கொண்டாள். ஆனால் பிரதாப்போ அவள் வந்ததும் மறுபக்கம் திரும்பி படுத்துக்கொண்டான். இந்த முயற்சியும் தோல்வியடையவே காயத்ரிக்கு மனம் சலிப்படைந்தது. அவள் மிகவும் வேதனைக்கு உள்ளானாள். ஏன் அப்படிக் கூறினோம் என்று அவள் தன்னையே நொந்துகொள்ள ஆரம்பித்தாள்.

இப்படியே இரண்டு நாட்கள் ஓடி விட்டன.

ஒவ்வொரு நாளும் காயத்ரி பலமுறை தானாகவே பேச்சுக்கொடுத்தும், அவனருகே நெருங்கி நெருங்கி செல்வதுமாய் பிரதாபின் மனதை மாற்ற எவ்வளவோ முயன்று பார்த்தாள். ஆனால் அவனோ எதற்கும் அசைவதாய்த் தெரியவில்லை. மௌன விரதமாகவே இரண்டு நாட்களும் கழிந்தன.

மூன்றாம் நாள் காயத்ரி பொறுமையின் எல்லையைக் கடந்துவிட்டாள். இன்று இரண்டிலொரு முடிவு எடுத்துவிட வேண்டுமென வாசலிலேயே பிரதாப்பை எதிர்பார்த்துக்காத்திருந்தாள். ஆனால் அன்றும் அவன் நேரே அறைக்குத் தான் சென்றான். காயத்ரி ஓடிச் சென்று வழியை மறித்து நின்றுகொண்டு "நான் உங்களோடு பேச வேண்டும்." என்றாள். "என்ன..." என்பது போல பிரதாப் அவளைப் பார்த்தான்.

"இன்னும் எத்தனை நாட்களுக்கு இப்படியே பேசாமலிருக்கப் போகிறீர்கள். என்மேல் அப்படி என்ன கோபம்? இன்று நீங்கள் பேசாவிட்டால் நான் அம்மா வீட்டுக்கு போய்விடுவேன்..."

காயத்ரி ஆவேசமாகக் கூறிக்கொண்டிருந்தாள். பிரதாப் அவளது கையை விலக்கிக்கொண்டு அவளது பேச்சைக் கேளாதவன் போல் மேலே செல்ல முயன்றான்.

"அன்று நான் உங்களுடைய ஆசைப்படி நடக்கவில்லையென்று தானே என் மீது கோபம்? அப்படி நான் உங்களோடு பந்தயம் பிடித்திருக்கக்கூடாது. பேசியிருக்கக்கூடாது, தப்பு தப்புத்தான். அதற்காக என்னை மன்னித்துவிடுங்கள் பிரதாப்." இவ்வளவையும் கூறிவிட்டு காயத்ரி அவனை நோக்கினாள். அவனுடைய முகத்தில் பதிலுக்கு இலேசான புன்னகை தவழ்ந்தது. காயத்ரிக்கு இன்னும் அவனது மௌனம் கோபத்தை அதிகரித்தது.

"நான் அன்று யாரிடம் சென்றேன் என்று தெரிந்தால் இப்படி நீங்கள் பேசாமலிருக்கமாட்டீர்கள்... எவ்வளவு ஆசையாய் அதைச் சொல்ல ஓடி வந்தேன், அனால் நீங்கள்தான் உண்மையறியாமல் கோபத்தில் நான் வரமுன்பே தூங்கி விட்டீர்கள்,....அதற்குப் பிறகும் நான் எவ்வளவு பேசமுயன்றும் நீங்கள் வேண்டுமென்றே விலகிப் போனீர்கள், இந்த இரண்டு நாட்களும் நான் பட்ட அவதி, வேதனை என் ஒருவளுக்குத்தான் தெரியும்...." அவளையும் அறியாமல் அவள் கண்கள் ஈரமாகின.

"உங்களுக்கு நான் இங்கிருப்பது பிடிக்கவில்லை என்றால் நான் அம்மா வீட்டுக்குப் போய்விடுகிறேன்." அழுகையால் விம்மியபடி காயத்ரி அறைக்குள் ஓடினாள். அப்போது கூட தான்சொல்வதைத் தடுப்பான் என்று எதிர்பார்த்த காயத்ரிக்கு அவனுடைய மௌனம் பெருத்த வேதனையையும் ஆத்திரத்தையும் உண்டாக்கியது. அவசர அவசரமாக தனது துணிமணிகளை ஒரு சூட்கேஸில் அடுக்கிக்கொண்டு ஹாலிற்கு வந்தாள்.

பிரதாப் கையில் இரண்டு டொனிக் போத்தல்களுடன் நின்றுகொண்டிருந்தான். அவள் வந்ததும், "இந்தா, இவற்றையும் கொண்டு அம்மா வீட்டுக்குப் போ. டாக்டர் உமா உனக்கு இவற்றை வாங்கிக் கொடுக்கச் சொன்னாள்."

காயத்ரிக்கு மறுகணம் பகீரென்றது. டாக்டர் உமா...டொனிக்... ஒரு வினாடி யோசித்தாள். அப்படியானால் இவருக்கு நான் கர்ப்பமாயிருக்கிறேன் என்ற செய்தி தெரியும்..... ஒன்றும் புரியாது அவனைப் பார்த்து விழித்தாள். பிரதாப்பிற்கு மேலும் அவளைக் கஷ்டப்படுத்த மனம் வரவில்லை. உண்மைகளை உடைக்கத் துவங்கினான். அவளைப் பார்த்து புன்னகைத்தவாறே "எனக்கு எல்லாம் தெரியும் காயத்ரி." என்றான்.

அதைக் கேட்டவுடன் கையிலிருந்த சூட்கேஸையும் போட்டு விட்டு, ஓடிச் சென்று அவனது நெஞ்சில் முகத்தைப் புதைத்துக்கொண்டு 'ஓ'வென அழத் துவங்கினாள்.

பிரதாப் ஆறுதலாக அவளை வருடியபடியே, "அசடு அசடு இப்ப என்னத்திற்கு அழவேணும், எல்லாம் நல்ல சமாச்சாரம் தானே?" என்றான்.

"இது தெரிந்துமா இந்த இரண்டு நாட்களும் என்னுடன் பேசாமலிருந்தீர்கள்?" அவனது நெஞ்சிலிருந்து முகத்தை எடுக்காமலே கேட்டாள்.

அவள் கன்னத்தில் வழிந்த கண்ணீரை துடைத்தவாறே. "அடுத்த நாளே எனக்கு எல்லாம் தெரிந்துவிட்டது." என்று கூறியபோது காயத்ரி புரியாமல் அவளைப் பார்த்தாள்.

"டாக்டர் உமா மறுநாளே எனக்கு டெலிபோன் செய்து, உனது உடம்பு வீக்காக இருப்பதாகவும் இந்த டொனிக்குகளை வாங்கிக்கொடுக்கும்படியும் போனில் சொன்னாள்..."

காயத்ரிக்கு அப்போதுதான் டாக்டர் உமா அவனோடு காலேஜில் ஒன்றாய் படித்தவள் என்று பிரதாப் முன்பொரு சமயம் கூறியது ஞாபகத்திற்கு வந்தது.

"இரண்டு நாட்களாய் இந்த டொனிக்ஸ் எங்கும் கிடைக்கவில்லை. அதனால் நானும் உன்னுடன் பேசாமல் இந்த விளையாட்டை விளையாடினேன். இன்று தான் இவை கிடைத்தது. உன்னிடம் எல்லாம் கூறிவிடலாமென்று நினைத்தேன், அதற்குள் நீ பெரிய அமளிதுமளி பண்ணி விட்டாய்..."

பிரதாப் அவளுடன் செல்லமாகக் கோபித்தான்.

"அப்பப்பா இந்த இரண்டு நாட்களும் நான் மட்டும் உன்னோடு பேசாது எவ்வளவு கஷ்டப்பட்டேன் தெரியுமா?" பிரதாப் ஏக்கத்துடன் கூறினான்.

"அது தானே பார்த்தேன்..", காயத்ரி மீண்டும் சப்புக்கட்டினாள்.

"அப்படியென்றால் நான் திரும்பவும் பந்தயத்திற்கு ரெடி." விளையாட்டாகக் கூறினான்.

"இனிமேல் என்னை மனவருத்தப்படுத்தினீங்களென்றால் குட்டி பிரதாப்பிடம் முறையிடுவேன்."

"இல்லை, எனக்கு குட்டி காயத்ரி தான் பிறக்கப் போகிறான்." பிரதாப் அவசரமாக மறுத்துப்பேசினான்.

"இல்லை பிரதாப் தான்." காயத்ரியும் விடாமல்...

"நமக்குள் ஏன் சண்டை, குட்டி காயத்ரியும் பிரதாப்பும் பிறப்பார்கள்." கூறிவிட்டு பிரதாப் அவளைப் பார்த்தான்.

அவனது பேச்சில் வெட்கப்பட்ட காயத்ரி கைகளால் முகத்தை மூடிக் கொண்டாள்.

(முற்றும்)

16ம் பக்கத் தொடர்ச்சி...

## என்று தணியும் இந்த...

என்பதுதான் அது. எல்லாவற்றிற்கும் கால்கட்டுப் போட்டால் சரியாகுமென்று "சிவலிங்கத்தின் மகன் வேலுவை கல்யாணம் பண்ணிக் கொள்றியா?" என்று கேட்டதற்கே இவ்வளவு ஆர்ப்பாட்டமும்.

'அப்ப சுந்தரியோட சுத்துற பையன் படிச்ச, வேலையொண்டில இருக்கிறவனா இருக்க வேண்டும். இதெல்லாம் எங்கட தகுதிக்கு ஒத்துவருமோ? இருக்கிறது ஒரு சிறு அளவுப் பூமியும், இந்தக் குடிசையும்தான். இதைவிட்டால் வேறு ஆதனமும் இல்லை, வேறு போக்கிடமும் இல்லை 'எதற்கும் சிவலிங்கத்துடன் பேசிப் பார்ப்போம்' என எண்ணியவர் எழுந்து சிவலிங்கத்தின் வீடு நோக்கி நடக்க ஆரம்பித்தார்.

வியர்வையை ஆறாக ஓடவைத்துக் கொண்டிருந்தது வெயில். மாரிமுத்து சிவலிங்கத்தின் வீட்டை அண்மிக்க அங்கிருந்து பெரிதாக அழுகையொலி கேட்டுக்கொண்டிருந்தது. இன்னும் அருகே போனபோது எல்லோரும் முகத்திலறைந்து அழுதுகொண்டிருந்தார்கள்.

"சிவலிங்கம், என்ன என்ன நடந்தது,"

"அதை என்னெண்டு சொல்லுவன் நான். நேற்று கையில காசில்ல எண்டு மகன் வேலு, காட்டில தேன் எடுத்து வாறனெண்டு நேத்துக் காலையில போனவன இன்னும் காணல்லயே, இரவுவேற காட்டுப்பக்கம் வெடிச்சத்தம் கேட்டுது என்று மடியில நெருப்பைக் கட்டிக்கொண்டு இருக்கேக்குள்ள, காலையில ரெண்டு பேர் வந்து சொன்னானுகள், வேலுவோட சவம் காட்டுக்குள் கிடக்குதாமென்று" சொல்லிவிட்டுப் பெரிதாக அழத்தொடங்கினார் சிவலிங்கம். இந்தப் பெரிய குடும்பத்திற்கு ஆதரவாயிருந்தது வேலு ஒருவனின் உழைப்பே, இப்போ அதுவும், ??.....

'என் சோகத்தை வடிப்போமென்று இங்கு வந்தால், இங்கு வேறு சோகம். வீட்டுக்கு வீடு ஏதாவதொரு வகையில் பாரிய இழப்புக்கள், யோசித்த மாரிமுத்துக்கு நெஞ்சு வலிப்பது போலிருந்தது. இல்லை, நெஞ்சு வலியேதான். வீடு நோக்கி நடக்கத் தொடங்கினார்.

நம்மாழ்வு விடிகிறதோ இல்லையோ, பொழுது விடிந்துவிடும். கடமையே கண்ணாக இருப்பான் உதய ஆதவன். இருண்ட தேசத்தை ஒளிக்குக் வருவதில் ஏகப்பட்ட குஷி அவனுக்கு. இதே எண்ணம் நம் தலைவர்களுக்கும் இருக்குமென்றால்.....

புலர்ந்த காலைப் பொழுதில் செல்லம்மா தேநீர் எடுத்துக்கொண்டு மாரிமுத்துவிடம் ஓடி வந்தாள்.

"ஐயோ, கேட்டீங்களா? சுந்தரிய ஒரு இடமும் காணல்ல, அந்தப் பெடியனோட ஓடிப் போய்ட்டாளே"

பதறி வந்தவள் நின்று பார்த்த போதுதான் தெரிந்தது மாரிமுத்துவின் மூச்சு மெதுவாக அடங்கிக் கொண்டிருப்பதை.

"ஐயோ, என்ர ராசா" -மாரிமுத்துவின் குடிசையில் கேட்ட வீறிட்ட அழுகையொலியில் ஒரு சமுதாயத்தின் அவலம் துல்லியமாகத் தெரிந்தது.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

# கடந்து போயின 157 வருடங்கள்!

# அன்றுபோலவே இன்றும் ஒரு கொலை!!

## ஆச்சரியமான கொலை வழக்கு



ஏபிரஹாம்

இரு அழகிகள் கொல்லப்பட்டனர். இருவருக்கும் வயது இருபது.

இரு கொலைகளும் நடந்த இடம் ஒன்றுதான்.

இரு கொலைகளும் செய்யப்பட்ட முறையும் ஒன்றுதான்.

ஆனால் இரு கொலைகளும் நடந்த காலம்தான் வேறுபடுகிறது.

பேர்மிங்ஹாம் நகரிலேதான் இந்த ஆச்சரியமான கொலைகள் துப்பறியும் நிபுணர்களையே கலக்கியிருக்கிறது.

பொலிஸ்துறையும் முடியைப் பிய்த்துக் கொள்கிறது.

1817ம் ஆண்டு மே மாதம் 27ம் திகதி மேரி ஆஷ்ஃபோட் என்னும் அழகிய பெண் கொல்லப்பட்டாள்.

பேர்மிங்ஹாங் நகருக்கு அருகில் உள்ள காட்டுப் பகுதியில் ஒலிவ் மரத்தடியில்அவளது பிணம் கிடந்தது.

கொலையாளி சிக்கினான். 25 வயதான ஏபிரஹாம் தோண்டன் என்னும் கல் உடைக்கும் தொழிலாளிக்கு அந்த அழகி மீது தீராத மோகம்.

ஒரு நாள் அந்த அழகியை பலவந்தம் செய்து, தன் காமப்பசியைத் தீர்த்துக் கொண்ட அந்த மிருகம் அவளது கழுத்தை நெரித்துக் கொன்றுவிட்டது.



1817ம் ஆண்டு கொல்லப் பட்ட மேரி ஆஸ்ஃபோட்

கொலையாளிக்கு தண்டனை கொடுக்க நீதிமன்றம் சாட்சிகளை தேடியது.

சாட்சிகள் இல்லை. அதனால் ஏபிரஹாம் விடுதலை செய்யப்பட்டான்.

இது பழைய சம்பவம். நல்லவற்றை நினைவில் வைத்திருக்கலாம். அது கெட்ட சம்பவம். மறந்துவிட வேண்டியது தான்.

அதுவும் 157 வருடங்கள் சென்ற பின்னர் யார்தான் அதை நினைத்துக் கொண்டிருப்பார்கள்.

ஆனால் அன்று நடந்ததை மீண்டும் இன்று கிளற வேண்டி ஏற்பட்டுவிட்டது.

157 வருடங்களுக்கு முன் நடந்த அந்தக் கொலை பற்றிய குறிப்புக்கள் எங்கே இருக்கும் என்று பொலிஸ் தேடிக்கொண்டிருக்கிறது.

இதற்கெல்லாம் என்ன காரணம்?

### மீண்டும் ஒரு கொலை

1974ம் ஆண்டு மே மாதம் 27ம் திகதி பார்பராஃபொண்ட் என்னும் அழகான 20 வயதுப் பெண் பிணமாய் கிடந்தாள்.

எங்கே கிடந்தது பிணம்?

157 வருடங்களுக்கு முன்னர், மேரியின் பிணம் எங்கே கிடந்ததோ அந்த ஒலிவ் மரத்தடியில் பார்பராவின் பிணமும் கிடந்தது.

விசாரணையை ஆரம்பித்த பொலிஸ் அதிகாரி லான்ஹான் 157 வருடங்களுக்கு முன்னர் இவ்வாறு தான் ஒருகொலை நடந்தது என்ற தகவலைப் பெற்றதும் முதலில் நம்ப மறுத்தார்.

பின்னர் ஆராய்ந்து பார்த்தபோது அதிர்ச்சியடைந்தார்.

கொலை செய்யப்பட்டமுறை, கொலையானவர்களின் வயது, இருவரும் பலாத்காரம் செய்யப்பட்டமை, பிணம் வீசப்பட்டிருந்த முறை, எல்லாவற்றிற்கும் மேலாக கொலை செய்யப்பட்ட திகதி அனைத்தும் ஒரே விதமாகவே இருக்கின்றன.

கொலையாளி மீண்டும் மறுபிறப்பெடுத்து வந்துள்ளதாக இங்கிலாந்திலுள்ள நிபுணர்கள் சிலர் கூறுகின்றனர்.

பொலிஸ் திணறுகிறது. மறுபிறப்புக் கதையை நம்புவதா விடுவதா என்று தெரியவில்லை.

"இவ்வாறான ஒற்றுமை கொண்ட கொலை வழக்கு வேறு எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை." என்கிறார் பொலிஸ் அதிகாரி லான்ஹொம்.

இதுவரை மர்மம் துலங்கவில்லை. என்னதான் நடக்குது உலகத்திலே!

## உண்மை நட்பு எங்கே இருக்கிறது?

# அது பெண்ணிடம் இருக்கிறது என்கிறது ஆராய்ச்சி!

நட்புக்கு பெண்களே தகுந்தவர்கள் என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். மற்றவர்களுடைய சுகதுக்கங்களை அனுதாபத்துடன் அணுகக் கூடிய ஆற்றல்



"ஒருவருடன் நட்புக் கொண்டு உறவாடும் பக்குவத்தைப் பெண்களே பெற்றிருக்கின்றனர்.

ஆனால் தங்களுடைய முழுமனதையும் திறந்து காட்டும் துணிவு ஆண்களுக்குக் குறைவாகவே காணப்படுகிறது."

பெண்களுக்கே இருக்கிறது என்று அவர்கள் தெரிவிக்கின்றனர்.

"ஒருவருடன் நட்புக் கொண்டு உறவாடும் பக்குவத்தைப் பெண்களே பெற்றிருக்கின்றனர்.

ஆனால் தங்களுடைய முழுமனதையும் திறந்து காட்டும் துணிவு ஆண்களுக்குக் குறைவாகவே காணப்படுகிறது." இவ்வாறு உளவியல் துறை வல்லுநரும் பிரபல சமூகவியல் நிபுணருமான டாக்டர் எலிஸபத் டௌவன் தெரிவித்துள்ளார்.

ஆண், பெண் இருபாலாரிடத்திலும் ஏற்படும் நல்லுறவுகள் பற்றி டாக்டர் டௌவனும் மிச்சிகன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆய்வாளர்களும் ஆய்வுகளை மேற்கொண்டனர். 5000 பேரை இவர்கள் தங்கள் ஆராய்ச்சிகளுக்குப் பயன்படுத்தியுள்ளனர். இந்த ஆய்வுகளின்படி, பெண்களிடத்தில் அவர்களுடைய இளமைப் பிராயத்திலேயே மற்றவர்களுடன் நட்புறவு கொண்டு நெருங்கிப்பழகும் தன்மை ஏற்பட்டுவிடுகிறது என்று தெரிகிறது.

"ஒரு பெண் தனது 16 வயதிலேயே தனது நண்பர்கள் உண்மையானவர்கள் என்று கருதத் தலைப்படுகிறாள். தன்னுடன் சேர்ந்து ஒத்துப் போகக் கூடிய ஒருவரை அவள் தேடுகிறாள். ஓரளவு கவர்ச்சியுள்ள ஒருவரை எதிர்பார்க்கிறாள்; அவரிடத்தில் அக்கறை காட்டுகிறாள்; ஆர்வமுடையவராக இருக்க வேண்டும், சுறுசுறுப்பும் வலிமையும் உள்ளவராக இருக்க வேண்டும் என்றெல்லாம் எதிர்பார்க்கிறாள்.

"ஆண்களைப் பொறுத்த மட்டில் இதே காலகட்டத்தில் பொறுப்புணர்ச்சியற்றவர்களாகத் தென்படுகின்றனர். சுலபமாக அவர் ஒரு சினேகிதனைச் சம்பாதிக்க மாட்டார். தன்னுள்ளேயே தன் எண்ணங்களை பெரும்பாலும் அடக்கிக்கொள்வார். சினேகிதர்களை வைத்துக்கொண்ட போதிலும் அந்த நட்பு ஆழமுடையதாக இருக்கப் போவதில்லை. அவருடைய அலுவல்களான விளையாட்டு போன்ற நடவடிக்கைகளுடன் தொடர்புடையதாகவே அவருடைய நட்பு இருக்கும்.

"இத்தகைய நட்பு முறை தன் அந்தரங்கங்களை வெளிப்படுத்தும் நெருக்கமான உறவாக இருப்பதில்லை."

இவ்வாறு டாக்டர் டௌவன் தெரிவிக்கிறார்.

ஒருவருடைய வளர்ப்பு முறையின் அடிப்படையிலேயே அவருக்குரிய நட்புக் கொள்ளும் ஆற்றலும் தங்கியிருக்கின்றது என்று சில நிபுணர்கள் கூறுகின்றனர். "பெண்கள் சாத்வீகமாகவும் இணக்க இயல்புடையவளாகவுமே வளர்க்கப்படுகின்றனர். அத்துடன் இயல்பூக்கமும் அவர்களிடம் அதிகம்." என்று மற்றுமொரு உளவள ஆற்றல் நிபுணரான டாக்டர் ஜோண் எங்கெல் கூறுகிறார். குழந்தைப் பருவத்திலேயே இவற்றை பெண்கள் கற்றுக் கொள்ளுகின்றனர்.

"ஆண்களைப் பொறுத்தவரை அவர்கள் போட்டி மனப்பான்மையுடன், கடினமான போக்குடன் வளர்கின்றனர். அவர்கள் உணர்ச்சிவசப்படவோ தங்களுடைய எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ளவோ பெரும்பாலும் விரும்புவதில்லை." என்கிறார் டாக்டர் எங்கெல்.

## நமக்குப் பின்னர் மிஞ்சுவது எது?




பொய் அன்பு காட்டும் பெண்கள் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

பி.சாந்தகுமார்-குருநாகல்.

பொய் அன்பு காட்டுவோர் இருபாலிலும் உண்டு. அப்படியான இரு பாலாருக்கும் பொதுவாகப் பொருந்தக் கூடிய அபிப்பிராயம் கலப்படமற்ற போலிகள்.

•

சில மனிதர் சில வேளைகளில் மிருகங்களை விட மோசமாக நடந்து கொள்வது ஏன்?

இர்பானா நியால்-மக்கொன.

மனிதராக வாழ்வது எப்படி என்று தெரிந்து கொள்ளாமை. மிருகங்களோடு கூட ஒப்பிட முடியாத மனித உருக்கொண்டவர்களும் உண்டு, இர்பானா.

•

சிவாஜிகணேசன், எம்.ஜி.ஆர் இருவரும் சேர்ந்து நடித்துள்ளார்களா?

எஸ்.பி.சந்திரகுமார்-ஹொப்டன்.

நடித்துள்ளார்கள். படம் 'கூண்டுக்கிளி.'

•

வீண் சந்தேகப்படுவோரைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

அப்துல் பரீஸா-மாத்தளை.

கண்ணால் காண்பதும் பொய். காதால் கேட்பதும் பொய். தீர விசாரித்தறிவதே மேல். அதை அவர்களுக்கு நினைவூட்டினால் நல்லது என்று நினைக்கிறேன்.

•

யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்ட யாழ்தேவி தாக்குதல் பற்றி உங்கள் கருத்து யாது?

இராசையா கண்ணதாசன்-மட்டக்களப்பு.

வேகம். அதிவேகம். போனதும் அப்படி. திரும்பிவந்ததும் அப்படி.

•

நமக்குப் பிறகு மிஞ்சப் போவது என்ன?

பொ. திருச்செல்வம்-நாவலப்பிட்டி.

நீர் வீழ்ந்த பின்னும் நிலைக்கக் கூடிய, நினைக்கக்கூடிய நல்ல செயல்கள் ஏதாவது நீர் வாழும்போது செய்ய முடிந்தால் அது.

•

இளையராஜாவும், வைரமுத்துவும் இணைந்தால் வாலியின் நிலமை என்னாகும்?

எம்.அந்தனி பெர்ணான்டோ-மன்ராசி எஸ்டேட்.

அவரது கவித்துவம் உயரமாகும். இப்போது அவசரத்தில் கீழே இறங்கியும் எழுதித் தொலைக்கிறார்.

•

உலகில் விலை மதிக்க முடியாதது எது?

எம்.எப்.பார்மிலா-உடத்தலவின்ன.

பிரிக்கமுடியாத பெரும் நட்பு. அதற்கு அடிப்படையான ஆழமான அன்பு.

•

பெண்களை ஆண்கள் ஏமாற்றுவதாக பெண்கள் கூறுகின்றார்கள். பெண்கள் ஆண்களை ஏமாற்றுவதில்லையா?

வை.ராஜா-கொழும்பு-02.

இருதரப்பிலுமே ஏமாந்தவர்களும், ஏமாற்றுகிறவர்களும் இருப்பதால், இரு தரப்புமே பரஸ்பரம் குற்றம் சாட்டிக்கொள்வதும் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

•

பூநகரி மோதலில் யாருக்கு தோல்வி?

வீ.பிரகாஷ்-மட்டக்களப்பு

மனித உயிர்கள் மீது மதிப்புக் கொண்டவர்களுக்கு.

•

உலகில் நீங்கள் அதிகம் மதிப்பது யாரை?

செல்வி எ.சந்திரா-புசல்லாவ.

என் முதுகுக்கு பின்னால் முகம் சுளிக்கத் தெரியாதவர்களை.

•

வந்துகொண்டிருக்கும் பண்டிகைகளுக்கு பட்டாசு தேவைப்படுமா சிந்தியா?

என்.விஜயகுமாரன்-ஹய்பொரஸ்ட்.

வடக்கு-கிழக்கில் தேவைப்படாது.

•

இலங்கை அரசு யுத்தத்தினால் கண்ட பலன்தான் என்ன?

இந்து -இரத்தினபுரி.

செலவு. செலவு. செலவு.

•

திரு.அநுரா பண்டாரநாயக்காவின் எதிர்காலம் பிரகாசமாக இருக்குமா?

ரிபான்.எம்.பௌஸர்-ரம்புக்-எல.

நம்பித்தானே உள்ளே போயிருக்கிறார். அவரை பிரகாசப்படுத்தினால் மேலும் சிலரை உள்ளே இழுக்க ஆளும் கட்சிக்கு வாய்ப்பாக இருக்கும்.


•

இன்றைய படங்களில் கதையும் காட்சியும் ஒன்றிப் போகாமல் முரண்படுவது ஏன்?

சஹாசியா உசல்வர்-கதுறுவெல.

கதையைக் காட்டினால் போதும் ரசிகர்கள் காட்சியோடு ஒன்றிப் போவார்கள் என்ற நம்பிக்கையாக்கும்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல—26



### இடமிருந்து வலம்

1. தந்திரத்தில் சிறந்தவர்களை இவரது பெயரால் அழைப்பதுண்டு.
6. இதை வைத்து ஒரு சினிமாப் பாடலே இருக்கிறது.
8. இது இருந்தால் தான் சித்திரம் வரையலாம் என்று ஒரு பழமொழி இருக்கிறது.
9. நமது தேசிய உணவிற்கு இது தேவை.
10. பறக்கும்.
11. பொறுமைசாலியான பறவை.

### மேலிருந்து கீழ்

1. இது தவறினால் குற்றவாளிகூடத் தப்பிக் கொள்ளலாம்.
2. இது வெளுத்தால் தான் விடிவு என்பார்கள்.
3. உழைப்பே இவனது மூலதனம்.
4. மனிதர்கள் இல்லாத பகுதி. (குழம்பியுள்ளது)
5. இவரும் விதைப்பவர் தான், எழுத்தை.
7. இதைத் தீட்டினால்தான் வைரம் கூட ஜொலிக்கும். (தலைகீழாக உள்ளது)
8. காலிலே அணிந்தாலும் காதிலே ஓசை கேட்கும். (தலைகீழாக உள்ளது)

இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 04.12.93க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்ப வேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல-26
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்,
கிருலப்பனை
கொழும்பு -05.

சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசளிக்கப்படும்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல-24க்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 வி | று | வி | று | ப் | 2 பு | ■ |
| ரு | 3 பு | ய | ல் | ■ | ர | 4 தி |
| ந் | ண் | ■ | 5 ம் | 6 த | த | ந் |
| 7 து | ணி | ■ | 8 அ | ரு | ம் | த |
| ■ | ய | ■ | தி | மி | ■ | வ |
| 9 சா | ம் | பா | ர் | ■ | 10 வீ | ■ |
| டி | ■ | 11 ஏ | வு | க | ணை | ■ |

### குறுக்கெழுத்துப் போட்டி இல.24இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்

1. கௌரி சங்கர் மட்டக்களப்பு.
2. எஸ்.எம். மனாசீர் திருகோணமலை.
3. அ. நர்மதா குருநாகல்.
4. ஏ.எல். ஆயிஷா அக்கரைப்பற்று.
5. சி. புண்ணியமூர்த்தி ஹட்டன்.
6. ஜோசவ் அருள்தாஸ் வாழைச்சேனை
7. ஆர். பரமானந்தன் சிலாபம்.
8. ஏ.எம். மஸாஹிர் கொழும்பு-9.
9. எஸ். ஜெகசோதி புத்தளம்.
10. திருமதி. ச.ஜெகநாதன் ஆரையம்பதி-02.

இந்த அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா50/= வழங்கப்படும்.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

# அரக்கன் என்பவன் யார்?



அவன்....

கோகர்ணேஸ்வரத்தில் சிவ பிரானுக்கு 108 சம்பக மலர்களால் தினமும் அர்ச்சனை செய்தால் மன்னனை வசமாக்கிக் கொள்ள லாம், என்ற சூட்சுமம் அறிந்த அந்தணன், அப்படியே செய்து மன்னன் அன்புக்குப் பாத்திர மாகி பெரிய பதவியைப் பெற்றுவிட்டான். அப்படியும் ஆசை விடவில்லை. மன்னன் தானம் கொடுக்கும் போது, அதை வாங்கிக் கொள்ள வேண்டுமென்று பலரைக் கூட்டி வருவான். அவர்கள் பெற்றதில் பாதியைப் பங்குபோட்டு வாங்கிக் கொள்வான்.

அரசாங்க உத்தியோகத்தில் சம்பாதிப்பது போதாதென்று இந்த 'இடைத்தரகு வேலை செய்து, அதில் அமோகமாகக் கொள்ளையடித்து வந்தான்.

இவனைப்பற்றி நாரதரிடம் ஒரு அபலைப் பெண் அழுதுகொண்டே புகார் சொன்னாள். "விதிவசத்தால் என் கணவர் முடமாகி விட்டார். கல்யாணத்திற்குப் பெண் காத்துக்கொண்டிருக்கிறாள், மன்னனிடம் தானம் வாங்கினேன். பொருளோடு ஒரு பசுவும் தானமாகக் கொடுத்தார் மன்னர். இப்போது வந்து போன இந்தப் பாவிதான் மன்னனிடம் கூட்டிப்போனான். தானத்தில் பாதியைப் பிடிங்கிக் கொண்டு விட்டான். பசுவையும் பாதி கொடு என்கிறான். பசுவை எப்படித் தருவது? விற்றுப் பாதி தரலாம் என்றாலோ, பசுவிற்கு விலை நிர்ணயம் செய்வதும், விற்பதும் நமக்குப் பாவமல்லவோ?" என்று இதயம் துடிக்க அழுதாள்.

நாரதர் சிவபெருமானிடம், "சர்வேஸ்வரா, இப்படிப்பட்டவனுக்குத் தாங்கள் அருள் செய்யலாமா?" என்று கேட்டார்.

"நாரதா! அவனது பூஜாபலனை இதுவரை தந்தேன். பாவத்தின் பலன் என்பது தனி. நல்லகாலம் இருக்கிறது என்பதற்காகப் பாவம் செய்தால், தக்க காலம் வரும்போது அதன் பலனை அனுபவித்தே ஆகவேண்டும். இப்போது இவனுக்குத் தக்க தீர்ப்பை நீயே வழங்கு," என்றார்.

நாரதர் அவனை அரக்கனாகும்படி சபித்தார்.

அவனே ஸ்ரீராமரால் கொல்லப்பட்ட விராதன் என்ற அரக்கன். அடுத்தவர் பங்கைப்பிடுங்கி உண்பவனே அரக்கன் என்று உணர்த்துகிறது இந்து மதம்.

பிரகலாதன்-கண்டி.

## ஆன்மீகம்

# பயன்படுத்தக்கூடிய நாமம்

"என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் நான் செய்வேன்"- யோவான் 14:14.

எவ்வளவு பரந்தகன்ற வாக்குறுதி என்று பாருங்கள்!" "எதைக் கேட்டாலும்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது பெரிதோ, சிறிதோ- ஆனால் என் தேவைகள் எல்லாம் நிறைவு செய்யப்படும் என்பதைக் குறிக்கிறது. என் ஆன்மாவே, கிருபாசனத் தண்டையில் தன்னுரிமையுடன் வந்து அண்டவர் "உன் வாயை விரிவாய்த் திற நான் அதை நிரப்புவேன்" என்று சொல்வதைக்கேள்.

இது எவ்வளவு ஞானமான வாக்குறுதியாகும்! நாம் எப்போதும் இயேசுவின் நாமத்தில் வேண்டிக் கொள்ள வேண்டும். இது நமக்கு ஊக்கமும் அளிக்கிறது; அவரையும் மகிமைப்படுத்துகிறது.... இது நிலையான வேண்டுதலாகும். சில வேளைகளில் மற்ற வேண்டுதல்கள், முக்கியமாகக் கடவுளுக்கும் நமக்கும் மட்டுமே உள்ள தொடர்பைச் சார்ந்தவை. அல்லது அவர் கிருபையைக் குறித்த நம் அனுபவத்தைச் சார்ந்தவை. இயேசுவின் நாமம் அதன் மூலமாய் முழு நம்பிக்கையுடன் வேண்டிக் கொள்ளலாம்.

இது எவ்வளவு அறிவுறுத்தும் வேண்டுதலாகும்.

கிறிஸ்துவின் கரமும் முத்திரையும் வைக்கப்படாத எந்த ஜெபத்தையும் நான் எறெடுக்க முடியாது. தன்னயமானது தன்னிச்சையானதுமான எந்த வேண்டுதலுக்கும் நான் என் ஆண்டவரின் நாமத்தைப் பயன்படுத்தத் துணிவு கொள்ள முடியாது. ஆண்டவர் என் நிலையிலிருந்தால் ஏறெடுக்கும் வேண்டுதல்களைப் போன்றவற்றிற்கே அவர் நாமத்தைப் பயன்படுத்த வேண்டும். இயேசுவே வேண்டிக்கொள்வது போல் நாம் இயேசுவின் நாமத்தில் வேண்டிக் கொள்ள அதிகாரம் பெற்றிருப்பது பெரிய சிலாக்கியமாகும். ஆனால் நமக்கு அவர் மேல் உள்ள அன்பினால் அவர் உபயோகிக்காத விதத்தில் அவர் நாமத்தை உபயோகிக்க நாம் முற்பட மாட்டோம்.

இயேசு ஒப்புக் கொள்ளக் கூடியவற்றை நான் கேட்கிறேனா? என் ஜெபத்திற்கு அவர் முத்திரையைப் பயன்படுத்த எனக்குத் துணிவுண்டா? அப்படியானால் பிதாவிடம் நான் வேண்டிக் கொள்கிறதைப் பெற்றுக்கொள்வேன்.

குணபிரபா
வெள்ளவத்தை.

# இறைநேசர் "அவ்லியா" மகிமைகள்

"இறைநேசச் செல்வர்களான அவ்லியாக்களுக்கு எத்தகைய பயமும் இல்லை. அவர்கள் கவலைப்படவும் மாட்டார்கள்." என இறைமறை அல்குர்ஆன் இயம்புகின்றது.

தீர்க்கதரிசிகளான நபிமார்களில் இறுதி நபியான எம் பெருமானார் (ஸல்) அவர்களின் மறைவுக்குப் பின்னர் இப்பூமியானது கதறியழுதது. இறைவா! நற்குணசீலர்களான மறைதூதர்களில் எவரும் இனிமேல் என்மீது நடமாடமாட்டார்கள். ஒருவரை ஒருவர் கொன்று இரத்தம் ஓட்டும் மானிடர்கள்தான் இங்கே மிஞ்சுவார்கள்.

இவ்வாறு பூமி பிரலாபித்தது. அதற்கு ஏக இறைவன் பின்வருமாறு விடை பகர்ந்தான். "ஏ! பூமியே- தீர்க்கதரிசிகளான நபிமார்களின் வருகை நின்று விட்டாலும், அத்தகைய புனிதர்களின் இதயமுள்ள (அவ்லியா) இறைநேசர்கள் உன்மீது உலவுவார்கள்." இது கேட்ட பார்நிலமானது விசனம் நீங்கி ஆறுதல் அடைந்தது. (ஹதீஸ்குத்ஸி)

ஏ-மனிதா! அழிந்து போகும் இவ்வுலகின்மீது பற்றுக்கொண்டு கீழ்த்தரமான மனோ இச்சைகளில் மூழ்கிக்கிடக்கும் உன்னால் புனிதமகான்களான இறை நேசர்களை எடை போடமுடியாது. (நுஸ்ஹத்)

அவ்லியாக்கள்- ஆரிபீன்களை கண்ணியக்குறைவாகக் கருதும் ஒரு முஸ்லிம் தனது இறுதி வேளையில் ஈமான் (இறைவிசுவாசம்) இழந்து மரிக்கும் துரதிஷ்டநிலையைப் பயந்து கொள்ளட்டும்- (மகான் ஸஅதி (ரஹ்)

திஹாரிய-ஹாரித்.

## ஸ்போர்ட்ஸ்

### துப்பாக்கி சுடும் போட்டி தங்கம் இந்தியாவுக்கு!

சர்வதேச துப்பாக்கி சுடும் போட்டியில் இந்தியாவுக்குத் தங்கப்பதக்கம் கிடைத்திருக்கிறது.

வடகொரியாவில் பயோங்யாகங் நகரில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்ட இந்திய அணி தங்கப் பதக்கத்தைத் தட்டிக் கொண்டது.

### உலக உதைபந்தாட்டப் போட்டி



1994ல் அமெரிக்காவில் நடைபெறவிருக்கும் உலக உதைபந்தாட்ட சாம்பியன் போட்டிக்கான இறுதிச் சுற்றில் மோதுவதற்கு தென்கொரியாவும் சவுதி அரேபியாவும் தகுதி பெற்றுள்ளன.

# போலியான யுத்தம்!




ஜப்பான் நாட்டின் தேசிய விளையாட்டான சுமோ மல்யுத்தத்துக்கு இப்போது உலகெங்குமுள்ள நாடுகளிலும் கிராக்கி ஏற்பட்டுள்ளது.

சுமோ மல்யுத்த வீரர்கள் இளமையிலிருந்தே தங்கள் உடம்பை மாமிச மலையாக வளர்த்து வருவார்கள்.

படத்தில் நீங்கள் பார்க்கும் சுமோ மல்யுத்தம் அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் இடம் பெற்ற மாநில கண்காட்சியின் அரங்கில் நடைபெற்ற 'சுமோ மல்யுத்தம்' தான்.

ஆனால் இதில் பங்கேற்ற இரு வீரர்களும் ஜப்பான் மாமிச மலைகளல்ல. காற்று புகுத்தப்பட்டு, பலூன் போல் ஊதிய பருத்த உடைகளை, அமெரிக்காவைச் சேர்ந்த இருவர் அணிந்து கொண்டு சுமோ வீரர்கள் போல் மல்யுத்தம் புரிகின்றனர். காற்றுப் புகுத்தப்பட்ட உடையென்பதால், பந்துபோல் மேலே பாய்ந்து விழுவது சுலபமாக இருக்கிறது. கீழே விழுந்து கிடக்கும் வீரரை மேலே பாய்ந்து விழுந்து மற்ற வீரர் இவ்வாறு தாக்குகிறார். இக்காட்சியைக் காணச் செல்வோர் 5 டொலர் நுழைவுக் கட்டணம் செலுத்த வேண்டுமாம்.

# முத்தையா முரளிதரன் முதலிடத்தில்! இது ஓவ் ஸ்பின்னர்கள் காலம்!!



வேகப்பந்து வீச்சுக்கு ஓஹோ வென்ற மதிப்பிருந்த போது அனில் கும்ளே, ஷேன் வோன் போன்றவர்களின் வருகையால் லெக்-ஸ்பின் தலையெடுத்து ஆட்சி செய்யத் துவங்கியது. ஆனால் இப்போது ஓவ்-ஸ்பின் காலம் என்று சொல்லுமளவிற்கு இலங்கையின் முத்தையா முரளிதரன், அவுஸ்திரேலியாவின் ரிம் மே, இங்கிலாந்தின் பீற்றர் சச், நியூசிலாந்தின் தீபக் பட்டேல், இந்தியாவின் ராஜேஷ் சௌகான் போன்றவர்களின் வருகை உணர்த்தி விட்டது.

ஓவ்-ஸ்பின்னர்கள் வேண்டவே வேண்டாம் என்று சுழற்பந்தை பிரதான ஆயுதமாக நம்பும் இந்தியா கூட ஒருசில சீசனில் ஒதுக்கித்தள்ளிய அவலநிலைக்கு சென்றுவிட்ட ஓவ்-ஸ்பின் இப்போது மீண்டும் சர்வதேச கிரிக்கட் அரங்கில் ஒரு சுற்று வலம் வருவதற்கு முக்கிய காரணம், மாறிவரும் கிரிக்கெட் அணுகுமுறைதான் என்றால் அது மிகையில்லை.

முத்தையா முரளிதரனின் பந்து சுழற்சி முறையைக் கண்ட இங்கிலாந்து வீரர்கள் நம்பமுடியாத குழப்பத்திற்குக் கொண்டு செல்லப்பட்டனர். இங்கிலாந்தின் சிறந்த சுழற்பந்து வீச்சாளரான ஜோன் எம்பியூரியைக் காட்டிலும் இருமடங்கு பந்தைத் திரும்பச் செய்ய முரளிதரனால் முடிகிறது என்றால் இங்கிலாந்து வீரர்கள் மூக்கின்மேல் விரலை வைக்காமல் என்ன செய்வார்கள்!

முரளிதரனின் இந்த வித்தைக்கான காரணத்தைக் கண்டறியாத இங்கிலாந்து அணி முரளிதரனின் பந்து வீச்சையே ஏமாற்று என்று முத்திரையைக் குத்தித் தப்பிக்கொண்டது.

ஆனால் இங்கிலாந்தின் சுற்றுப் பயணத்தைத் தொடர்ந்து இலங்கையில் சுற்றுப்பயணம் செய்த இந்திய அணி முரளிதரனின் பந்துவீச்சில் குற்றம் காணவில்லை. சுழற்பந்து வீச்சு என்பது ஒரு வரப்பிரசாதம், எவ்வளவு முயன்றாலும் ஓரளவுதான் முயற்சிக்குப் பலன்தரும் என்பதை அனுபவபூர்வமாக இந்தியா உணர்ந்திருந்தது, இதற்கு முக்கிய காரணமாக இருக்கலாம்.

இந்திய அணியின் இலங்கைச் சுற்றுப்பயணத்தில் இந்திய மட்டை வீரர்களை அதிகம் கவலைகொள்ளச் செய்த ஒரே பந்துவீச்சாளர் முரளிதரன் என்றால் அது மிகையில்லை.

தனது முதல் டெஸ்டில் மிகச் சிறந்த ஸ்ரோக் பிளேயரான அசாருதீனுக்கு ஓவ்- ஸ்ரம்ப் லைனில் பந்து வீசுகிறார் முரளிதரன். பொயின்ட் திசையில் பீல்டர்கள் இல்லை. பந்து வீசுபவரும் ஒரு சுழற்பந்து வீச்சாளர். அதுவும் ஓவ்-ஸ்பின்னர். அஸாருதீன் போன்றவர்களுக்கு சொல்லியாதர வேண்டும். அஸாருதீன் அதைக் கட் செய்யவே முயற்சிக்கிறார். பந்து மட்டையில்படவில்லை. ஒரு முறையல்ல, தொடர்ந்து மூன்று முறை. இப்படி அசாருதீன் முயன்று தோல்வியடைகிறார் என்றால் முரளிதரனின் பந்து திரும்பும் வித்தைக்கு வேறு சான்றுகளா வேண்டும்.

முரளிதரனின் திறமைக்கு இங்கிலாந்து அணியைப் போல இந்திய அணியின் விக்கட்டுக்களும் பரிசுகளாகக் கிடைத்தன. தொடர்ந்து தென்னாபிரிக்கா அணிக்கு எதிரான தொடரிலும் இரண்டு முறை 5 விக்கட்டுக்களை வீழ்த்தி முரளிதரன் தனது திறமை நீண்ட ஆயுசுடன் நிலைத்து நிற்கக் கூடியது என்று மறைமுக எச்சரிக்கை விடுத்துள்ளார்.


முரளிதரனுக்கு அடுத்து முக்கியத்துவம் பெறுபவர், மறுபிரவேசம் செய்துள்ள அவுஸ்திரேலியாவின் ரிம்மே. அவுஸ்திரேலிய அணியின் சமீபத்திய இங்கிலாந்து சுற்றுப்பயணத்தின்போது ஏறத்தாழ லெக்-ஸ்பின்னர் ஷேன் வோனுக்கு நிகராகப் பந்துவீசி 21 விக்கட்டக்களையும் வீழ்த்தி இங்கிலாந்து மண்ணில் அதிக விக்கட்டுக்களை வீழ்த்திய ஓவ்-ஸ்பின்னர் என்று நீண்ட நாட்கள் நினைவு கூர வைத்துள்ளார்.

அடுத்து நியூசிலாந்தின் தீபக் பட்டேல் 1992 உலகக் கோப்பை கிரிக்கெட்டிற்கு முன்பு இங்கிலாந்தில் தஞ்சமடைந்து இங்கிலாந்து அணியில் இடம் பிடிக்கத் தவமிருந்த பட்டேல் நியூசிலாந்து அணியில் இடம்பிடித்து 1992 உலகக் கோப்பைப் போட்டியில் புதுப்பந்தை வேகப்பந்து வீச்சாளர்களுக்கு இணையாக எதிர்முனையிலிருந்து வீசி மட்டை வீரர்களைத் திணறடித்ததை இன்னும் யாரும் மறந்திருக்க முடியாது.

# டென்னிஸ் உலக ராணிகள்

உலகப் பெண்கள் புரபஷனல் டென்னிஸ் ஆட்டக்காரர்களின் ராங்க் பட்டியலை பெண்கள் டென்னிஸ் சங்கம் கடந்த மாதம் வெளியிட்டது. இதில் முதல் 25 ஸ்தானங்களைப் பிடித்துள்ள வீராங்களைகள், அவர்களது நாடு, மற்றும் அவர்கள் பெற்றுள்ள புள்ளிகளுடன் விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| ஸ்தானம் | பெயர் | நாடு | புள்ளிகள் |
|---|---|---|---|
| 1. | ஸ்டெபி கிராப் | ஜெர்மனி | 386.0486 |
| 2. | மார்ட்டினா நவரத்திலோவா | அமெரிக்கா | 233.0621 |
| 3. | அரன்சா சான்செஸ் | ஸ்பெயின் | 231.3172 |
| 4. | மோனிகா செலஸ் | யுகோஸ்லாவியா | 189.1061 |
| 5. | கான்சிடா மார்டினஸ் | ஸ்பெயின் | 167.4043 |
| 6. | காபிரியலா சபாடினி | ஆர்ஜென்ரீனா | 152.6920 |
| 7. | மேரிஜோ பெனான்டஸ் | அமெரிக்கா | 149.7409 |
| 8. | ஜனாநோ வோத்னா | செக். | 136.8574 |
| 9. | ஜெனிபர் காபிரியாட்ரி | அமெரிக்கா | 123.6746 |
| 10. | அன்கேஹுயுபர் | ஜெர்மனி | 105.8235 |
| 11. | மானுவலா மலீவா- பிராக்னிரே | சுவிஸ் | 104.4915 |
| 12. | ஹெலனாசுகோவா | செக். | 100.4435 |
| 13. | கிமிகோடட் | ஜப்பான் | 89.2917 |
| 14. | மக்தலீனா மலீவா | பல்கேரியா | 81.7188 |
| 15. | அமன்டா கோய்ட்சர் | தென்னாபிரிக்கா | 78.0250 |
| 16. | மேரி பியர்சி | பிரான்ஸ் | 71.0000 |
| 17. | நத்தாலி டாயுஜியத் | பிரான்ஸ் | 67.6762 |
| 18. | ஜினா காரிசன் | அமெரிக்கா | 61.7913 |
| 19. | ஜூடித் வெய்ஸ்னர் | ஒஸ்ரியா | 60.8529 |
| 20. | நாடாலியா ஜவெரிவா | பெலாருஸ் | 59.9737 |
| 21. | சபைன் ஹொக் | ஜெர்மனி | 58.5333 |
| 22. | லிண்சேடாவன் போர்ட் | அமெரிக்கா | 58.5200 |
| 23. | கத்தரீனா மலீவா | பல்கேரியா | 54.1358 |
| 24. | லோரி மக்னில் | அமெரிக்கா | 51.4679 |
| 25. | நயோகோ சபாமட்சூ | ஜப்பான் | 49.8929 |



www.padippakam.com

தரம் குறையாத தங்க-வைர நகைகள்
ஏழிலாட்டும் எடுப்பான தயாரிப்புக்கள்.
குறித்த நேரத்தில் ஓடரை முடித்துத் தருவதே
எங்கள் தனிச்சிறப்பு.

அருள்
ஜுவலர்ஸ்
இல. 3, செட்டியார் தெரு
கொழும்பு—11.
தொ.பேசி: 436331



# ஆடவும் வேண்டாம் அந்தப் பாவை பாடவும் வேண்டாம்!

பிரபல பொப் பாடகி மடோனா, உலக வலம் வந்து கொண்டிருக்கும் அந்தக் கவர்ச்சிப் புயலுக்கு தாய்லாந்தில் தடை.

மடோனா வருகிறார் என்றவுடன் தாய்லாந்தின் இசை ரசிகர்களுக்கு ஏக குஷி. விளம்பரங்கள் தூள் பரத்தின. மடோனா பல விதமான சிறுக்களைக்கும் போல் கொடுத்து ஒரு கலக்கு கலக்கவிருந்தார்.

தாய்லாந்து சமய, கலாசார உறவுகளுக்கான பாராளுமன்றக் குழு விழித்துக்கொண்டது.

மடோனா மேடையில் ஆடினால் உணர்ச்சிகள் தூண்டும். அது கலாச்சாரத்திற்கு ஊறு விளைவிக்கும். ஆகவே கவர்ச்சி மங்கை மடோனா ஆடக்கூடாது என்று அரசை வற்புறுத்தியிருக்கிறது.

அப்படியானால் சரி. மடோனா ஆடவேண்டாம். பாடலாமா?

"ஐயோ, வேண்டாம். பாடும்போதுதானே பருவ உணர்வுகளை தூண்டிவிடும் அசைவுகளை அள்ளிவிடுகிறார் அந்தப் பாவை. எனவே ஆடவும் வேண்டாம். பாடவும் வேண்டாம்." என்று சொல்கிறது பாராளுமன்றக்குழு.

கண்டியில்
இன்றைய நவநாகரிக உலகின்
இரசனைக்கு ஏற்ற நவீன
டிசைன்களில் அசல் 22 கரட் தங்க ஆபரணங்களை
நியாயமான விலைகளில் பெற்றுக்கொள்ள
இன்றே நாடுங்கள்
இரத்ன மாளிகை
RATHNA MALIGAI
JEWELLERS & PAWN BROKERS
NO. 48&50, D.S. SENANAYAKE VEEDIYA
KANDY.



# வயதான போதும் வாடாத தலைவன்!

கியூபாவின் புரட்சித் தலைவர் அந்த நாட்டின் அதிபர் பிடல்காஸ்ட்ரோ.

உலக கம்யூனிசத்தின் வீழ்ச்சி அவரை அசைக்கவில்லை. அமெரிக்காவோடு முன்புபோல நேரடியான மோதல் இல்லாமல் போனாலும் அமெரிக்கா காத்திருக்கிறது. தனது காலடியில் இருக்கும் நாடான கியூபாவில் காஸ்ட்ரோவிற்கு பின்னராவது கம்யூனிசம் சரியும் என்று நம்புகிறது.

காஸ்ட்ரோவுக்கு பெண்களைப் பிடிக்கும் என்கின்றன அமெரிக்க சஞ்சிகைகள். வயதானபோதும் புரட்சிகர கம்பீரம் குலையாத காஸ்ட்ரோவை கியூபாவின் மக்களுக்கு பிடித்திருக்கிறது. அதுவே காஸ்ட்ரோவின் பலம்.

காஸ்ட்ரோவின் நீண்ட நண்பர் சேகுவேரா. அவர் பிரிந்துபோய் பொலிவியாவில் புரட்சி நடத்த முயன்று கொல்லப்பட்டார்.

சேகுவேராவும் இன்று இருந்திருந்தால் காஸ்ட்ரோவை அசைக்க [illegible] எவரும் நெருங்கியிருக்க முடியாது. சே பிரிந்தது காஸ்ட்ரோவுக்கு மட்டுமல்ல, கியூபாவுக்கும் இழப்பு. தனித்து நிற்கும் இந்த வேளையில் காஸ்ட்ரோ தன் இனிய தோழனை இப்போது நினைத்துப் பார்க்கக்கூடும்.

# உயிருள்ள ஓவியங்கள்



உயிருள்ள ஓவியங்களை கால வெள்ளம் கடந்திச் செல்ல முடியாது. ஸ்பெயின் நாடு உலகப் புகழ் ஓவியர்களை இந்த பூமிக்கு அறிமுகப் படுத்தியது. அவர்களில் ஒருவர் ஃபிரான்சிஸ் கோடி ஸர்பரான். அவரது காலம் ஓவியக் கலையின் பொற்காலம். அவரால் உருவாக்கப்பட்ட ஓவியங்கள் இன்றும் உயிருள்ளவை போன்று தோற்றமளிக்கின்றன. உலகின் பல நகரங்களில் இன்றும் அவரது ஓவியங்கள் வலம் வந்து கொண்டிருக்கின்றன. அவர் ரோமன் கத்தோலிக்க மதத்தை சேர்ந்தவர். அவரது ஓவியங்களும் அதனைப் பிரதிபலிக்கின்றன.



## கண்ணீரிலே நீர் எதற்கு?

கண்ணீரின் காரணம்
கனவுகள்
தொலைந்ததாலா?
இல்லை!
காதல்களின் மத்தியில்
சுதந்திர அக்னி
கண்ணீரின் யாகத்தை
உற்பத்திகிறது...!

# தூங்கும் அழகி நாடக மேடையில்!



தூங்கும் புலியைத் தட்டி எழுப்பினால் ஆபத்துதான். தூங்கும் அழகியைத் தட்டி எழுப்பினால்? அது என்னாகுமோ தெரியாது. இப்போது நாடகமாகியிருக்கிறது. அதாகப்பட்டது. ஆங்கில இலக்கியத்தில் உள்ள தூங்கும் அழகி என்ற பழம்பெரும் கதையை நாடகமாக்கி மேடையேற்றியுள்ளார்கள். அமெரிக்க நாடக அரங்குகளில் தூங்கும் அழகி மேடையேறிக் கொண்டிருக்கிறாள். பாலே நடன யுக்தியோடு அரங்கேறும் நாடகம் காண்பவர்களை சொக்கவைக்கிறது. இளமையும் அழகும் பொருந்திய நாயகி மார்கெத் ஃபொன்ரீன் என்பவர் மேடையில் தோன்றினால் போதும். ரசிகர்கள் அசந்துபோகிறார்கள். வயது வேறுபாடு கிடையாது.







நாடகத்தின் இடையே அழகு மங்கையரின் நடனக் காட்சியையும் இணைத்திருக்கிறார்கள். கலையுயம் கொண்ட களி நடனம், அமெரிக்காவே மெச்சுகிறது.

நாடகத்தின்மூலம் பெருந்தொகையான வருவாய் வருகிறது. அதனைவிட முக்கியம் பழங்கால இலக்கியக்கதை நாடக வடிவம் பெற்று பலத்த வரவேற்பைப் பெற்றிருப்பது. தொழில்நுட்ப உத்திகளும், புதிய அணுகு முறைகளும் நாடகத்தின் வெற்றிக்குக் காரணம். பழமையில் கலந்த புதுமை.



[illegible]